சுவடி : 45
ஏடு : 04
திசம்பர் - 2020

✶

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

✶

ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா. பச்சமலை**
**வாலாசா வல்லவன்**
**சா. குப்பன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி. துரைசித்தார்த்தன்**
முனைவர் முத்தமிழ்

✶

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**
**'சிந்தனையாளன்'**
**பெரியார் ஈ.வெ.ரா - நாகம்மை அறக்கட்டளை வளாகம்**
மனை எண் 277 / 2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை
அம்பத்தூர், சென்னை - 600050.

✶

கைப்பேசி
**94448 04980**
**86681 09047**
**95975 26990**

மின்னஞ்சல்
sinthanaiyalantamilmonthly@gmail.com

✶

இதழ் வடிவமைப்பு
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179

✶


இணையத்தில் படிக்க
**www.keetru.com**

**SINTHANAIYALAN**
**DECEMBER - 2020**




# ஏழு தமிழர் விடுதலையில் ஆளுநரின் போக்கு அடாதது!

## தமிழ்நாட்டு அரசே! இன்னொரு தீர்மானம் இயற்றி எழுவரையும் உடனடியாக விடுதலை செய்!



**1991 மே 21** அன்று இரவு 10.20 மணிக்கு, தேர்தல் பரப்புரைக்காக சென்னை வந்த முன்னாள் பிரதமர் இராசீவ்காந்தி, ஸ்ரீபெரும்புதூரில் மனித வெடிகுண்டு மூலம் படுகொலை செய்யப்பட்டார். அதேநாள் காலை 8.10 மணிக்கே புறப்பட்டு கல்கத்தாவுக்கு இரயிலில் சென்று கொண்டிருந்த நான் மே 23, பிற்பகலில் கல்கத்தாவை அடைந்தேன்.

காவி வெறியால் காந்தியையே கொன்று இன்ப ஆரவாரம் செய்தவர்களான பார்ப்பனர்களும் மார்வாரிகளும் பாரதிய சனதாக் கட்சியினரும் மே 22 காலை முதலே இனிப்பும் பழமும் தேநீரும் இரயில் பயணிகளுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கி இராசீவ் கொலையை மகிழ்ச்சிபொங்கக் கொண்டாடினர். மே 23-இலும், அது தொடர்ந்தது. மாறாக, தமிழ்நாட்டிலோ, ஈழமக்கள் பல்லாயிரக் கணக்கில் இந்திய அமைதிப் படையால் இனப்படுகொலைக்கும் சொல்லொணாச் சீரழிவுக்கும் ஆளாயிருப்பினும் அதற்குக் காரணமான இராசீவ்காந்தியின் படு கொலையை ஏற்கவில்லை. ஏனெனில், 'பல்லுக்குப் பல்', 'கொலைக்குக் கொலை' என்பது தமிழர் அறம் அல்ல.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்புவரையில் மனுநீதி அடிப்படை யிலேயே குற்றத் தண்டனை வழங்கப்பட்டன. நால்வருணப் பிறவிச் சாதிச் சட்டம் அப்படியே நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒரு பார்ப்பனன் இன்னொரு மனிதனைக் கொன்றுவிட்டால், கொலைக்குற்றம் செய்தவனின் தலையை மொட்டையடித்து அவனை ஊரைவிட்டு வெளியேற்றிவிடவேண்டும்; ஆனால், வேறு வருணத்தான் ஒரு மனிதனைக் கொலை செய்துவிட்டால், கொலைகாரன் தலையை வெட்டிவிட வேண்டும் என்பது மனுநீதிச் சட்டம். இசுலாமியர் ஆட்சிக் காலத்தில் - கொலைக்குக் கொலை, திருட்டுக் குற்றவாளியின் கைகளையும் கால்களையும் வெட்டுவதுதான் தண்டனைமுறை. வங்காளத்தில் ஒரு திருட்டுக்குற்றத்துக்காக நிறைவேற்றப்பட்ட தண்டனையை நேரில் கண்ட வெள்ளைக்காரன், தங்கள் நாட்டுக் குற்றத்தண்டனை முறை அடிப்படையில் குற்றத் தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் இவற்றை எல்லா இந்தியருக்கும் ஒரேமாதிரியானதாக 1860-இல் இயற்றினான்.

நாடு விடுதலைபெற்றதாகச் சொல்லப்பட்ட பிறகு இந்திய ஒன்றியத்தின் ஆட்சித் திருடர்கள் இங்கு எல்லா மக்களுக்கும் அடிப்படைக் கல்வியைக் கொடுக்கவில்லை; 12ஆம் வகுப்புப் படித்தவர்களுக்குச் சட்ட அடிப்படைகளைச் சொல்லித்தரவில்லை. இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, பட்டம் பெற்றவர்களுக்கோ அடிப்படைச் சட்ட அறிவு தரப்படவில்லை.

அதன்விளைவாக, இந்தியாவிலுள்ள 21 உயர்நீதிமன்றங்களிலும், தில்லி உச்ச நீதிமன்றத்திலும், இந்தியாவை உண்மையாக ஆண்டுகொண்டிருக்கிற அதிகாரம் பெற்ற அரசு நிருவாகப் பணிகளிலும், இன்றும் 100-க்கு 85 பேர் பார்ப்பனர்களும், இந்து மேல்சாதிக்காரர்களும், பெருநில உடைமைக்காரர்களுமே இருக்கிறார்கள். எனவே, "பார்ப்பான் பண்ணையம் கேட்பார் இல்லை" என்பது 2020-இலும் உண்மையாக இருக்கிறது.

அதனால்தான் முன்னாள் பிரதமர் இராசீவ்காந்தி கொலையில் குற்றஞ்சாற்றப் பெற்றவர்களில், தடா சிறப்பு நீதிமன்றமே விசாரிக்கத் தகுதியற்ற ஒரு வழக்கில், இந்தக் கொலையின் பின்னணி பற்றி புலன்விசாரணை செய்ய அமைக்கப்பட்ட ஜெயின் கமிஷனின் விசாரணையே நாளது வரை முற்றுப்பெறாத நிலையில், சந்திரசேகர் - சுப்பிரமணியசாமி - சந்திராசாமி முத்தரப்புக் கூட்டுச்சதி இன்னும் விசாரணையே செய்யப் படாத நிலையில், குற்றத்திற்கான காரணமோ, நேரடிக்குற்றவாளியோ கண்டுபிடிக்கப்படாத நிலையில், 'கூட்டுமனச்சாட்சி' என்று தீர்ப்பளிக் கப்பட்டு தண்டனைபெற்ற 26 பேர் களில் நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டவர்கள் போக எஞ்சிய ஏழு தமிழரும் இரண்டு ஆயுள் தண்டனைக் காலங் களுக்கும் மேலாக 29 ஆண்டுகளாகச் சிறைக் கொட்டடி களின் கதவுகள் எப்போது திறக்கப்படும் எனக் காத்துக் கிடப்பது கொடுமையிலும் கொடுமை.



கால்நூற்றாண்டு சட்டப்போராட்டங்களாலும், வளரிளம் பருவத்தில் தன்னையே பொசுக்கிக்கொண்ட வீரமங்கை செங்கொடி மூட்டிய தீயால் வெடித்த தமிழ்நாட்டு மக்களின் எழுச்சிப் போராட்டங்களாலும் மூவரின் தூக்கு 18.02.2014-இல் உச்சநீதிமன்றத்தால் இரத்துச் செய்யப்பட்டிருந்த நிலை யில், அன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர் செயலலிதா, 19.02.2014-இல் சட்டமன்றத்தில், "பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, இராபர்ட் பயசு, இரவிச்சந்திரன், செயக் குமார் எழுவரும் 23 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனு பவித்துவிட்டதால், அவர்களை விடுதலை செய்வது என்று தமிழக அமைச்சரவை தீர்மானித்துள்ளது" என அறிவித்தார்.

தமிழகஅரசின் அம்முடிவை எதிர்த்து, 20.02.2014 அன்றே மன்மோகன்சிங் அரசு வழக்குத்தொடுத்து, தடை ஆணை பெற்றுவிட்டது. 2016-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற பாசக-வும், வழக்கு விசாரணைக்கு வந்தபோது, சிபிஐ விசாரித்த வழக்கில், மாநில அரசு தன்னிச்சையாக குற்றவாளிகளை விடுவிக்க முடியாது; குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 432 முதல் 435 வரையிலான பிரிவுகளின்படி தண்டனைக் குறைப்பு முடிவெடுக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உண்டு என்று கூறி எதிர்ப்பு தெரிவித்தது.

ஆனால், 08.01.2016-இல் தகவலறியும் உரிமைச் சட்டப் படி பேரறிவாளன் வினவிய கேள்விகளுக்கு விடையிறுத்த இந்திய உள்துறை அமைச்சகம், "குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 432-435 பிரிவுகளின் கீழ் தண்டனைக் குறைப்பு செய்வது குறித்து ஒன்றிய அரசு இதுவரை எந்த விதி களையும் வகுக்கவில்லை" என்று கூறியுள்ளது.

தண்டனைக் குறைப்பு குறித்த விதிகளில் மாநில அரசுக்கும் - ஒன்றிய அரசுக்கும் உள்ள உறவு பற்றி எந்த விளக்கமும் வகுக்கப்படாத நிலையில், ஒன்றிய அரசு தனக்கே அதிகாரம் எனக் கூறி தமிழ்நாட்டு அரசு சட்டப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய தண்டனைக்குறைப்புப் பரிந்துரையை நிராகரித்தது மக்களாட்சி முறைக்கே எதிரானது. இது இந்திய ஒன்றியத்தில் காங்கிரசு அரசானாலும், பாசக அரசா னாலும் தமிழர்களுக்கு எதிரான போக்கையே தொடர்ந்து கடைப் பிடிக்கின்றன என்பதற்கும், இன்றைய பார்ப்பனியப் பாசக அரசின் நய வஞ்சகமான மனுநீதி ஆட்சிக்கும் வெள்ளிடை மலையான சான்றாகும்.

இந்நிலையில், மீண்டும் பல்வேறு சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு, "அரசமைப்புச்சட்டத்தின் 161-ஆவது பிரிவின்படி, தமிழ்நாட்டு அரசு தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி எழுவர் விடுதலை தொடர்பாக அமைச்சரவை யைக் கூட்டி முடிவெடுத்து விடுதலை செய்யலாம்" என்று 06.09.2018-இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனடிப்படையில் 09.09.2018-இல் தமிழ்நாட்டு அமைச்சரவை கூடி முடிவெடுத்து ஏழு பேரையும் உடனடி யாக விடுதலை செய்வதற்கான தீர்மானத்தை இயற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி இரண்டாண்டுகளைக் கடந்துவிட்டது. தமிழ்நாட்டு அரசு சார்பில் மடல் வழி யாகவும் நேரிலும் பலமுறை நினைவூட்டிய பிறகும் ஆளுநர், "அமைச்சரவையின் பரிந்துரை ஆய்வில் உள்ளது" என்று பதில் எழுதிவிட்டு கல்லுப்போல் அமைதி காப்பது என்பது தமிழ்நாட்டு மக்களையும் தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தையும் அவமதிப்புச் செய்வதாகும்.

**ஒரு மாநிலத்தின் ஆளுநர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால், சட்டமன்றத்தில், அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் செயல்பட வேண்டுமேயொழிய, இடஒதுக்கீடு, எழுவர் விடுதலை உள்ளிட்ட எல்லா நடவடிக்கைகளிலும் தன்னிச்சையாக முடிவெடுப்பதும், திட்டமிட்ட காலத்தாழ்வு ஏற்படுத்துவதுமான தமிழ்நாட்டு ஆளுநரின் போக்கு அடாதது.**

**தமிழ்நாட்டு அரசும் மக்களும் அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் எந்த வேறுபாடுமின்றி ஒரே குரலில் கிளர்ந் தெழுந்து "தமிழ்நாட்டு அரசின் சட்டமன்ற முடிவை மதியாத ஆளுநரை திரும்பப்பெறு" எனக் கோரிப் போராடவேண்டும்.**

**தமிழ்நாட்டு அரசும் இந்திய ஒன்றிய அரசிடம் இதே கோரிக்கையை வலியுறுத்துவதோடு, ஆளுநரின் இந்த அடாவடிப் போக்கை முறியடிக்கும் முகத்தான் ஏழு தமிழர் விடுதலை தொடர்பாக மீண்டும் ஒரு தீர்மானம் இயற்றி ஆளுநருக்குத் தெரிவித்துவிட்டு 29 ஆண்டுகளாக சிறைக் கொட்டடியில் வதையும் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு தமிழர் களையும் உடனடியாக விடுதலை செய்து தமிழ்நாட்டு அரசின் - சட்டமன்றத்தின் மாண்பைக் காக்கவேண்டும்.**

30.11.2020

**வே. ஆனைமுத்து**

# பெரம்பலூர் மாவட்ட, பெரியாரின் கொள்கைக் குன்றம் வரகூர் மா. நாராயணசாமி புகழ் ஓங்குக!



வரகூர், பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்தி லுள்ள ஒரு சிற்றூர். அவ்வூரில் மாரிமுத்து செல்லம்மாள் இணையருக்கு 30.11.1929-இல் ஆறாவது குழந்தையாகப் பிறந்தவர்தான் வரகூர் மா. நாராயணசாமி. 5ஆம் வகுப்பு வரையிலான தொடக்கக் கல்வி மட்டுமே பயின்ற அவர் மிகச்சிறந்த சிந்தனையாளர். தன் மாமா இலந்தங்குழி க. தங்க வேலுவின் வழியில் பழுத்த சைவப்பழமாக விளங்கிய அவர், 11.01.1948-இல் அரியலூர், பெருமாள் கோயில் தெரு வில் பி.ஆர்.சின்னசாமி தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்திற்கு ஆ.செ.தங்கவேலுவோடு சென்றிருந்தபோதுதான் பெரியார் ஈ.வெ.ரா-வை நேரில் கண்டார். அப்போதுதான் அவருடைய பேச்சையும் முதன் முதலாகக் கேட்டார். அய்யாவின் ஆணித்தரமான ஆதாரங் களுடனான மூன்று மணிநேரப் பேச்சைக்கேட்ட அந் நாள் முதல் 23.11.2020-இல் மறையும் வரை எள்முனையளவும் நடுக்கமில்லாத தூய சுயமரியாதைக்காரராகவே வாழ்ந்தார்.

1948 சனவரியில் திராவிடர் கழகத்தில் ஈடுபட்ட அவர் தோழர் வே.ஆனைமுத்துவைச் சந்தித்தது, 02.04.1950-இல், குன்னத்தில் நடைபெற்ற பெரம்பலூர் வட்ட தி.க மாநாட்டில் தான். பெரியார் ஈ.வெ.ரா முன்னிலையில் முதன்முதலாக வே.ஆனைமுத்து உரையாற்றிய நிகழ்ச்சியும் அதுதான். ஆ.செ. தங்கவேலு, வரகூர் மா. நாராயணசாமி, அகரம் மு. அழகப்பன், அந்தூர் கி.இராமசாமி இப்படி எண்ணற்றோர் இணைந்து ஆசிரியர் ந. கணபதி ஏற்பாட்டில் புலால் விருந் தோடு சிறப்பாக நடாத்திய இம் மாநாட்டுக்குப் பிறகு பெரியார் அவர்கள் ஆசிரியர் கணபதி அவர்களை 'வாங்க குன்னம்' என்றே அழைப்பார். தோழர் வே.ஆனைமுத்து வின் பேச்சைக்கேட்ட மா.நாராயணசாமி அவர்கள் அன்று முதல் அவருடைய அணுக்கத் தோழரானார். 1962-க்குள் பெரம்பலூர் மாவட்டத்தைத் திராவிடர் கழகக் கோட்டை யாக மாற்றியதில் இம் மாநாட்டு ஏற்பாடுகளைச் செய்த அனைவருக்கும் மகத்தான பங்கு உண்டு.

1960-65; 1970-75; 1985-90 என மூன்று முறை வரகூரின் ஊராட்சித்தலைவராய் ஆகச்சிறந்த பணிகளையாற்றியவர்.

பெரியாரின் மறைவுக்குப் பிறகு, தோழர் வே.ஆனை முத்து தலைமையில் தொடங்கப்பட்ட பெரியார் சம உரிமைக் கழகத்தில் (மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சி) இணைத்துக்கொண்ட மா. நாராயணசாமி அவர்கள், பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து அரியலூர் மாவட்டம் பிரிக்கப்பட்ட 2007ஆம் ஆண்டு முதல் இறுதி வரை மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி யின் பெரம்பலூர் மாவட்டச் செயலாளராக இருந்து அளப் பரிய பணிகளைச் செய்தவர். ஆண்டுதோறும் நடைபெறும் பாவேந்தர் பாரதிதாசன், மாமேதை அம்பேத்கர், தந்தை பெரியார் ஆகியோரின் பிறந்தநாள் விழா கூட்டங்களைத் தவறாது 2017 வரை நடத்திவந்தவர்.

மா.பெ.பொ.க சார்பிலும், பெரியார் ஈ.வெ.ரா நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பிலும் நடைபெற்ற பயிலரங்குகளில் பள்ளி மாணவரைப்போல் பங்கேற்றுத் தம் கொள்கைக்கு உரம்சேர்த்தவர். பெரியார் ஈ.வெ.ரா நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை உருவாக்கத் திற்கும், சிந்தனையாளன் பொங்கல் மலருக்கும் மா.பெ.பொ.க தோழர்களிலேயே அதிகபட்சமான நிதியைத் திரட்டி யளித்த செயல்மறவர். 2019 பொங்கல் மலருக்கும் 90 அகவை கடந்து நோயுற்றுத் தளர்ச்சியடைந்திருந்த நிலை யிலும் ஒரு இலக்கம் ரூபாய்க்குமேல் நிதி திரட்டியளித்த பெருந்தகையாளர். தம் வாழ்நாளெல்லாம் பெரியாரின் கொள்கைப் பரப்புரைகளுக்காகவும், மக்கள் நலனுக்காக வும், தோழர் ஆனைமுத்துவின் கட்டளைகளுக்காகவும் பயணித்துக்கொண்டேயிருந்த, பெரம்பலூர் மாவட்ட, பெரியாரின் கொள்கைக் குன்றம் வரகூர் மா.நாராயணசாமி 23.11.2020-இல் தம் பயணத்தை நிறுத்திக்கொண்டார்.


**பெரியாரின் கொள்கைப் பயணத்தில் தோன்றாத் துணை யான தோழரை இழந்துவாடும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுமைக் கட்சியின் தோழர்களும், பெரியாரிய அன்பர் களும் அவர்வழி நின்று மார்க்சு - பெரியார் - அம்பேத்கர் கொள்கைகளை வென்றெடுக்கப் பாடுபடுவதே அவருக்கு நாம் செய்யும் வீர வணக்கம் ஆகும்.**

பெரம்பலூர் மாவட்ட, பெரியாரின் கொள்கைக் குன்றம் வரகூர் மா.நாராயணசாமி புகழ் ஓங்குக!

- முனைவர் **முத்தமிழ்**

## பிழைத் திருத்தம்

'சிந்தனையாளன்' இதழ் கரோனா பெருந்தொற்றுப் பொது முடக்கத்தினால். 2020 ஏப்பிரல் முதல் சூலை வரை வெளி வரவில்லை. ஆகத்து - செப்தம்பர், அக்தோபர், நவம்பர் ஆகிய இதழ்களில் சுவடி - ஏடு எண்கள் வரிசை தவறாக உள்ளது. திசம்பர் இதழ் முதல் அது முறைப்படுத்தப்பட்டது.



## மானமிகு
# மா. நாராயணசாமி வாழ்க! வாழ்க!!

- கவிஞர் **அறிவுமழை**

ஊர்த்தலைவர் ஆகவிரும்பும்
யாராக இருப்பினும்
வரகூர் நாராயணசாமி
வரலாற்றைப் படிக்கனும்!
– ஊர்

பதவிதனைத் தேடாமல்
பகட்டுதனை நாடாமல்
பகைவருக்கும் ஓடாமல்
மக்கள்பணி செய்தவர்! – ஊர்

பதவியிவரைத் தேடிவர
பகைவருமே பணிந்துவர
நேர்வழியில் தலைவராகி
ஊர்உயர உழைத்தவர்! – ஊர்

ஊரினிலே தீவிபத்து
உண்டானக் காலத்திலே
நேரினிலே அண்ணாவிடம்
நிதிகேட்டுப் பெற்றவர்! – ஊர்

வீடும்இன்றி வேதனையில்
வீதியிலே நின்றஅவர்
வந்தநிதியை வீடுகட்ட
வாரித்தந்த பாரிஅவர்! – ஊர்

சரியாய் இளமையிலே
தன்பயணம் தொடங்கினார்
பெரியார் ஆனைமுத்து
தொண்டராய் விளங்கினார்! – ஊர்

தாழ்த்தப்பட்ட மக்களிடம்
தயங்காது பழகினார்
சுயநலக் காரரிடம்
மயங்கிடாது விலகினார்! – ஊர்

மா.பெ.பொ. கட்சியிலே
மாவட்டச் செயலாளர்
மாநாடு கூட்டம்போட
நிதிதிரட்டும் செயல்வீரர்! – ஊர்

ஊர்ப்பணி செய்துகொண்டே
நாட்டுப்பணி தொடர்ந்தார்
தொண்டுசெய்யத் துடிக்குமவர்
தொண்ணூறு அகவைகடந்தார்! – ஊர்

வரகூர் மக்களெல்லாம்
வாழ்த்தும் தலைவராவார்
நாராயணசாமி மட்டும்
நாட்டுமக்கள் தொண்டராவார்! – ஊர்



## மக்கள் வழக்குரைஞர் போராளித் தோழர்
# செம்மணி
## நம்மைப் பிரிந்தார் !

உழைக்கும் மக்களின் உற்ற தோழனாகக் களத்தில் நின்று செயல்பட்டவர்; தென் மாவட்டங்களில் நடைபெற்ற சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத் தொடர்ந்து முகங்கொடுத்து வந்தவர்; காவல் துறையின் அடக்குமுறைகளை எதிர்கொள்வதற்காகவே சட்டம் பயின்றவர்; காவல் துறையின் ஒடுக்குமுறை களுக்கு எதிரான வழக்குகளில் தொடர்ந்து ஏழைகளுக்கும் மக்கள் போராளிகளுக்கும் நீதி பெற்றுத்தந்தவர்; கூடங் குளம் அணு உலைக்கு எதிரான போராட்டங்களில் போராளிகளுக்கான சட்டப்பாதுகாவலராக இருந்து, ஒன்றிய, மாநில அரசுகளின் – காவல் துறையினரின் அடக்குமுறை களைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தமையால் காவல் துறையினராலேயே கடத்தப்பட்டு கடுமையான தாக்கு தலுக்கு ஆட்பட்டவர் தோழர் செம்மணி.

பிறருக்கு எடுத்துக்காட்டான புரட்சிகர வாழ்க்கை முறையைச் சொந்த வாழ்வியலாக ஆக்கிக் கொண்டதால் சொந்த வாழ்வில் சொல்லமுடியாத நெருக்கடிகளை எதிர் கொண்டவர்; தமிழக மக்கள் உரிமைக் கழகத்தின் தலைவர், மக்கள் வழக்கறிஞர் தோழர் செம்மணி, 03.12.2020 வியாழன் அன்று திடுமென நெஞ்சகத் தாக்கத்திற்கு ஆட்பட்டு நாகர்கோயில் பெதசுடா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தோழருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பெற்றும் பயனின்றி மாலை 3 மணி அளவில் இத் தமிழ்மண்ணை விட்டுப் பிரிந்தார்.

தென் மாவட்டங்களின் நடைபெற்ற அனைத்து சாதி ஒழிப்புக் களங்களிலும், மக்கள் உரிமைப் போராட்டங் களிலும், தமிழ்த்தேசிய விடுதலைத் தளத்திலும், சட்டப் போராட்டக் களத்திலும் ஓய்வின்றிக் களம் கண்ட தோழர் செம்மணி, தன் போராட்டத்தை நிறுத்திக்கொண்டது தமிழ்நாட்டுக்கும் தமிழர்களுக்கும் மக்கள் நலன் பேணும் இயக்கங்களுக்கும் மாபெரும் இழப்பாகும்.

தோழரின் பிரிவால் தவிக்கும் தமிழக ஒடுக்கப் பட்டோர் விடுதலை இயக்கம், தமிழக மக்கள் உரிமைக் கழகம் உள்ளிட்ட எல்லா அமைப்புகளின் தோழர்களுக்கும்; தோழரை இழந்துவாடும் குடும்பத்தார்க்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும் சிந்தனையாளன் இதழின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும் தேற்றுதலையும் உரித்தாக்குகிறோம்.

**போர்க் களங்கள் மட்டுமே நிரம்பியிருந்த தோழர் செம்மணியின் வாழ்வு, இயக்கத் தோழர்கள் ஒவ்வொரு வருக்கும் போராட்ட வாழ்க்கைக்கான அரிச்சுவடியாக அமையட்டும். போராளித் தோழர் செம்மணிக்கு வீரவணக்கம் !**


- முனைவர் **முத்தமிழ்**

# இந்திய வேளாண்மையைக் கார்ப்பரேட்டுகளுக்குத் தாரை வார்க்கும் மோடி அரசு

# தொடங்கியது விவசாயிகளின் போர்

பேராசிரியர் **த. செயராமன்**
நெறியாளர், தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

'டெல்லி சலோ' என்ற பெயரில் விவசாயிகள் டெல்லி நோக்கிப் பேரணியாகச் சென்றுகொண்டிருக் கிறார்கள். கார்ப்பரேட்டுகளின் கையாளாக இருந்து இந்திய விவசாயத்தைச் சூறையாட, பன்னாட்டு நிறுவனங் களுக்குக் கதவுகளைத் திறந்துவிடும் மோடி அரசை எதிர்த்து, டெல்லியை முற்றுகையிடப் பல்வேறு மாநிலங் களிலிருந்தும் விவசாயிகள் விரைந்து கொண்டிருக் கிறார்கள். இப்போதும் கடந்த நவம்பர் 26 முதல் டெல்லி யும் அதன் அருகாமைப் பகுதிகளும் போராட்டக் கள மாகவே மாறியுள்ளன.




2019 செப்டம்பரில் நிறைவேற்றப்பட்ட மோடி அரசின் புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டங்கள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. கடந்த இரண்டு மாதங்களாக பஞ்சாப் விவசாயிகள் இரயில் பாதைகளில் முகாமிட்டு தொடர் போராட்டத்தை நடத்தி னார்கள். ஆனால், இந்திய அரசு விவசாயிகளோடு பேசத் தயாரில்லை. நாடு முழுவதும் செப்டம்பர் 25ஆம் நாள் மறியல் மற்றும் சட்ட நகல் எரிப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. 'அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்புக் குழு' இந்திய அளவில் போராட்டங் களை இப்போது ஒருங்கிணைக்கிறது. விவசாயிகளின் போராட்டங்களை மோடி அரசு கண்டுகொள்ளாத நிலையில், போராட்டம் இப்போது அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்திருக்கிறது.

பஞ்சாப் - அரியானா மாநில விவசாயிகள நவம்பர் 26 முதல் டெல்லி நோக்கி பேரணியாகச் செல்லத் தொடங் கினர். அரியானாவில் ஷம்பு பகுதியில் விவசாயிகளைத் தடுத்து நிறுத்திய காவல் துறையினரின் தடுப்புகளைத் தூக்கியெறிந்துவிட்டு, காவல்துறையினரின் கண்ணீர்ப்புகைக் குண்டுகள், பீய்ச்சியடிக்கப் பட்ட தண்ணீர்த்தாக்குதல்கள் ஆகியவற்றை மீறிப் பேரணி தொடர்ந்தது.

பல்லாயிரக்கணக்கில் திரண்ட விவசாயி கள் நவம்பர் 27-இல், டெல்லி-ஹரியானா மாநில எல்லையான சிங்கு பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டனர். எதிரிநாட்டுப் படைகளை எதிர்கொள்ளுவதுபோலச் சாலைகளின் குறுக்கே குழிகளை அமைத்து, மணல் மூட்டைகள் ஏற்றப்பட்ட வாகனங்களைக் குறுக்கே நிறுத்தி, கண்ணீர்ப் புகை, தண்ணீர்ப் பீய்ச்சி அடித்தல் உள்ளிட்ட தாக்குதல் வழி முறைகளோடு, விவசாயிகளைக் காவல் படைகள் தடுத்து நிறுத்த முற்பட்டன. இதை எதிர்கொண்ட விவசாயிகள் கற்களையும், கம்புகளையும் வீசத்தொடங்கிய நிலையில் அப்பகுதியே போர்க்களமாக மாறியது.

விவசாயிகளைக் கைது செய்து வைக்க டெல்லி அரசிடம் ஒன்பது மைதானங்களை டெல்லி காவல்துறை கோரியபோது, அவற்றை அளிக்க டெல்லி அரசு மறுத்துவிட்டது. டெல்லி சாலைகளில் முகாமிட்ட விவசாயிகள், நவம்பர் 27 அன்று, மத்திய அரசின் காவல்படைகளின் தடைகளை உடைத்தெறிந்து, டெல்லி எல்லையைச் சென்றடைந்தனர். அடக்குமுறைகளைக் கைவிட்டு "டெல்லிக்குள் விவசாயி களை அனுமதிக்கவேண்டும்; இராமலீலா மைதானத்தில் விவசாயிகளைப் போராட அனுமதிக்க வேண்டும்; வேளாண்மையை ஒட்டுமொத்தமாகக் கார்ப்பரேட்டு களிடம் ஒப்படைக்கும் வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறவேண்டும்" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகள் போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

“வேளாண்மையை ஒழித்துக்கட்டும் மூன்று சட்டங்களையும் நீக்கும் வரையில் போராட்டங்கள் தொடரும்” என்று விவசாயிகள் அறிவித்துள்ளனர். போராடும் விவசாயிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். டெல்லி எல்லையில் முகாமிட்ட விவசாயிகள் டெல்லி ஜந்தர்மந்தர், ராமலீலா மைதானங்களைப் போராட்டம் நடத்த ஒதுக்கக் கோரியும் மத்திய அரசு மறுத்த நிலையில், டெல்லி எல்லைப்பகுதியில் உள்ள முக்கிய நெடுஞ்சாலைகள் விவசாயிகளால் நிரப்பப்பட்டு விட்டன. ஏழு நாட்களாகத் தொடர் தர்ணா போராட்டம் நடந்தது. அங்கேயே விவசாயிகள் சமைத்துச் சாப்பிடுகின்றனர். டெல்லியில் போக்குவரத்து கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா விவசாயிகள் புராரி பகுதிக்குப் போய் போராட்டம் நடத்தினால் முன்கூட்டியே பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றார். அமித் ஷாவின் பசப்பு வார்த்தைகளை விவசாயிகள் புறந்தள்ளி விட்டார்கள். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த முன்வராவிட்டால் டெல்லியின் 5 எல்லைப் பகுதிகளையும் முற்றுகையிட்டு மூடுவோம் என்று நவம்பர் 30ஆம் நாள் விவசாயிகள் நிபந்தனை விதித்தனர்.

**பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பல்வேறு மாநிலங்களிலிருந்து டெல்லியில் குவிந்து, வேளாண்மைச் சட்டங்களை எதிர்த்துப் போராடுவதற்குக் காரணம் என்ன? இந்தச் சட்டங்களை மோடி அரசு கொண்டு வந்ததற்கான காரணங்கள் என்ன?**

**மத்திய அரசு கூறுவதுபோல, அது இயற்றிய வேளாண் சட்டங்கள் இந்திய வேளாண்மையையும், விவசாயிகளின் நலனையும் பாதுகாக்குமா? அல்லது விவசாயிகள் கூறுவது போல இந்திய வேளாண்மையையும், விவசாயிகளையும் ஒட்டுமொத்தமாக ஒழித்துக்கட்டுமா? - என்பது ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.**

### பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க வேளாண்மையே விற்கிறது மோடி அரசு !

பணமதிப்பிழப்பு நடவடிக்கை மூலம் அனைத்துத் தொழில் துறைகளையும், வணிக நிலையங்களையும் முடம் ஆக்கியது மோடி அரசு. அடுத்து ‘ஒரே நாடு, ஒரே வரி’ என்று சொல்லி, ஜி.எஸ்.டி (Goods and Services Tax) மூலம் மாநிலங்களின் வரி வருவாயை முற்றிலுமாகப் பறித்துக் கொண்டது. இப்போது விவசாயத்தின் மீதான மாநிலங்களின் உரிமையையும், வருமானத்தையும் பறித்துக்கொள்கிறது.

பொருளாதாரப் பிரச்சனைகளை முறையாகக் கையாள மோடி அரசுக்குத் தெரியாது என்று முன்னமே பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்போது, 101 இலட்சம் கோடிகளுக்கு மேல் இந்தியக் கடன் உயர்ந்துவிட்ட நிலையில், ரிசர்வ் வங்கியின் இருப்பில் இருந்த பணத்தையும் இதற்கு முன்னமே வற்புறுத்திப் பறித்துக்கொண்ட நிலையில், இந்தியாவின் பல்வேறு நிறுவனங்களையும் பன்னாட்டு முதலாளிகளுக்கு விலை கூறி விற்றுக்கொண்டிருக்கும் நிலையில், இனி விற்பதற்கு ஏதுமில்லை என்று கருதிய மோடி அரசின் கண்ணில் இந்திய விவசாயம் பட்டு விட்டது. அன்னிய முதலீடுகளைப் பெறுவது என்ற ஒரே காரணத்திற்காக, இந்திய விவசாயத்தையும் இப்போது கார்ப்பரேட்டுகளின் கையில் ஒப்படைக்கிறது.

### வேளாண் சட்டங்களை அவசரமாகக் கொண்டுவர வேண்டியதன் தேவைதான் என்ன ?

கொரோனா பெருந்தொற்று முடக்கத்துக்கு ஆளாகும் முன்பே இந்தியப் பொருளாதாரம் சரிவைச் சந்தித்து விட்டது. கிட்டத்தட்ட இந்தியா திவாலாகிவிட்டது. இப்போது இந்தியாவின் கடன் 101.3 இலட்சம் கோடி. இதை ஒரு காலத்திலும் இந்திய அரசால் அடைக்கமுடியாது. மோடி பதவியேற்ற பிறகு ஐந்து ஆண்டுகளில் 28 இலட்சம் கோடியைக் கடனாகப் பெற்று ஊதாரிச் செலவு செய்துள்ளது, இந்திய அரசு. இந்நிலையில் கொரோனா முடக்கம் வேறு. இப்போது அன்னிய முதலீடுகளை ஈர்த்து, நிலைமையைச் சமாளிக்க முடியுமா என்று இந்திய அரசு எத்தனிக்கிறது. முதலீடு செய்வதற்கான தகுதி பற்றி ஆய்வு செய்து ‘ரேட்டிங் கிரேடு’ (தரம்) பற்றிய அறிவிப்பை அளிக்கக் கூடிய ’மூடிஸ்’ நிறுவனம், மொத்தம் உள்ள 10 கிரேடுகளில் 10-வது இடத்தில் (3 என்ற கடைசி இடத்தில்) இந்தியா இருப்பதாக அறிவித்துவிட்டது. அந்நிய முதலீடுகளைப் பெற எதையும் செய்ய மோடி அரசு தயாராகிவிட்டது.

ரிசர்வு வங்கியையும் சூறையாடிய மோடி அரசு, தன் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ள, 2018 சூன் நிலவரப்படி ரிசர்வ் வங்கியிடம் இருந்த 9.63 லட்சம் கோடியைப் பிடுங்கிவிட முயற்சி செய்தது. 2016-லேயே, ரிசர்வ் வங்கியை சூறையாட மோடி முயன்ற நிலையில், அப்போதைய ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன் பதவி விலகினார். அடுத்து உர்ஜித் படேல் 2018 திசம்பரில் பதவி விலகினார். ‘நிதி ஆயோக்’ துணைத் தலைவர் அரவிந்த் பனகாரியா 2017-இல் பதவி விலகினார். தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன் சூன் 2018-இல் பதவி விலகினார். பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றிருந்த பகுதிநேர உறுப்பினர் சுர்ஜித் பல்லா டிசம்பர் 2019-இல் பதவி விலகினார்.

இந்தியப் பொருளாதாரத்தை ஒட்டுமொத்தமாக அழித்துவிடும் மோடி அரசின் பொருளாதாரக் கொள்கைகளையும், தாறுமாறான ஊதாரிச் செலவுகளையும் கண்டு, அரண்டு போய் இவர்கள் தப்பியோடினார்கள். கோளாறு மிக்க பொருளாதாரக் கொள்கையால் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக் குறியீடு இப்போது 2-க்கும் கீழே வந்துள்ளது.

### அரசின் சொத்துக்களை விற்றுத் தின்னும் மோடி அரசு!

பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி, இந்திய அரசுக்குச் சொந்தமாக உள்ள 257 நிறுவனங்களை பங்கு விற்பனை என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களுக்கும்,

இந்தியப் பெருமுதலாளிகளுக்கும் விற்றுவிடத் துடியாய் துடிக்கிறது மோடி அரசு. பல நிறுவனங்கள் முன்னமே விற்கப்பட்டுவிட்டன. பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், கார்கோ மோவர் கன்டெய்னர் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட், டிஎச்டிஎச் நிறுவனம், நீப்கோ நிறுவனம், கன்கார் நிறுவனம், ஏர் இந்தியா நிறுவனம் என்று ஏராள மான நிறுவனங்களின் பங்குகள், அவற்றின் மீது அரசு நிர்வாகக் கட்டுப்பாட்டை இழந்துவிடும் அளவிற்குத் தனியாருக்கு விற்கப்பட்டுள்ளன. திட்டமிட்டே பிஎஸ்என்எல் நிறுவனம் நட்டத்திற்குள் தள்ளப்பட்டது. ஆசியா வின் மிகப்பெரிய நிறுவனமாகிய இந்தியன் இரயில்வே தனியாருக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான இரயில்கள் கார்ப்ப ரேட்டுகள் வசம் அளிக்கப்பட்டுவிட்டன. நாட்டின் மிகப் பெரும் பொருளாதார நிறுவனமாகிய இந்திய இரயில்வே 13,523 இரயில்களைத் தினமும் ஓட்டுகிறது. இந்திய அரசு இரயில்வே நட்டத்தில் இயங்குவதாகக்கூறி தனியாருக்கு விற்கிறது. இராய்ட்டர்ஸ் நிறுவனம் 52 பொருளாதார வல்லுனர்கள் கொண்ட குழு வின் மூலம் ஆய்வு செய்து, இந்தியாவில் 2019-20 நிதி யாண்டு காலத்தில் 2.1 மட்டுமே வளர்ச்சி இருக்கும் என்று அறிவித்தது.

### மோடி அரசின் அடுக்கடுக்கான ஊதாரிச் செலவுகள் !

அனைத்து நாடுகளுக்கும் பயணம் செய்து இந்திய வளங்களை சூறையாடிக்கொள்ள வருமாறு பன்னாட்டுப் பெருமுதலாளிகளை அழைப்பதைத் தலையாயப் பணி யாக கொண்டிருந்தார் மோடி. 5 ஆண்டுக் காலத்தில் 825 நாட்கள் பிரதமர் மோடி பயணத்திலேயே இருந்தார். சராசரியாக 10 நாட்களுக்கு ஒருமுறை வெளிநாடு சென்றார். மூன்று நாட்களுக்கு ஒருமுறை உள்நாட்டுப் பயணம் மேற்கொண்டார். குறைந்த மதிப்பீடாக, மோடி யின் பயணச் செலவு 2021 கோடி. இதுமட்டுமன்றி 90,000 கோடி செலவில் புல்லட் இரயில், 4,800 கோடி செலவில் விளம்பரங்கள், 3,600 கோடி செலவில் சிவாஜி சிலை, 2,989 கோடி செலவில் பட்டேல் சிலை, 4,200 கோடி செலவில் கும்பமேளா, 7304 கோடி செலவில் (இரண்டு ஆண்டு களுக்கு மட்டும்) கங்கையைச் சுத்தம் செய்தல் என்று ஊதாரிச் செலவுகள் வரைமுறை இல்லாமல் நீண்டன.

### கார்ப்பரேட்டுகளுக்குக் கடன் தள்ளுபடிகள்!

இவை போதாதென்று, தன் கட்சிக்கும், தன் தேர்தல் வெற்றிகளுக்கும், நன்கொடைகளை வாரி வழங்குகின்ற கார்ப்பரேட்டுகளுக்கு எல்லையில்லாக் கடன் தள்ளுபடி களைச் செய்தார் நரேந்திர மோடி. 2018 நவம்பரில், 15 கோடிசுவரர்கள் நான்கு ஆண்டுகளில் 3.5 இலட்சம் கோடி கடன் தள்ளுபடியைப் பெற்றார்கள் என்ற செய்தி வெளி யானது. 2019ஆம் ஆண்டு, நிலுவையில் இருந்த பெரு முதலாளிகளின் கடன் 68,607 கோடி கணக்கியல் ரீதியாகத் தள்ளுபடி செய்யப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் 7 இலட்சம் கோடி வரை பெருமுதலாளிகளின் கடன் தொகை கணக்கியல் ரீதியாகத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

### விவசாயம் மட்டுமே மிச்சம் இருக்கிறது!

ஊதாரிச் செலவுகள் இன்றுவரை நின்றபாடில்லை. கிட்டத்தட்ட இந்தியா திவாலாகி விட்டது. இந்நிலையில், ஒட்டுமொத்தமாகச் சரிந்துபோன இந்தியப் பொருளா தாரத்தை மீட்கமுடியாத நிலையில், என்ன செய்வது என்று மோடி அரசு திகைக்கிறது. இன்றுவரை வளர்ச்சியில் இருக்கக்கூடிய ஒரே துறை விவசாயம் மட்டுமே. விவசாய உற்பத்தியை பெருமளவிற்கு அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிடுவது, விவசாயத்தைக் கார்ப்பரேட்டு களின் கையில் ஒப்படைப்பதன் மூலமாக அதிக அந்நிய முதலீடுகளைப் பெறுவது, இதன் மூலம் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பது என்று, இந்திய அரசு சில அபாயகர முடிவுகளை எடுத்தது. வெளிநாடுகளுக்குச் செலுத்தவேண்டிய 101.3 இலட்சம் கோடி கடனைத் திரும்பச் செலுத்த முடியாத நிலையில், அந் நாடுகள் கேட்பதைக் கொடுக்கவேண்டிய நிலையில் இந்தியா இருக்கிறது. அந் நாடுகள் ஏற்கத்தக்க வகையில், விவசாய உற்பத்திப் பொருட்களையும், கனிமங்களையும் ஏற்றுமதி செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்ற நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டு இருக்கிறது.

ஊதாரிச் செலவு செய்து ஓட்டாண்டி ஆகிவிட்ட நிலை யில், இங்கு உற்பத்தியாகும் விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து, கடன் கணக்கில் வரவு வைக்க இந்தியா முயற்சிக்கிறது. வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த, ‘நடப்பு கணக்கில் சரிகட்டுதல்’ என்ற முறையில், ஏற்றுமதி சம்பாத்தியத்தின் மூலமாக அன்னியச் செலாவணி கை யிருப்பு பெற்று, கடனை அடைக்க முயற்சி செய்கிறது. இந்திய விவசாய அத்தியாவசியப் பொருட்கள், கனிம வளங்கள் அனைத்தையும் ஏற்றுமதி செய்து கடனுக்கான வட்டியையும் முடிந்த அளவிற்கு அசலையும் குறைக்க இந்திய அரசு முயற்சி செய்கிறது.

இந்திய அரசின் வேளாண் அவசரச் சட்டங்கள் குறித்த நடவடிக்கைகளை இப்படிப் புரிந்துகொள்ளலாம் :

“தன் விருப்பம்போல விவசாய உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற் குத் தடையாக இருக்கக்கூடிய சட்டங்களை தளர்த்தவோ அல்லது நீக்கவோ மோடி அரசு முடிவு செய்தது. வேளாண் உற்பத்தி, அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தை மாற்றி அமைக்காமல், தன் விருப்பப்படி விவசாய உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது என்பதால் அச்சட்டத்தை மோடி அரசு அவசர மாகத் திருத்த விரும்பியது. இந்தியாவிலிருந்து விவசாயப் பொருட்களை, கார்ப்பரேட்டுகள் தங்கள் விருப்பம்போல ஏற்றுமதி செய்துகொள்வதை எளிதாக்கும் வகையில், பன்னாட்டுக் கார்ப்பரேட் நிறுவனங்களின் விருப்பத்திற்கு ஏற்ப, தடையில்லா வணிகம் மற்றும் வர்த்தகச் சட்டத் தையும் உடனடியாக உருவாக்க விரும்பியது.

**இதுவரை உள்நாட்டு மக்களின் தேவைக்குப்போக எஞ்சி யிருந்த அத்தியாவசிய வேளாண் பொருட்கள் வெளிநாட்டுக்கு**

**ஏற்றுமதி செய்யப்பட்டன. இனி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுபோக எஞ்சியிருந்தால் அது இந்திய மக்களுக்கு உண்ணக் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.**

விவசாயிகளுக்காகவோ அல்லது மக்களுக்காகவோ அல்லாமல், தன் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்காகவே, அவசரகதியில் மூன்று வேளாண் அவசரச் சட்டங்களை 2020 சூன் மாதம் மோடி அரசு பிறப்பித்தது. 1955-இல் உருவாக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தில் திருத்தங்களைச் செய்து ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது. இங்கு இதுவரை மக்களின் தேவை கருதி அத்தியாவசியப் பொருட்களின் இருப்பை உறுதிசெய்யும் சட்டம் மாற்றப்பட்டு, அத்தியாவசிய விவசாயப் பொருட்களை சகட்டுமேனிக்குக் கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய கார்ப்பரேட்டுகளுக்கு அனுமதி அளிக்கக்கூடிய வகையில் சட்டம் திருத்தப்பட்டது. ‘வேளாண் விளைபொருள் வணிக ஊக்குவிப்பு அவசரச்சட்டம் - 2020’ என்பது வேளாண் பொருள்களை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இருந்த தடைகளை எல்லாம் நீக்கியது. ‘உழவர்கள் மற்றும் பண்ணை சேவைகள் ஒப்பந்த அவசர சட்டம் - 2020’ என்பது ஒப்பந்த வேளாண்மையை அவசரச் சட்டம் மூலமாக திணித்தது. இவை அனைத்தும் அவசியமற்ற அவசர சட்டங்கள்.

### சனநாயகத்தின் கழுத்தை நெரித்து நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்

சூன் 5ஆம் நாள், அவசரமாக வேளாண்மை தொடர்பான மூன்று ஆணைகளை பிறப்பித்து நடைமுறைக்குக் கொண்டுவந்த மோடி அரசு, பின்னர், இந்த அவசரச் சட்டங்களை மாற்றி, மூன்று சட்டங்களாக நாடாளுமன்றத்தில் இயற்றும் நோக்கத்தோடு, செப்டம்பர் 14 அன்று சட்டங்களின் முன்வடிவை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்தது. இவற்றை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பே நடத்தாமல், குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக, சனநாயக மாண்புகளையும், மரபுகளையும் மீறி, மாநிலங்கள் அவையின் துணைத் தலைவர் அறிவித்தார்.

வேளாண்சட்ட முன்வடிவுகளுக்கு நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு இருந்த நிலையில், அதை நிலைக்குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்தன. அவ் வேண்டுகோள் மறுக்கப்பட்டது. நாடாளுமன்றத்தின் கீழ் அவையில் (மக்கள் அவை) பாரதிய சனதா கட்சிக்கு 303 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலம் இருப்பதால் கீழ் அவையில் மசோதா நிறைவேறியது. ஆனால், மேலவையில் அவற்றை எளிதில் நிறைவேற்ற முடியவில்லை. சட்டங்களுக்குத் திருத்தங்கள் கோரிய நிலையில், திருத்தங்கள் செய்யவும் அரசு மறுத்துவிட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் இரகசிய வாக்கெடுப்பு கோரிக்கை ஏற்க மறுக்கப்பட்டது. ஒரேஒரு உறுப்பினர் இரகசிய வாக்கெடுப்பு கோரினாலும் அது ஏற்கப்பட வேண்டும் என்பதுதான் மரபு. ஆனால், எந்த மரபையும் மதிக்காத மேலவையின் துணைத் தலைவர் அதை ஏற்க மறுத்தார். வாக்கெடுப்புக்கு வைக்காமல், வாக்கெடுப்பே நடத்தாமல், குரல் வாக்கெடுப்பின் மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக அறிவித்தார்.

18 எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற துணைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தன. அத் தீர்மானத்தையும் அனுமதிப்பதற்கு மாநிலங்களவைத் துணைத்தலைவர் மறுத்துவிட்டார். அதுவும் ஒரு விதிமுறை மீறலாகும். இதைக் கண்டித்து எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவையைப் புறக்கணித்த போது, அதையே வாய்ப்பாகப் பயன்படுத்தி, 30-க்கு மேற்பட்ட மசோதாக்களை மோடி அரசு நிறைவேற்றிக் கொண்டது. சனநாயகத்திற்கு இது இருண்ட காலம் ஆகும்.

### கொரோனா நமக்கு பாதிப்பு; மோடிக்கு அரிய வாய்ப்பு !

கொரோனா பெருந்தொற்று பாதிப்புக்கு முன்னாலேயே இந்தியப் பொருளாதாரம் கடுமையான வீழ்ச்சியை அடைந்திருந்தது. இந்நிலையில் கொரோனா முடக்கத்தின் காரணமாக, மேலும் இந்தியப் பொருளாதாரம் பலத்த அடியை வாங்கியுள்ளது. எல்லா துறைகளும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயம் மட்டுமே வளர்ச்சியடைந்த நிலையில் தொடர்ந்து இருந்துவருகிறது. இந்நிலையில், அந்நிய முதலீடுகளைப் பெறவேண்டும் என்ற நோக்கம் இருப்பதாகச் சட்டத்திலேயே அரசு தெரிவித்திருக்கிறது. அந்திய முதலீடுகளைப் பெறுவதற்காகவே இந்திய விவசாயத்தை கார்ப்பரேட்டுகளிடம் ஒப்படைக்கும் வகையில், ‘அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம் - 2020’, ‘விவசாய விளைபொருள் வியாபாரம் மற்றும் வர்த்தக (மேம்பாடு மற்றும் எளிமைப்படுத்தல்) சட்டம் - 2020’, விவசாயிகளுக்கு விலை உத்தரவாத ஒப்பந்தம் மற்றும் விவசாயச் சேவைகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) சட்டம் - 2020’ ஆகிய இந்த மூன்று சட்டங்களையும் மோடி அரசு முறைகேடாக நிறைவேற்றி உள்ளது.

### அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம் – 2020

இச் சட்டம் ஒட்டுமொத்த மக்களையும் பாதிக்க இருக்கிறது. இச் சட்டப்படி, எந்தக் கட்டுப்பாடும் அத்தியாவசிய விவசாய விளைபொருட்களின் மீது இல்லாமையால், இப்பொருட்களை வரம்பின்றிக் கொள்முதல் செய்து, நாட்டின் எந்தப் பகுதிக்கும் கொண்டுசெல்லலாம். பொருட்களை வரம்பின்றிப் பதுக்கலாம். இதுவரை நுகர்வோர் மற்றும் விவசாயிகளைப் பாதுகாத்து வந்த அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தை இத்திருத்தச் சட்டம் சீர்குலைக்கிறது.

மோடி அரசு நிறைவேற்றியுள்ள இச் சட்டப்படி, போர் மற்றும் பஞ்சம் போன்ற அசாதாரண சூழல்கள் ஏற்படும் போது மட்டுமே விலை ஏற்றத்தைத் தடுக்கவும், பொருள் இருப்பை முறைப்படுத்தவும் மத்திய அரசு தலையிடும். ஆகவே இச் சட்டம், **பொருட்களைப் பதுக்கவும், கள்ளச்**

**சந்தையில் விற்கவும், செயற்கையாக உணவுப் பற்றாக் குறைகளை உருவாக்கவும், செயற்கைப் பஞ்சங்களை உருவாக்கவும், வரம்பில்லாமல் விலையை உயர்த்தி இலாபம் சம்பாதிக்கவும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அத்தனை உரிமைகளையும் வழங்குகிறது. அதாவது, பதுக்கல், கள்ளச் சந்தை போன்ற சட்ட விரோதச் செயல் பாடுகள் சட்டபூர்வமாக அனுமதிக்கப்படுகின்றன.**

ஒரு நிறுவனத்திற்கு சேமிப்புக் கிடங்கு இருந்தால் போதும் அது எவ்வளவு வேண்டுமானாலும் கொள்முதல் செய்து இருப்புவைக்க இச் சட்டம் அனுமதிக்கிறது. சேமிப்புக் கிடங்குகளை உருவாக்கி, அங்கு உணவுப் பொருளைச் சேமித்து, பிறகு நாட்டில் எங்கு வேண்டு மானாலும் கொண்டு செல்லவும், வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் கார்ப்பரேட்டுகளுக்கு உரிமையை வழங்குகிறது.

“விவசாயிகள் எங்கு வேண்டுமானாலும் தங்கள் உற்பத்திப் பொருளைக் கொண்டு சென்று விற்றுக் கொள்ளலாம்” என்று சட்டத்தில் கூறப்பட்டாலும், எந்த விவசாயியும் வெகுதூரம் பொருளை எடுத்துச் சென்று விற்கப் போவதில்லை. ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு எடுத்துச் சென்று எந்த விவசாயியும் விற்கப் போவதில்லை. ஆகவே, தங்கள் உற்பத்தியை அடிமாட்டு விலைக்குக் கம்பெனிகளிடம் விவசாயிகள் விற்றுவிடு வார்கள். அதன் விலையைப் பலமடங்கு உயர்த்தி விற்று, கொழுத்த இலாபம் அடையப்போவது கார்ப்பரேட்டுகள் தான்.

அத்தியாவசியப் பொருள்கள் திருத்தச் சட்டம் நடை முறைக்கு வந்த பிறகு, விவசாய உற்பத்திப் பொருட்களை வகை தொகையில்லாமல் கொள்முதல் செய்யப்பட்டு நாட்டின் பிற பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுவதால், உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலேயேகூட செயற்கைப் பஞ்சம் ஏற்படும்.

தாங்கள் உற்பத்தி செய்யும் பொருளை கார்ப்பரேட்டு களிடம் கொடுத்துவிட்டு, அதைவிடப் பல மடங்கு அதிக விலையில் அதே பொருளை உற்பத்தி செய்த விவசாயி களே வாங்கவேண்டிய நிலை ஏற்படும்.

### விவசாயகளுக்கு விலை உத்தரவாதம் மற்றும் விவசாயச் சேவைகள் (அதிகாரமளித்தல் & பாதுகாப்பு) சட்டம் – 2020

எதிர்காலப் பெரும் துன்பங்களை நல்ல சொற்களில் மூடிமறைக்கும் இச்சட்டம் விவசாயிகளையும், விவசாயத் தையும் படுபாதாளத்தில் தள்ளக்கூடியது. “விவசாய உற்பத்திப் பொருட்களைப் பெரிய நிறுவனங்களுடன் விவசாயிகள் ஒப்பந்தம் செய்துகொண்டு, நல்ல விலை யைப் பெறுவார்கள்” என்று இச்சட்டம் கூறுகிறது. தனியார் முதலீடுகளை இச்சட்டம் ஈர்க்கும் என்கிறது மோடி அரசு. தனியார் முதலீட்டை ஈர்ப்பது, “உற்பத்தி மற்றும் விநி யோகத்திற்கான ஒரு சங்கிலித்தொடரை உருவாக்குவது, மட்டுமன்றி, தேசிய அளவிலான மற்றும் பன்னாட்டுச் சந்தை, மொத்த விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், பதப்படுத்தும் பணிகளைச் செய்யக்கூடிய கார்ப்பரேட்டு நிறுவனங்கள் ஆகியவர்களை விவசாய ஒப்பந்தத்திற்குக் கொண்டுவந்து சேர்க்கக்கூடிய தேசிய அளவிலான ஒரு ஏற்பாடு” என்று இந்தச் சட்டத்தை மோடி அரசே குறிப்பிடு கிறது. இந்திய விவசாயத்தை இனி இவர்களே கையாளு வார்கள். மோடி அரசுக்கு அன்னிய முதலீடு வேண்டும். அந்நிய முதலீட்டை ஈர்ப்பதற்காக எந்தப் பாதகத்தையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறது.

‘விலை உறுதியளிப்பு மற்றும் பண்ணை ஒப்பந்தத்திற் கான விவசாயிகள் அதிகாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் - 2020’ என்பது மேலோட்டமாகப் பார்க்கும்போது விவசாயிகளின் உற்பத்திக்கு ஏற்ற நல்ல விலையைக் கம்பெனிகள் அளிக்க வழி செய்ததுபோலத் தோன்றும். ஆனால், நடைமுறையில் அந்த விலையையும் கார்ப்ப ரேட்டுகளே நிர்ணயிப்பார்கள். விவசாயிகள் தங்கள் பொருட்களுக்கான விலையை அறுவடைக்கு வரும் முன்னரே, பயிர்கள் வயலில் இருக்கும் நிலையிலேயே, நிர்ணயிக்கிறார்கள். ஒப்பந்தப்படி, நிர்ணயித்த விலைக்கு நிறுவனங்கள் அறுவடை செய்துகொள்ளும். ஆனால், அதைப் பலமடங்கு அதிக விலைக்கு நிறுவனங்கள் விற்றுக் கொள்ளும்.

இந்த ஒப்பந்த விவசாயத்தில் நிலம் மட்டுமே விவசாயி களிடம் இருக்கும். மீதியுள்ள அத்தனையையும் கார்ப்ப ரேட் நிறுவனமே தீர்மானிக்கும். நிலத்தில் விதைக்க வேண்டிய விதை, இடப்பட வேண்டிய உரம், பயன்படுத்த வேண்டிய பூச்சிக்கொல்லி, அந்த நிலத்தில் பயன்படுத்த வேண்டிய விவசாயத்திற்கான கருவிகள், இயந்திரங்கள், தொழில்நுட்பங்கள் அத்தனையையும் கார்ப்பரேட் நிறு வனங்களே தீர்மானிக்கும். அவற்றைச் செலவுக் கணக்கில் கொண்டுவந்து, அறுவடை செய்தவுடன், முன்பு ஒப்பந் தத்தில் தீர்மானித்த விலைப்படி மொத்த உற்பத்தியையும் கணக்கீடு செய்து, செலவுகளைக் கழித்துக்கொண்டு மீதி உள்ளதை மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கும்.

கார்ப்பரேட்டுகள் ஐந்தாண்டுக் காலத்திற்கு விவசாயி களுடன் ஒப்பந்தம் இடலாம். இந்த ஒப்பந்தங்கள் மேலும் நீட்டிக்கப்படலாம். ஒப்பந்த மாதிரியை அரசு வழங்கும். ஒப்பந்தத்தின்படி உற்பத்திப் பொருளை நிறுவனங்கள் பெறும்போது, அதற்கான விநியோக நேரம், விலை, தரம், அளவு, தரநிர்ணயக் கட்டுப்பாடு ஆகியவற்றைப் பற்றி, மூன்றாவது நபர் சான்றிதழ் வழங்குவார்கள். வாங்கும் பொருள் குறித்துக் கட்டாயப் பரிசோதனை காத்திருக்கிறது. எதிர்பார்த்தத் தரமில்லை என்று பொருளைக் கொள்முதல் செய்ய மறுக்கும் பிரச்சனைகளும் காத்திருக்கின்றன. “விவசாயிக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டால் அதிகாரிகளைத் தலைவராகக் கொண்ட அமைப்புகள் ஒப்பந்தப் பிரச்சனைகளுக்கு 90 நாட்களில் தீர்வு காண்பார்கள்” என்று சட்டம் கூறுகிறது.

இடையில் வெள்ளம் அல்லது வறட்சி காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டால், அதற்குக் கார்ப்பரேட்

நிறுவனம் பொறுப்பேற்காது. இப்போது உள்ளதுபோல அரசாங்கமும் வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம் ஆகியவற்றை வழங்காது. இனி விவசாயம் என்பது விவசாயிக்கும், கார்ப்பரேட் நிறுவனத்துக்கும் இடையிலான ஒரு பிரச்சனையே ஒழிய, அரசாங்கத்திற்கு இதில் தொடர்பு இல்லை.

அறுவடை செய்து, உற்பத்திப் பொருளைப் பெற்றுக் கொள்ளும் நிலையில், கார்ப்பரேட் நிறுவனங்கள் 'தரக் கட்டுப்பாடு' என்ற பெயரில் உற்பத்திப் பொருளின் தரத்தைப் பரிசோதித்துப் பார்த்து, எதிர்பார்த்த தரம் இருப்பதாகத் தரச் சான்றிதழ் வழங்கினால் மட்டுமே நிறுவனங்கள் கொள்முதல் செய்துகொள்ளும். இல்லாவிட்டால், உற்பத்திப் பொருளின் விலை மிகக் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டு கொள்முதல் செய்வார்கள். விவசாயிகள் நிச்சயமாகப் பெரும் நட்டத்தை அடைவார்கள். நிறுவனங்களிடமிருந்து பெற்ற முன்தொகைக்கு ஈடு செய்ய உற்பத்திப் பொருளை கொடுக்க இயலா நிலையில், தங்கள் நிலங்களை ஏலம் விடும் நிலை விவசாயிகளுக்கு ஏற்படலாம்.

### விவசாய விளைபொருள் வியாபாரம் மற்றும் வர்த்தக (மேம்பாடு மற்றும் எளிமைப்படுத்துதல்) சட்டம் – 2020

இச் சட்டம் உற்பத்திப் பொருளை விற்பதிலும் வாங்குவதிலும் விவசாயிகளுக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் 'தேர்வு செய்துகொள்ளும் உரிமையை' வழங்குவதாக இந்திய அரசு பெருமை பேசுகிறது. பொருட்களை விற்பனை செய்யக் கைக்கொள்ளும் 'மாற்று வழிகளின் மூலமாக' இலாபகரமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்கிறது. மாநிலத்திற்குள்ளும், மாநிலங்களுக் கிடையிலும், விவசாய உற்பத்திப் பொருள் விற்பனை தடையில்லாமல் நடைபெறும் என்று இச் சட்டம் கூறுகிறது.

இச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது, கண் இமைக்கும் நேரத்தில் பொருள்கள் எங்கோ உலகின் ஒரு மூலையில் இருப்பவருக்கு உரிமையாகும். மின்னணு வர்த்தக மேடை மூலம் வணிகமும், வர்த்தகமும் நடைபெறும். மின்னணு வர்த்தகத்தின் மூலமாக பூதாகரக் கார்ப்பரேட்டுகள் சிற்றூர்களில் உள்ள மொத்த உற்பத்திப் பொருளையும் கொள்முதல் செய்து, அதே ஊரில் கிடங்கில் இருப்பு வைத்துவிட்டு, ஆன்லைன் மூலமாக உலக நாடுகளுக்கு விற்றுவிடுவார்கள். அதைத்தொடர்ந்து, உற்பத்திப் பொருள் ஏற்றுமதியாகிவிடும். அந்தப் பொருளை உற்பத்தி செய்த ஊரில் உள்ளவர்களுக்குக் கையளவு உணவுப்பொருள்கூடக் கிடைக்காமல் போகும். விளைச்சலைக் கண்ணால் பார்க்கும் மக்களுக்கு வாய்க்கு ஒரு பிடிச் சோறு கிடைக்காமல் போகும். இவ்வாறு, ஒரு பகுதியில் செயற்கைப் பஞ்சத்தை உருவாக்க முடியும். நுகர்வோர் எனப்படும் மக்கள் இன்று உணவுப் பொருளுக்குக் கொடுக்கும் விலையைவிடப் பலமடங்கு கொடுத்து அப் பொருளை வாங்கவேண்டிய நிலை ஏற்படும். இயலாதவர்கள் பட்டினி கிடந்துச் சாக நேரிடும்.

### கற்பனைக்கு எட்டா பாதிப்புகள்

'ஒரே இந்தியா, ஒரே விவசாயச் சந்தை' என்று மோடி அரசு குறிப்பிடுகிறது. இந்த ஒரே சந்தைக் கோட்பாடு உள்ளூர்ச் சந்தையை ஒழித்துக்கட்டும்; உழவர் சந்தைகளைக் காணாமல் அடிக்கும். இந்த மூன்று சட்டங்களும், விவசாயம், விவசாயிகள், விவசாயக் கூலிகள், நுகர்வோர், மாநில உரிமைகள், கூட்டாட்சி முறைமை ஆகிய அனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கக் கூடியதாகும்.

### மோடி சாதித்துக்கொள்வது என்ன?

இச் சட்டங்களின் மூலமாக இரண்டு திட்டங்களை மோடி அரசு சாதித்துக்கொள்கிறது. முதலாவதாக, மோடி அரசு தன் கார்ப்பரேட்டுக் கூட்டாளிகளுக்கு இந்திய விவசாயத்தைத் தாரைவார்த்து, இதுவரை கார்ப்பரேட்டுகள் தமக்கும், தம் கட்சிக்கும் அளித்த பேருதவிகளுக்கு நன்றிக் கடன் செலுத்திக் கொள்கிறது. இனியும் கார்ப்பரேட்டுகள் தொடர்ந்து துணை நிற்க, அவர்களுடைய எதிர்காலப் பங்களிப்பை உறுதி செய்துகொள்கிறது. இச் சட்டங்கள் யாருக்கு இலாபகரமானது என்றால், கார்ப்பரேட்டு களுக்கு மட்டுமே இலாபகரமானது.

அடுத்து, இச் சட்டங்களின் மூலம் இன்னொன்றையும் இந்திய அரசு சாதித்துக்கொள்கிறது. தன்னுடைய ஏக இந்திய வல்லாதிக்கக் கனவை அடுத்தக் கட்டத்திற்கு நகர்த்துகிறது. மாநில உரிமைகளைப் பறிமுதல் செய்வதன் மூலம், விவசாயத்திலிருந்து மாநிலங்களுக்குக் கிடைக்கக் கூடிய வருவாயைத் தடுப்பதன்வழி, 'ஒற்றை இந்தியா' உருவாக்கத்திற்கு இன்னொரு படி முன்னோக்கிச்செல்கிறது.

இப்போதே நிதி நெருக்கடியாலும், மிகக்குறைவான அதிகாரங்களாலும், வரி வாய்ப்புகளையெல்லாம் மத்திய அரசுக்கு வழங்கிவிட்டு, நிதி கோரிக் கையேந்தி நின்று, தள்ளாடிக் கொண்டிருக்கும் மாநிலங்கள், இப்போது விவசாயத்தையும் மத்திய அரசு பிடுங்கிக்கொள்வதால், ஏதுமற்ற வெற்றுப் பாத்திரங்களாக மாறிப்போகும். இந்தச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், மாநிலங்கள் வெறும் நிர்வாகப் பிரிவுகளாக மட்டுமே இருக்கும்.

### இந்திய அரசுக்கு வருமானவரி கட்டப்போகும் விவசாயிகள்!

வேறொரு ஆபத்தும் விவசாயிகளை எதிர்நோக்கி இருக்கிறது. இதுவரை விவசாயத்திலிருந்து வரும் வருமானத்திற்கு வருமான வரி இல்லை. ஆனால், விவசாயிகள் ஒப்பந்தங்களை இடுவதால், சட்டபூர்வமான பரிவர்த்தனையில் நுழைவதால், விவசாயத்தின் வருமானம் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு, விவசாயம் என்ற தொழில் இனி வருமான வரி வளையத்துக்குள் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

### இந்திய அரசியல் சட்டத்தின் மீதான தாக்குதல்!

இந்திய அரசியல் சட்டப்படி விவசாயம், சந்தை ஆகிய இரண்டுமே மாநில அதிகாரத்தில் இருக்கின்றன (அரசியல் சட்டம் : மாநில அதிகாரப் பட்டியல் கூறு 14 மற்றும் 28). ஆனால், உணவுப் பொருள் வணிகம் என்பது பொதுப் பட்டியலில் இருக்கிறது. இதையே காரணமாகக் காட்டி

இந்திய அரசு மாநிலங்களின் விவசாயத்தின் மீதான உரிமையை ஒட்டுமொத்தமாகப் பறித்துக்கொள்கிறது.

**மாநிலத்தின் கொள்முதல் கட்டமைப்பே நொறுங்கிப்போகும்**

இப்போதுள்ள முறைப்படி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் விவசாயிகளின் நலமும், வியாபாரிகளின் நலமும் பாதுகாக்கப்படுகிறது. விவசாய உற்பத்திப்பொருள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சில முக்கிய வேலைகளைச் செய்துவருகிறது. விவசாயப்பொருள் விற்பனையை ஒழுங்குபடுத்துகிறது. விவசாய உற்பத்தியை வாங்கும் வணிகர்களுக்கு லைசென்சும், கமிஷன் ஏஜென்ட்களுக்கு சட்டபூர்வ அங்கீகாரமும் வழங்குகிறது. ஒரு சந்தை வரியையும் வசூல் செய்கிறது. விவசாயிகள் தாங்கள் விரும்பும் விலை கிடைக்காவிட்டால் பொருளை விற்காமல் இருப்பில் வைத்துக்கொள்ளலாம். நட்டமில்லாமல் குறைந்தபட்ச ஆதரவு விலையில் பொருள்களை விற்றுக்கொள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் வழிவகை செய்கிறது.

**கொத்தடிமை விவசாயிகள்**

வேளாண் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் விவசாயிகள் ஒப்பந்த அடிமைகளாக மாறுவார்கள். விவசாயம் கொத்தடிமை விவசாயமாக மாறும். நிலவுடைமையாளர்கள் விவசாயக் கூலிகளாக மாறுவார்கள். அவர்களுடைய ஒட்டுமொத்த உற்பத்தியையும், விதை, உரம், பூச்சிக்கொல்லி, இயந்திரங்கள், பூச்சி மருந்து அடிக்க ஹெலிகாப்டர் செலவு என்று மொத்தத்தையும் நிறுவனங்கள் பறித்துக்கொள்ளும். ஆண்டு இறுதியில் அறுவடை முடிந்து உற்பத்தியை ஒப்படைக்கும்போது கணக்குப் பார்த்தால் தன் விவசாய நிலத்தில் வேலை செய்ததற்கான கூலி மட்டுமே விவசாயிக்கு எஞ்சும்.

விவசாய மானியங்கள் இதன்பிறகு விவசாயிகளுக்குக் கிடையாது. விவசாயிகளின் உற்பத்தியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய கொள்முதல் கட்டமைப்பு என்பதே காணாமல் போகும். இடைநிலைத் தரகர்கள் என்று அரசு வருணிக்கக் கூடிய இடைநிலை வணிகர்கள் சிறு குறு விவசாயிகளிடமிருந்து பொருட்களைக் கொள்முதல் செய்பவர்களாக இப்போது இருக்கிறார்கள். ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்கள் களம் இறங்கும் நிலையில், இடைநிலை வணிகர்கள் காணாமல் போய்விடுவார்கள். சிறிய அளவுக்கு உற்பத்தி செய்யக்கூடியவர்கள் உற்பத்திப் பொருளை விற்கும் வழி தெரியாமல் திகைத்து நிற்பார்கள். பெருநிறுவனங்கள் நிர்ணயிக்கும் அடிமாட்டு விலைக்கு உற்பத்தியைக் கொட்டிக் கொடுத்துவிட்டு, கிடைக்கும் காசைப் பெற்றுக்கொண்டு செல்வதும், விரைவில் விவசாயத்தைக் கைவிட்டு, நிலத்தை விற்றுவிட்டு வெளியேறுவதும் மட்டுமே அவர்கள் முன் இருக்கக்கூடிய ஒரே வழி.

வேளாண் சட்டங்களால் புகுத்தப்படும் ஒப்பந்த விவசாயம் என்பது கொத்தடிமை விவசாயமாகும். பணத் தேவையில் உள்ள விவசாயிகள் நிச்சயமாக முன்பணம் பெற்றுக்கொள்வார்கள். அத்துடன் அவர்களுடைய சுதந்தரமும் முடிந்து போகும். ஒப்பந்தத்திற்குப் பிறகு, விவசாயத்தின் ஒவ்வொரு அசைவையும் நிறுவனங்களே நிர்வகிக்கும். சிறு விவசாயிகளின் பகுதிகளை அந்த விவசாயிகளுக்கு ஆசைகாட்டி அல்லது அச்சுறுத்தி, நிலங்களை இணைத்து, கம்பெனியே விவசாயத்தை நடத்தும். உற்பத்திக்கான விலை, விதைக்கும் முன்பே நிர்ணயிக்கப்படுகிறது அல்லது பயிர்கள் வயலில் இருக்கும்போதே விலையை நிர்ணயித்து விடுகிறார்கள். அறுவடையின் போது விலை கூடினாலும்கூட ஒப்பந்த விலைக்குத்தான் பொருளை நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும். கம்பெனியிடம் பெற்ற பணத்திற்கு ஈடாக உற்பத்திப் பொருளைக் கொடுக்க முடியாநிலை ஏற்பட்டால், நிலத்தை ஏலத்தில்விட்டு அந்தப் பணத்தைக் கம்பெனிக்குக் கொடுத்துவிடக்கூடிய நிலை ஏற்படலாம். இல்லாவிடில் அந்த விவசாயியை நீதிமன்றத்தில் கொண்டுபோய் கார்ப்பரேட் நிறுவனம் நிறுத்தும். வெள்ளம், பஞ்சம், வறட்சி ஆகியவை காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டால், அரசிடம் நிவாரணம் கோரமுடியாது. விவசாயத்தின் மீது வங்கிக் கடன் பெறவும் முடியாது.

ஒப்பந்தப்படி, தரம் ஆய்வு அடிப்படையில்தான் ஒப்புக்கொள்ளப்பட்ட விலை தரப்படும். ஆகவே, ஒப்புக்கொள்ளப்பட்டதைவிடக் குறைவான தொகையை அல்லது விலையைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது.

**குறைந்தபட்ச ஆதார விலை, பொதுவிநியோக முறை ஒழியும்!**

இப்போது மத்திய அரசு நிர்ணயிக்கின்ற விலை என்று சொல்லப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை என்ற முறை காணாமல் போகும். அரசின் கொள்முதல் கட்டமைப்பே காணாமல் போவதால், இந்திய உணவுக் கழகம் என்பது இழுத்து மூடப்படும். விவசாய உற்பத்திப் பொருளை அரசு கொள்முதல் செய்யாத நிலையில், பொதுவிநியோக முறையும் காணாமல் போகும். மாநில அரசுக்கு உற்பத்திக் கொள்முதலுடன் தொடர்பு அறுந்துபோனால், ரேஷன் கார்டுக்கு எங்கிருந்து இலவச அரிசி வரும்?

**எதிர்காலத்தில் பட்டினிச் சாவுகளை எதிர்பார்க்கலாம்!**

இப்போது விவசாயக் கூலிகள் செய்துவரும் வேலைகளை, கார்ப்பரேட்டுகளின் தேவைக்கு ஏற்ப, இயந்திரங்கள் மூலமாக விரைவாகச் செய்வதால், மிகப்பெரும் எண்ணிக்கையில் இருக்கும் விவசாயக் கூலிகள் வேலையற்றவர்களாக மாறி, தற்கொலையை நோக்கித் துரத்தப்படுவார்கள். அவர்களை என்ன செய்வதாக இருக்கிறது அரசு என்பது தெரியவில்லை.

உண்மையை உணர்ந்து, தமிழக அரசு வேளாண் சட்டங்களை ஏற்கமுடியாது என்று அறிவிக்க வேண்டும். இந்திய அரசு அடாவடியாக சனநாயக விரோதமாக இயற்றி, விவசாயிகளின் மீது கட்டாயமாகத் திணிக்கும் வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெற வேண்டும்.

நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகள் ஓர் அரசுக்கும் அதன்கீழ் வாழும் குடிமக்களுக்கும் இடையிலானப் போராட்டமாகத் தோன்றவில்லை. இரண்டு எதிரெதிர்ப் படைகளுக்கு இடையே நடக்கும் போர் முன்நகர்வுகள்

போல நடந்துகொண்டிருக்கின்றன. இப் பிரச்சனைகள் அனைத்தும் 2020 செப்டம்பர் மாதம் மோடி அரசு நிறைவேற்றிய மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெற வேண்டும் என்று வலியுறுத்தியே நடந்துகொண்டிருக்கின்றன.

**மக்களின் பேரெழுச்சியாக மாறும் விவசாயிகளின் போராட்டம் !**

நாடுமுழுவதும் கடந்த செப்டம்பர் 25-ஆம் நாள் மறியல் மற்றும் சட்டநகல் எரிப்புப் போராட்டங்கள் நடைபெற்றன. இந்த மூன்று சட்டங்களையும் இந்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று இன்றுவரை வலியுறுத்தப்படுகிறது. கடந்த இரண்டு மாதங்களாக பஞ்சாப் விவசாயிகள் சட்டங்களைத் திரும்பப்பெறக்கோரி தொடர்ந்து போராட்டங்களை நடத்தினார்கள். ஆனால், இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்வரவே இல்லை. இந்நிலையில் இந்திய அளவில் விவசாயச் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, நவம்பர் 26 அன்று ‘டெல்லி சலோ’ என்ற முழக்கத்தோடு டெல்லியை நோக்கி விவசாயிகள் விரைந்துள்ளனர். டிராக்டர்களிலும் பிற விவசாய வாகனங்களிலும் தங்களுக்கு மூன்று மாதங்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய் வகைகள் மட்டுமன்றி, படுக்கை போன்றவற்றை ஏற்றிக்கொண்டு டெல்லிக்கு விரைந்துள்ளனர்.

இந்தியா முழுவதும் 500-க்கும் மேற்பட்ட விவசாயச் சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன. இப் போராட்டத்தை அகில இந்திய விவசாயிகள் போராட்டக்குழு ஒருங்கிணைத்து நடத்துகிறது.

இந்திய அரசின் இக் கொடுஞ் சட்டங்களுக்கு எதிரான விவசாயிகளின் போராட்டத்தில் ‘பீம் ஆர்மி’ மற்றும் சவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்துள்ளனர். போராட்டம் பல நகரங்களுக்கும் பரவி வருகிறது. கொல்கத்தா, அமிர்தசரஸ் ஆகிய நகரங்களிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. போராடும் விவசாயிகளை ஏமாற்ற மோடி அரசு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. புதிய வேளாண் சட்டங்கள் விவசாயிகளின் நலன்களுக்கானவை என்றும், விளைபொருள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் வேறு இடங்களுக்கு உற்பத்தியைக் கொண்டு செல்ல விவசாயிகளுக்கு முழுச் சுதந்தரம் உண்டு என்றும் இந்திய ஒன்றிய அரசு கூறுகிறது. ஆனால், விவசாயிகள் ஒட்டுமொத்த விவசாயத்தையும் கார்ப்பரேட்டுகளுக்குத் தாரைவார்க்கும் இந்தச் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

நவம்பர் 26 முதல் டெல்லியில் நடந்த போராட்டத்தை இந்திய அரசால் ஒடுக்கமுடியவில்லை. பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேச விவசாயிகள் பல்லாயிரம் பேர் சிங்கு, திக்ரி எல்லையில் 6-வது நாளாக முற்றுகையிட்டிருந்தனர். இந்திய அரசு திசம்பர் 3 அன்று நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு வரும்படி விவசாயிகளை அழைத்தது. ஆனால், அதற்கு முன்பே பேச்சுவார்த்தைக்கு மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அழைத்தார். 35 விவசாய சங்கப் பிரதிநிதிகள் டிசம்பர் 1 அன்று டெல்லி விக்யான் பவனில் நடந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர். இதில் மத்திய வேளாண் அமைச்சர் தோமர் மற்றும் இரு அமைச்சர்கள் பங்கேற்றனர். ஆனால், பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. விவசாயிகள் ஏமாற மறுக்கிறார்கள். குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் உள்ளூர் மண்டி முறை தொடரும் என்று மத்திய அரசின் தரப்பில் உறுதி கூறப்பட்டது. “வேளாண் சட்டங்கள் தொடர்பான பிரச்சனைகள் குறித்து ஆய்வு நடத்த ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்படும்” என்று அரசு தரப்பில் கூறப்பட்டதை விவசாயிகள் ஏற்க மறுத்து விட்டார்கள். முதற்கட்ட பேச்சுவார்த்தை மூன்று மணி நேரம் நடந்தும் பயனற்றதாகப் போனது. டிசம்பர் 3ஆம் தேதி அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று அரசு கூறியிருக்கிறது. விவசாயிகள் தரப்பில் அனைத்து விவசாயக் குழுக்களும் பேச்சுவார்த்தைக்கு வரும்படி அரசு அழைப்புவிடும் வரையில் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று அறிவித்துள்ளன.

போராட்ட விவகாரத்தில் மத்திய உள்துறை தலையிடக் கூடாது என்றும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு விவசாயச் சங்கங்களை அழைக்கவேண்டும் என்றும், பேச்சுவார்த்தையில் உச்ச அதிகாரம் கொண்ட மத்திய அமைச்சர்கள் பங்கேற்கவேண்டும் என்றும், இவற்றை ஏற்காவிட்டால் டெல்லியின் 5 எல்லைப் பகுதிகளையும் முற்றுகையிடுவோம் என்றும் விவசாயிகள் நிபந்தனை விதித்துவிட்டனர். இந்நிலையில்தான் முதற்கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தோல்வியில் முடிந்தது. அடுத்த கட்ட பேச்சுவார்த்தை டிசம்பர் 3ஆம் தேதி நடக்கிறது.

**சனநாயகத்தின் பெயரால் சர்வாதிகாரம் : டெல்லி சுல்தான்களுக்குப் பாடம் கற்பிக்கும் விவசாயிகள்!**

“இந்தியாவின் வேளாண்மையை ஒட்டுமொத்தமாக கார்ப்பரேட்டுகளிடம் ஒப்படைக்கும் சட்டங்களை இரத்து செய்வதே பிரச்சனைக்கான தீர்வு. அதுவரை போராட்டத்தைக் கைவிடுவதற்கில்லை” என்று விவசாயிகள் அறிவித்துவிட்டார்கள். நாடாளுமன்ற மக்களவையில் 303 உறுப்பினர்கள் அறுதிப் பெரும்பான்மை இருக்கிறது என்பதற்காக, எதை வேண்டுமானாலும் செய்துவிடலாம் என்று பா.ச.க அரசு கருதுகிறது. இடைக்காலத்தில் ஆட்சி செய்த டெல்லி சுல்தான்களை விடவும் தாங்கள் அதிக சக்தி வாய்ந்தவர்கள் என்ற போக்கில் நரேந்திர மோடி சர்வாதிகாரம் செய்ய முனைகிறார்.

**எல்லை மீறினால், மக்கள் சக்தி கிளர்ந்தெழுந்து பாடம் புகட்டும் என்பதைத் தற்போது இந்திய ஆட்சியாளர்களுக்கு விவசாயிகள் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். நரேந்திர மோடி உள்ளிட்ட அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் எசமானர்கள் அல்ல; மக்களுக்கு விசுவாசமாகத் தொண்டு செய்யவேண்டிய வேலைக் காரர்கள்!**

**எதிர்காலத் திருப்பங்களுக்கும் விழிப்பிற்கும் இது ஒரு முன்னுரையாக அமையட்டும்!** ●

# இந்தியாவின் பன்முகத்தன்மையைச் சீர்குலைக்கும் காவி ஆட்சி !

குட்டுவன்

இந்தியா விடுதலை அடைந்த உடன் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பாகிஸ்தான் பிரிவினையும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தன்மைகளையே மாற்றும் சூழலை ஏற்படுத்தின. 1945-இல் 'அமைச்சரவைக் குழு' (Cabinet Mission) அளித்த அரசமைப்புச் சட்டம் முழுமையான மாநிலங்களுக்கான சுயாட்சிக் கூறுகளை உள்ளடக்கியது. ஆனால், இந்திய அரசமைப்புச் சட்டம் ஓர் அரசமைப்புச் சட்ட அவையால் உருவாக்கப்பட்டது. இது முழுமையான எல்லோரும் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றங்களால் உருவாக்கப்பட்டதல்ல. அண்மையில் ஏராளமான ஆய்வாளர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்ததில் பெரும் பங்காற்றியவர்கள் ஆதிக்க சமுதாயத்தினர் என்பதைச் சுட்டிக்காட்டி வருகின்றனர். இன்றைக்கு மாநிலங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அரசமைப்புச் சட்டம் இதற்கு முழுமையாகத் துணைபோகின்றது என்பதைப் பல தரவுகளுடன் சுட்டி வருகின்றனர். முதலமைச்சர் ஒரு மாநிலத்தின் முழு அளவிலான அதிகாரத்தைப் பெற்றவர் என்கிற கருத்துகள் சிதைக்கப்பட்டு வருகின்றன. காங்கிரசு ஆட்சிக் காலத்தில் 1967 வரை ஒன்றிய அரசிலும், மாநிலங்களிலும் காங்கிரசுக் கட்சியின் ஆட்சியே இருந்ததன் காரணமாகப் பல பிரச்சனைகள் வெளிவரவில்லை. பிரதமர் நேரு செல்வாக்குப் பெற்ற தலைவராக இருந்ததாலும் அவர் காங்கிரசு முதலமைச்சர்களின் ஆளுமையை அடக்கிவைத்திருந்தார் என்பதற்கான தரவுகளும் வெளிவருகின்றன. சான்றாக, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தத்தின் முன்பு பல கருத்துகள் முன்வைக்கப்பட்டன. "உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பே இறுதியானது. அந்தத் தீர்ப்பை ஏற்று நாடாளுமன்றம் நாட்டின் அரசுரிமையைக் காப்பாற்ற வேண்டும்" எனப் பல சட்ட வல்லுநர்கள் குறிப்பிட்டிருந்தனர். சான்றாக, சென்னை மாகாணத்தின் அன்றைய முதல்வராக இருந்த குமாரசாமி ராஜா, நேருவுக்கு "இட ஒதுக்கீட்டு ஆணையை நடைமுறைப்படுத்த இந்திய அரசமைப்புச் சட்டத்தை மாற்றவேண்டும்" என ஒரு மடல் எழுதினார். நேரு, இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகக் குமாரசாமி ராஜா அளித்த மடலை நிராகரித்ததோடு "இதைப் பற்றி மீண்டும் பிரச்சனை எழுப்பக்கூடாது" எனப் பதிலளித்தார். ஆனால், தமிழ்நாட்டில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, காங்கிரசுச் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த தொடர் அழுத்தத்தினால்தான் அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் 1951-இல் ஏற்கப்பட்டது. அப்போதுகூட "சமுதாயத்தில் முன்னேறிய பிரிவினரையும் இணைப்பதற்கு சமூக, கல்வி நிலைகளில் பின்தங்கிய நிலைமைகளை எடுத்துக் கொள்ளாமல் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்" எனப் பலர் வாதிட்டனர். ஆனால், அன்றைக்குச் சட்ட அமைச்சராக இருந்த அண்ணல் அம்பேத்கர், "கல்வி, சமூக நிலைகளில் பின்தங்கியவர்களைத்தான் அளவீடாக எடுத்துக்கொள்ள வேண்டும்" என வலியுறுத்தினார். இதன் காரணமாகத்தான் 'பொருளாதாரத்தில் பின்தங்கியோர்' என்ற நிலை - சொற்றொடர் இடம் பெறவில்லை.

**2019–இல் பாஜக ஆட்சியில் நடந்தது என்ன?**

இப்போது 2019-இல் மீண்டும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையின் அடிப்படையில் முற்பட்ட சமூகத்தினருக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கும் சட்டத்



திருத்தம் நிறைவேறியது. "இந்தத் திருத்தம் 1951ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட முதல் சட்டத்திருத்தத்திற்கு எதிரானது" என வழக்குத் தொடர்ந்தும் உச்சநீதிமன்றம் இதற்குத் தடையாணையை இன்றுவரை வழங்கவில்லை. இதற்குக் காரணம் பாஜக ஆட்சியின் அமைச்சரவையில் 90 விழுக்காடு பார்ப்பனராகவும் உச்சநீதிமன்றத்தில் 95 விழுக்காட்டிற்குமேல் நீதிபதிகளாகப் பாரப்பன உயர்சாதியினரே இருப்பதாலும் ஓர் அரசமைப்புச் சட்டத்தின் விதியை மதிக்காமல் சட்டம் இயற்றப்பட்டது. நேரு காலத்திலும் காங்கிரசிலிருந்த உயர் சாதித் தலைவர்கள் இதே நிலையை வலியுறுத்தினர். ஆனால், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, தலைவர் காமராசர், குமாரசாமி ராஜா உட்பட காங்கிரசுச் சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியதன் காரணமாகத்தான் இந்த உயர் சாதியினரின் சதி அன்று முறியடிக்கப்பட்டது.

**“**

**இந்தியாவில்
சந்தைப் பொருளாதாரமும்
அதை ஆட்டிப் படைக்கின்ற
முதலாளித்துவ உயர் பிரிவினரும்
சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிற
உயர் சாதிக் கும்பல்களும் இணைந்து
வருணாசிரம முறையை
மீண்டும் புகுத்துவதற்குப்
பெருமளவில் முயற்சிகளைச்
செய்து வருகின்றனர்.**

**”**


அண்மையில் மைக்கேல் ஜே.சேன்டல் என்ற ஆய்வாளர் ‘தகுதி ஒரு கொடுங்கோன்மை’ (The Tyranny of Merit, 2020) என்ற நூலில், கல்வியில் வருமானம் செல்வ ஏற்றத்தாழ்வில் இன்றைய அமெரிக்காவில் காணப்படுகிற கொடுமைகளைச் சுட்டிக்காட்டி “தகுதி எனப் பேசுவது ஒரு கொடுங்கோன்மை” எனக் கூறுகிறார். இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் நீதிக்கட்சித் தலைவர்களும் திராவிடர் இயக்கத் தலைவர்களும் “சாதிகளால் பிளவுபட்டு ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த சமூகத்தில், கல்வியை அனைவருக்கும் வழங்கவேண்டும்” என வாதிட்டனர்.

இதன் அடிப்படையில்தான் நீதிக் கட்சியின் ஆட்சியில் 1921-இல் கொண்டுவரப்பட்ட வகுப்புவாரி இடஒதுக்கீடு அரசாணை 1927-இல் நடைமுறைக்கு வந்தது.

1951-இல் குமாரசாமி ராஜா சென்னை மாகாணத்தில் நிலவிய சமூகச் சூழலைக் கருத்தில் கொண்டுதான் நேருவுக்கு இடஒதுக்கீட்டை மீண்டும் கொண்டுவர மடல் எழுதினார்.

1920-களில் சென்னை மாகாணத்தில் காங்கிரசு இயக்கத்தில் பார்ப்பனர்கள் நிறைந்திருந்ததனால்தான் நீதிக்கட்சி ஆணையை அவர்கள் எதிர்த்தார்கள். இதன் காரணமாகத்தான் தந்தை பெரியார் காங்கிரசை விட்டு 1925-இல் வெளியேறும் நிலை ஏற்பட்டது. இன்று தனிப் பெரும்பான்மையோடு ஒன்றிய அரசை ஆளுகின்ற பாஜக ஆட்சியில் பார்ப்பனர்கள் தங்களின் மேலாதிக்கத் தன்மையை மீண்டும் வலியுறுத்தி இடஒதுக்கீடு ஆணையைச் சிதைக்கும் வேலையை நடத்தி வருகின்றனர்.

இதரப் பிற்பட்ட சமூகத்தினருக்கு அகில இந்திய அளவில் வேலை வாய்ப்பு மற்றும் உயர் கல்வியில் வழங்கப்பட்ட - சமூகநீதிக் காவலர் வி.பி.சிங்கால் கொண்டு வரப்பட்ட 27 விழுக்காடு இடஒதுக்கீடு ஆணையை முழு அளவில் எல்லாத் தளங்களிலும் கடந்த 6 ஆண்டுகளாகச் சிதைத்து வருகின்றது, ஆதிக்கச் சாதியினர் கட்டுப்பாட்டில் இயங்கும் பாஜக ஆட்சி.




ஆய்வாளர் மைக்கேலின் ‘தகுதி ஒரு கொடுங்கோன்மை’ என்ற நூலில் குறிப்பிடுகின்ற ஏற்றத் தாழ்வுகள் சந்தைப் பொருளாதாரத்தினால் ஏற்பட்டு விட்டது எனக் குறிப்பிடுகிறார்.

இந்தியாவில் சந்தைப் பொருளாதாரமும் அதை ஆட்டிப்படைக்கின்ற முதலாளித்துவ உயர் பிரிவினரும் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிற உயர்சாதிக் கும்பல்களும் இணைந்து வருணாசிரம முறையை மீண்டும் புகுத்துவதற்குப் பெருமளவில் முயற்சிகளைச் செய்து வருகின்றனர்.

சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு கூறாகத்தான் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் வளர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது தமிழ்நாட்டு அரசுப் பள்ளிகளில் படித்து நீட் நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு 7.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. இதன் காரணமாக மருத்துவக் கல்லூரிகளின் 405 இடங்களில் தகுதி பெற்ற மாணவர்கள் (313 பொது மருத்துவம்; 92 பல் மருத்துவம்) இடம்பெறுகின்றனர். இந்த மாணவர்கள் பட்டியலில் 82 மாணவர்களுக்குச் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ரூ.6 லட்சம் முதல் 7 இலட்சம் வரை ஆண்டுக் கட்டணம் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். தி.மு.க தலைவர் ஸ்டாலின் அம் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை தி.மு.கழகமே முழுமையாகச் செலுத்தும் என அறிவித்தார். இந்த அறிவிப்பு வந்த 6 மணி நேரம் கழித்து முதல்வர் எடப்பாடி பழனிசாமி கல்விக் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொள்ளும் என அறிவித்தார். இந்த 82 அரசுப் பள்ளி மாணவர்களின் ஏழ்மை நிலை ஏற்றத்தாழ்வைச் சுட்டுகிறது. ஏழையாக இருந்தும் நீட் தேர்வில் வெற்றி பெற்றும் மருத்துவக்கல்லூரிகளில் இடம்பெற அதிக அளவு கல்விக் கட்டணம் செலுத்தமுடியாத நிலையை உருவாக்கியது. இது நீட் தேர்வு முறையில் உள்ள மற்றொரு முரண்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

கல்வித் தகுதி இருந்தும் நீட் தேர்வில் வெற்றி பெற்றும் அரசுப் பள்ளிகளில் பயின்ற பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் இடம்பெற முடியாத சூழல் இருப்பதனால் நீட் தேர்வை முழுமையாக நீக்குவதுதான் உண்மையான சமூகநீதியை உயர்த்திப் பிடிக்கும் என்ற உண்மையையும் வெளிப்படுத்தி விட்டது. மேலும், பொருளாதாரச் சரிவின் காரணமாகக் கடந்த 6

மாதங்களாகப் பள்ளிகளில் சத்துணவு நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏழை எளிய குடும்பத்து மாணவர்களுக்குச் சத்துணவில் வழங்கப்பட்ட முட்டைகளும் வழங்கப்படவில்லை. அண்மையில் வெளிவந்த ஆய்வு புள்ளிவிவரத்தின்படி "முட்டையோடு சத்துணவு வழங்கப்படாத காரணத்தினால் குழந்தைகளுக்குப் புரதச்சத்து குறைபாடுகளும் மூளை வளர்ச்சியைப் பாதிக்கின்ற போக்கும் பெருகிவருகிறது" என்ற அதிர்ச்சித் தகவலும் வெளிவந்துள்ளது.

தமிழக அரசு இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் மூடி மறைத்துவிட்டு ஊழல்களை உச்ச அளவில் செய்வதால் அமித்ஷாவிற்கு அஞ்சி நடுங்கி ஒடுங்கி அரசு கடைப்பிடிக்கவேண்டிய மரபுகளைப் புறந்தள்ளி முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் விமான நிலையத்தில் அமித்ஷாவை வரவேற்கக் காத்துக்கிடந்தனர்; தமிழகத்தின் மானத்தையும் அடகு வைத்துவிட்டனர்; எம்ஜிஆர் ஜெயலலிதா ஆகியோருக்கும் துரோகம் செய்துவிட்டனர்.

கட்சிப் பெயரில் அண்ணா இருக்கிறார். கொடியில் அண்ணா இருக்கிறார். இந்த அண்ணாதான் 'ஆரிய மாயை' என்ற நூலை எழுதி அதற்காகச் சிறைத்தண்டனை பெற்றார். ஆனால் நடப்பது 'ஆரிய ஆட்சி'. அதனால் தான் சமற்கிருத மொழிக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தி மொழி திணிக்கப்படுகிறது. மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் சில விளக்கங்கள் கேட்டு மடல் எழுதுகிறார். அவருக்குப் பதில் முழுமையாக இந்தியில் வருகிறது. அதேபோன்று திமுகவின் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் வழக்கறிஞர் வில்சன் ஒன்றிய அரசிற்கு ஒரு மடல் எழுதுகிறார். அதற்குப் பதில் இந்தியில் வருகிறது. இந் நிலையில் 2011-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி இந்தி தெரியாத நாடாளுமன்ற உறுப்பினர், அரசின் திட்டம் தொடர்பாக விளக்கம் கேட்டு மடல் எழுதினால் அதற்கான பதிலை ஆங்கிலத்திலும் அளிக்க வேண்டும் என்ற விதி உள்ளது. ஆனால், இவற்றையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு ஆணவத்தோடு மீண்டும் இந்தியைத் திணிப்பது தமிழ்நாட்டு மக்களின் மொழி உரிமையைப் பறிக்கும் செயலை ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து செய்து வருகிறது. இன்னொரு சம்பவம் இதைவிடக் கொடுமையானது. முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் அன்னையார் அண்மையில் மறைந்துவிட்டார். அதற்கு இரங்கல் செய்தி மடலை இந்தியில் எழுதி அனுப்புகிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

அரசமைப்புச் சட்ட விதிகளை மீறி 370ஆவது பிரிவின்படி காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சட்டத்தை ஒன்றிய அரசு சர்வாதிகாரமாக நீக்கியது. "370ஆவது சட்டப்பிரிவை நீக்கினால் இதற்கு காஷ்மீர் சட்டமன்றத்தின் ஒப்புதல் தீர்மானம் தேவை" என்ற விதி அரசமைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் நடந்தது என்ன? காஷ்மீர் மாநிலத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். உச்சநீதிமன்றத்தில் இந்தச் சட்டத்திருத்தம் செல்லாது என ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. ஆனால், உச்ச நீதிமன்றம் அந்த வழக்கை இதுவரை எடுக்கவில்லை. அண்மைக்கால உச்சநீதிமன்ற நடவடிக்கைகளைப் பல முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதிகளும் முன்னாள் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகளும் விமர்சனம் செய்து வருகின்றனர். அர்னாப் கோசுவாமி வழக்கை ஒரே நாளில் விசாரித்து உச்சநீதிமன்றம் பிணை வழங்கியது. இந்த வழக்கில் இருதரப்பிலும் 32 வழக்கறிஞர்கள் வாதாடியுள்ளனர். மராட்டிய மாநில அரசு தரப்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர்கள் 8 பேரும் அர்னாப் கோசுவாமி சார்பில் 24 வழக்கறிஞர்களும் ஒன்றிய அரசின் சார்பில் உதவித் தலைமை வழக்கறிஞரும் வாதிட்டது பலரை அச்சப்படுத்தியுள்ளது. நாட்டின் முதன்மையான பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டி அரசை விமர்சித்த 80 வயதான வரவரராவ் உட்பட பல ஊடகத்துறையினர் சமூகச் செயற்பாட்டாளர்களுக்குப் பல மாதங்களாகப் பிணை வழங்காமல், வழக்கை விசாரணைக்கே எடுத்துக்கொள்ளாமல் உள்ளது உச்சநீதிமன்றம். இவை "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்ற அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் எனப் பல சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

சரிந்து வருகின்ற பொருளாதாரத்தைச் சரிக்கட்டும் நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்காமல் முழுத் தோல்வியைத் தழுவி வருகிறது. அதே நிலையில், அயல் நாட்டுப் பிரச்சனைகளில் ஒரு தொலைநோக்குப் பார்வை இல்லாமல் பொருளாதாரச் சரிவை மேலும் பாதகத்திற்கு உள்ளாக்கி வருகிறது.

பேரறிவாளன் விடுதலை உட்படப் பல பிரச்சனைகளில் மோடி அரசு தமிழ்நாட்டையும் தமிழர்களையும் தொடர்ந்து அவமதித்து வருகிறது. தமிழக மக்கள் ஏமாளிகள் என்ற நினைப்பில் திருக்குறளை உயர்த்திப் பிடிப்பதாகவும் தமிழ்ப் பண்பாட்டையும் மதிப்பதாகவும் கூறிக்கொண்டே கீழடி அகழ்வாராய்ச்சி உட்படப் பல அகழ்வாராய்ச்சிகளின் முடிவுகளை வெளியிடாமல் தடுத்து வருகிறது.

இவ்வாறாக எல்லா நிலைகளிலும் எல்லா அமைப்புகளிலும் தோல்வியைச் சந்தித்து பன்முகத் தன்மைகளை அழித்துக் கொண்டிருக்கும் பாசிச ஆட்சி "ஒரே நாடு; ஒரே மொழி; ஒரே மதம்" என்று நாட்டைப் பிளவுப்படுத்தும் சங் பரிவாரங்களின் ஆட்சியை மக்கள் அடையாளம் கண்டு வருகின்றனர்.

இன்றைய தமிழ்நாட்டின் ஆட்சியாளர்கள் 'அண்ணா திமுக'வை 'அமித்ஷா திமுக'வாக மாற்றித் தமிழ்நாட்டைக் காவிகளுக்குக் குத்தகைக்கு விடலாம் என முயற்சிக்கின்றனர். சங் பரிவாரங்களின் முகத்திரையைக் கிழிப்பதற்கு இளைஞர்கள் ஒன்றுபட்டுத் தமிழ்நாட்டைக் காப்போம். விழிப்போடு செயல்படுவோம். ●

# தமிழ்நாடு நம்நாடு! தாயக நாளைக் கொண்டாடு!
# தமிழ்நாடு நாள் விழாக்களும் போராட்டங்களும் ...

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் தமிழ்நாடு அமைந்த நாளைத் தமிழ்நாடு அளாவிய பெரு விழாவாகக் கொண்டாட முடி வெடுத்து, அத் தகவலை அரசுக்கும் முறையாகத் தெரிவித்தோடு, நவம்பர் முதல் நாளைப் பொது விடுமுறை நாளாக அறிவிக்கவும், தமிழ் நாட்டுக் கென ஒரு கொடியை அறிவிக்கவும் கோரிக்கை வைத்திருந்தது. தமிழ்நாடு முழுவதும் விரிவான ஏற்பாடு களைச் செய்திருந்த நிலையில், கொடி ஏற்றுவது தடைசெய்யப்பட்டுள்ளதாகத் திடு மெனக் கூறி, 31.10.2020 மாலையிலிருந்தே தமிழ் நாடெங்கும் உள்ள பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் உறுப்பியக்கப் பொறுப்பாளர் களையெல்லாம் தேடித்தேடிக் காவல் துறையினர் கொடியேற்றக்கூடாது எனும் அறிவிப்பை இர வோடு இரவாகக் கொடுத்துச்சென்றனர். அந்த இரண்டடித் துணி இந்திய அரசியல் சட்டத்துக்கு எதிரானதாம். தமிழ்நாடு படம் உள்ள அந்தக் கொடி இந்தியாவைத் துண்டாடிச் சிதைத்து விடுமாம். கொடி ஏற்றினால் 124-ஏ சட்டம் பாயும் என காவல்துறையின்மூலம் அடக்குமுறைகளை ஏவியது, பாசக ஏவலாளியான அதிமுக அரசு.

மேடவாக்கம் பாவலரேறு தமிழ்க்களத்தில் அத்துமீறிப் புகுந்து பதாகைகளையும் கொடிகளை யும் பறித்துச்சென்றதுடன், விழா ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன், தோழர் தம்பி மண்டேலா; அதேபோல் இனிப்பு மட்டுமே வழங்கிய வட சென்னை தோழர்கள் 13 பேர் மற்றும் பட்டாபிராம் பகுதித் தோழர்கள் 6 பேர் என 21 பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்புத் தோழர்களையும், மற்ற பல்வேறு அமைப்புகளின் தோழர்களையும் தாயக நாள் விழா கொண்டாடியதற்காகத் தளைப் படுத்தி கொடுஞ் சட்டப் பிரிவுகளான 124-ஏ, 143, 188, 353, 506(1) உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிந்து சிறையிலடைத்தது தமிழ்நாடு அரசு. இக் கொடுஞ்செயலைக் கண்டித்துப் பல் வேறு அரசியல் தலைவர்களும் கண்டனத்தைப் பதிவு செய்தனர். 07.11.2020 அன்று தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் கூட் டமைப்பின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. தற்போது 21 தோழர்களும் நீதி மன்றப் பிணையில் வெளிவந்துள்ளனர். தமிழ் நாட்டிற்கென ஒரு கொடியை அடையாளப்படுத்தி யதற்காக தோழர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைத் தமிழக அரசு உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும்.



01.11.2020-இல், புதுச்சேரியில் நடைபெற்ற தாயகநாள் விழாவில் மா.பெ.பொ.க இரா. திருநாவுக்கரசு



01.11.2020-இல், சென்னை மயிலை திருவள்ளுவர் சிலை அருகே முனைவர் முத்தமிழ் உரையாற்றினார்



07.11.2020-இல், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் வாலாசா வல்லவன்




07.11.2020-இல், வாணியம்பாடியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் நா. மதனகவி, செவ்வேள், பகுத்தறிவாளன், சீனி பழனி, மு. திருப்பதி, புலவர் சகாதேவன் உள்ளிட்ட தோழர்கள்

# ஆதித்திராவிட மக்களின் எழுச்சி நாயகன்
# இரட்டைமலை சீனிவாசன்

- மருத்துவர் **சோமாஸ் கந்தன்**

மனுவின் மொழியே சமூக அறமானது ஒரு நாள். அந்நாள் வரை ஒன்றே குலம் என சமத்துவ சமுதாயமாக வாழ்ந்த தமிழர் சமுதாயம், வந்தேறிகளின் சூழ்ச்சித் திறனால் பல்வேறு சாதியினராய் பிளவுபட்டு ஓர்மை உணர்வையிழந்து, மேல் - கீழ் எனப் பேசி, இந்நாள் வரை இடர்ப்படுகின்றனர். மேல் ஆதிக்கச் சாதியினரால் சமூகத்தில் ஒரு பகுதியினர் பஞ்சை பராரிகளாக, கொத்தடிமைகளாக, கல்வியறிவற்ற பேதைகளாக வாழத் தளைப்பட்டனர். அத்தகைய புறக்கணிக்கப்பட்டத் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடுபவராகத் தோன்றினார் இரட்டைமலை சீனிவாசன்.

இரட்டைமலை சீனிவாசன், பழைய செங்கல்பட்டு மாவட்டத்தில், மதுராந்தகம் அருகில் உள்ள கோழியாளம் என்ற சிற்றூரில்,1859 சூலை 7-ஆம் நாள், ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார் சீனிவாசன். இரட்டைமலை என்பது அவருடைய தந்தையின் பெயர்; தாயாரின் பெயர் ஆதியம்மை. தலைப்பெழுத்தாகத் தந்தையின் முழுப் பெயரும் இணைந்து இரட்டைமலை சீனிவாசன் ஆனார்.

**கல்வி :**

சனாதன தர்மம் நாட்டில் கோலோச்சிய காலத்தில், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், கல்வி கற்பதற்கான வாய்ப்பும் வசதியும் அற்றவராக வாழ்ந்து வந்தனர். அந் நாளில் திண்ணைப் பள்ளிக்கூடங்களே மிகுந்து காணப்பட்டன. அவை மேல்சாதி இந்துக்களின் கட்டுப்பாட்டில் இயங்கின. அந்தப் பள்ளிகளில் ஆதித்திராவிடப் பிள்ளைகள் கல்வி பயில அனுமதி அளிப்பதில்லை; அனுமதித்தாலும், ஆசிரியர்களின் நேரடியான கண்காணிப்பு கிடையா; தக்கக் கல்விப் பயிற்சியும் கிடையா. இதுபோன்ற ஒரு திண்ணைப் பள்ளியில்தான் தொடக்கக் கல்வியை கோழியாளத்தில் இரட்டைமலை சீனிவாசன் பயின்றார். கொடிய வறுமையாலும், சாதியக் கொடுமையாலும், அவரின் குடும்பத்தினர் கோழியாளத்திலிருந்து தஞ்சை நோக்கிக் குடிபெயர்ந்தனர். தஞ்சையில் தன் பள்ளிப்படிப்பைத் தொடர்ந்தார்.

தஞ்சையில் காணுமிடந்தோறும் விண்ணைத்தொடும் உயர்ந்த கோபுரங்கள்; உயர்ந்த சாதியினரின் உள்ளங்களோ தாழ்ந்த உள்ளங்கள். எங்கெல்லாம் ஆறு பாய்ந்தோடி வளம் பெருக்கியதோ அங்கெல்லாம் பூசுரர் கொடி விண்ணைத் தொட்டுப் பறந்தது; சனாதனதர்மமே தழைத்தோங்கியிருந்தது. ஆகையால் தஞ்சையில் சாதிப் பெருமை பேசுவோர் ஏராளம். ஆனபடியால் தீண்டாமைக் கொடுமை வேறெங்கும் காணாத அளவிற்கு ஆழமாக வேரூன்றி உச்சத்தைத் தொட்டுத் தாண்டவமாடியது. எனவே, இரட்டைமலை தன் குடும்பத்தாருடன் கோவைக்குக் குடிபெயர்ந்தார்.



இரட்டைமலை சீனிவாசன், கோயம்புத்தூரில் ஒரு பள்ளியில் சேர்ந்தார். அந்தக் கல்விக்கூடத்தில் 400 பிள்ளைகள் பயின்றனர். அவர்களுள் 10 மாணவர்களைத் தவிர மற்ற அனைவரும் மேல்சாதியினராகவே இருந்தனர். அவர்கள் சாதியக் கோட்பாடுகளை மிகக் கடுமையாகக் கடைப்பிடித்தனர். சீனிவாசன், பள்ளியில் தன்னுடன் பயிலும் மற்ற மாணவர்களுடன் உரிமையுடன் பழகுவதில்லை; அவர்களுடன் சேர்ந்து விளையாடுவதுமில்லை. சேர்ந்து விளையாடவும் பழகவும் நேர்ந்தால், தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்று மற்ற மாணவர்கள் அறிந்து கொள்வர்; தன்னை மிகவும் தாழ்வாக நடத்துவர் என்று அஞ்சினார். அதனால், முதல் மணியடித்தப் பின்னரே பள்ளிக்குள் செல்வார்; வகுப்பு முடியும்போது விரைந்து வீட்டிற்குச் சென்றுவிடுவார். பள்ளிப் பருவத்தில் பசுமையான எண்ணங்கள் ஏதுமின்றிப் பள்ளி வாழ்க்கையை வெறுமையாகக் கழிப்பது என்பது கொடுமையல்லவா?

அவர் வயதையொத்த சிறார்களுக்கிருந்த வாய்ப்புகளும் வசதிகளும் வாழ்க்கையும் மறுக்கப்பட்டு, சமூக இழிவுகளுக்கு உள்ளாகித் துன்பப்பட்டபோதிலும், இரட்டைமலை சீனிவாசன் கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வங்கொண்டு பயின்று வந்தார். கோவை அரசு கலைக் கல்லூரியில் சேர்ந்து இளங்கலைப் பட்டம் பெற்றார். தமிழகத்திலேயே - ஏன் இந்தியத் துணைக் கண்டத்திலேயே

ஆதித்திராவிட வகுப்பினரிடையே பல்கலைக்கழகத்தில் பயின்று இளங்கலைப் பட்டம் பெற்ற முதலாவது ஆதித் திராவிட இளைஞர் இரட்டை மலை சீனிவாசன் ஆவார். அதன் பின் வழக்கறிஞராகப் பயின்று மேன்மை பெற்றார்.

**இல்லறம் :**

1887-ஆம் ஆண்டில், அரங்கநாயகி என்பவரைத் திருமணம் செய்துகொண்டு இல்வாழ்க்கையை நல்லற வாழ்க்கையாக அமைத்துக்கொண்டார். இவர்களுக்கு இரண்டு பெண்மக்களும், நான்கு ஆண் மக்களும் பிறந்தனர்.

1880-இல் கல்லூரிப் படிப்பை முடித்து, நீலகிரியில் ஓர் ஆங்கிலேய நிறுவனத்தில் கணக்கர் பணியில் சேர்ந்தார். அங்கு பத்து ஆண்டுகள் சுதந்தரமாகப் பணியாற்றினார் என்ற போதிலும், எப்போதும் ஆதித் திராவிட மக்களின் விடுதலைக்கான வழிமுறைகளைப் பற்றியே பெரிதும் சிந்தித்து வந்தார்.

நீலகிரியில் அவர் வாழ்ந்த காலத்தில், தியோசோபிகல் சொசைட்டியைச் சேர்ந்த அம்மையார் பிளாவட்ஸ்கி, கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் ஆகியோருடன் நட்புறவு ஏற்பட்டது. ஏற்கெனவே அங்கே வசித்து வந்த அவருடைய உறவினர் பண்டிதர் அயோத்தி தாசருடன் இணைந்தும், தனித்தும் செயல்பட்டு வந்தார்.

1884-இல் அடையாறு தியோசோபிகல் சொசைட்டியின் ஆண்டுவிழா நடைபெற்றது. அந்த விழாவில் இரட்டை மலை சீனிவாசன் கலந்துகொண்டார். ஆல்காட் பிரபு அவ் விழாவில் பேசும்போது, அரசியல் கட்சிகளின் தேவை குறித்துப் பேசினார். அவர் கருத்தில் இரட்டைமலை சீனி வாசனுக்கு உடன்பாடில்லை; ஆதித்திராவிட மக்களின் முன்னேற்றங் குறித்துப் பேசாத எந்த இயக்கமும் தேவை யில்லை என்ற கருத்தியலில் உறுதியுடனிருந்தார்.

இரட்டைமலை சீனிவாசன் எண்ணியதுபோல் 1885-இல் காங்கிரசுப் பேரியக்கம் தோன்றியது. அவ்வியக்கம் தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்க வில்லை. அந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் பெரும்பாலும் மேட்டுக் குடியினராகவே இருந்தனர். அவர்கள் கீழ்நிலை மக்களின் அவலங்களை அறியவில்லை; அறிந்திருந்தாலும் அவைகளைக் குறித்து அவர்கள் கவலை கொள்ளவில்லை.

அதன் காரணமாக இரட்டைமலை சீனிவாசன் 1893-இல் தொடங்கிய ‘பறையன்’ இதழில், “காங்கிரசிற்கு சந்தாவாக ஒரு பைசாக்கூடத் தராதீர்கள். காங்கிரசிற்கு உதவி செய்தால் அது பாம்பிற்குப் பால் வார்ப்பதாகும்” என்று எழுதினார்.

பத்து ஆண்டுகள் நீலகிரியில் வாழ்ந்தார். ஆதித் திராவிட மக்கள், தங்கள் இழிநிலையை நீக்கிடவும், உரிமைகளைப் பெற்றிடவும், கல்வி வாய்ப்புகளைப் பெறவும், அரசியல் அதிகாரம் பெற்றிடவும் 1891-ஆம் ஆண்டில் ‘பறையர் மகாசன சபை’யைத் தொடங்கினார்.

பறையர் அமைப்பைச் சாதியமைப்பாகப் பலர் இழிவு படுத்திச் சித்தரித்தபோது, கவிஞர் சுப்பிரமணி பாரதியார், “பறையர்களை மிருகங்கள்போல் நடத்துவது குற்றமே யொழிய பறையர் என்று அழைப்பது குற்றமில்லை” என்று தனது ‘பஞ்சமர்’ என்ற கட்டுரையில் எழுதினார்.

இரட்டைமலை சீனிவாசன் பறையர் மகாசன சபை யைத் தோற்றுவித்த 1891-ஆம் ஆண்டிலேயே, அயோத்தி தாசப் பண்டிதர் நீலகிரியில் ‘திராவிட மகா சபை’யின் முதல் மாநாட்டை 01.12.1891-இல் நடத்தினார். அந்த மாநாட்டில் பண்டிதர் பத்து தீர்மானங்களை நிறைவேற்றி, ஆங்கில அரசிற்கும், காங்கிரசு பேரியக்கத் திற்கும் அனுப்பி வைத்தார்.

1892-இல் அயோத்திதாசர் ‘திராவிட மகாசன சபை’ என்ற பெயரை ‘ஆதிதிராவிட மகாசன சபை’ எனப் பெயர் மாற்றிப் பதிவும் செய்தார். அயோத்திதாசப் பண்டிதருடைய மனைவி இறந்த பின்னர், இரட்டைமலை சீனிவாசன் தன் தங்கை இலட்சுமியைப் பண்டிதருக்குத் திருமணம் செய்து வைத்தார்.

“அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?” என்று சொல்லப்பட்ட காலத்திலேயே இரட்டைமலை சீனிவாசன் தன் தங்கையை எட்டாம் வகுப்புவரை படிக்க வைத்திருந் தார் என்பதால், பெண் கல்விக்கு இரட்டைமலை சீனி வாசன் முக்கியத்துவம் தந்துள்ளார் என்பதை அறிகிறோம்.

**நிர்வாக ஆட்சிப்பணித் துறைத் தேர்வு :**

இரட்டைமலை சீனிவாசன் எண்ணியபடியே, காங்கிரசு இயக்கம் மேட்டுக்குடியினரின் நல் வாழ்வுக்காகவே ஏற்பட்ட இயக்கம் என்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கை களில் ஈடுபட்டது.

நிர்வாக ஆட்சிப்பணித் துறைத் தேர்வு இங்கிலாந்து நாட்டில் நடைபெற்று வந்தது. ஆதலினால் ஆங்கிலேயரே அந்தத் தேர்வில் வெற்றிபெற்று ஆட்சியராகப் பணியில் இருந்துவந்துள்ளனர். மேட்டுக்குடியினர் அந்த நிர்வாக ஆட்சிப் பணித் தேர்வு இந்தியாவில் நடத்தப்பட்டால்தான் இந்தியர்கள், தேர்வு எழுதி வெற்றிபெற்று இந்திய ஆட்சிப் பணியில் ஆட்சியராகப் பணியில் அமரமுடியும் என்று எண்ணியதால், காங்கிரசு இயக்கம், அவர்கள் விரும்பி யதற்கிணங்க ஒரு விண்ணப்பத்தைத் தயார் செய்து நூறு பேர்களிடம் கையெழுத்து வாங்கி இங்கிலாந்துப் பாராளு மன்றத்தில், அந்த மன்றத்தின் உறுப்பினராகயிருந்த காங்கிரசுத் தலைவர் தாதாபாய் நௌரோஜி மூலம் சமர்ப்பித்தனர்.

இதனை அறிந்துகொண்ட இரட்டைமலை சீனிவாசன், காங்கிரசாரின் இந்த நடவடிக்கையை எதிர்த்திட மனங் கொண்டார். பறையர் மகாசன சபையினரின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்.

அவரின் முயற்சியில் 1892 டிசம்பர் 23-ஆம் நாள், தாழ்த்தப்பட்ட மக்களின் கூட்டம் சென்னை இராயப் பேட்டையில் உள்ள வெஸ்லி மிஷன் பள்ளியில் நடை

பெற்றது. இந்தக் கூட்டத்தில் இரட்டைமலை சீனிவாசன், "இந்திய ஆட்சிப் பணித் தேர்வினை இந்தியாவில் நடத்தினால் இந்தியர்கள் என்ற போர்வையில் ஆதிக்கச் சாதியினர் மட்டுமே இத் தேர்வில் வெற்றிபெற முடியும். தாழ்த்தப்பட்ட மக்களை அவர்கள் மேலும் இழிவுசெய்து கொடுமைப்படுத்துவார்கள்" என்று கூறி அத் தேர்வினை இந்தியாவில் நடத்தக்கூடாது என்று ஒரு விண்ணப்பத் தைத் தயார் செய்து, 3412 பேர் கையெழுத்துகளை வாங்கி சர். ஜார்ஜ் செஸ்னி என்ற நாடாளுமன்ற உறுப்பினர் மூலம் அனுப்பி வைத்தார். அதன்மூலம் அப்போது வரவிருந்த பெருங்கேடு தடுத்து நிறுத்தப்பட்டது.

**'பறையன்' இதழ்**

'பறையன்' எனத் தன் சாதியின் பெயரைச் சொல்லித் தன்னை இழிவுபடுத்திய ஆதிக்கச் சாதியினரை நோக்கி, அதே சாதிய அடையாளத்துடன் பறையர் இன மக்களைத் தட்டியெழுப்ப உறுதிகொண்டு, 'பறையன்' இதழை 1893 அக்டோபர் திங்களில் தொடங்கினார்.

தொடக்கத்தில் திங்கள் இதழாக வந்த 'பறையன்' இதழ் மூன்று திங்கள்கள் கடந்த பின்னர் வார இதழாக வரத் தொடங்கியது. இதழ் ஒன்றின் விலை இரண்டணா. 'பறையன்' இதழுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்துள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சனைகள், இதர சமூகத் தினரின் தீண்டாமைக் கொடுமைகள், சனாதன மக்களுக்கு ஆதரவாயிருந்த காங்கிரசுக்குக் கண்டனம், கல்வி உரிமை, நிலமீட்புப் போராட்டம், அரசுக்கு விண்ணப்பங்கள் ஆகியவை குறித்த செய்திகள் அந்த இதழில் தொடர்ந்து வெளியிடப்பட்டன.

தாழ்த்தப்பட்டோரிடையே அரசியல் உணர்வினை ஊட்டியதிலும், தாழ்த்தப்பட்டோரின் தேவைகளை அரசுக்குத் தெரியப்படுத்தியதிலும் 'பறையன்' இதழின் பங்கு மகத்தானது.

மதிப்புரைக்காக 'சுதேசமித்திரன்' இதழுக்கு 'பறையன்' இதழ் ஒரு படி அனுப்பிவைக்கப்பட்டது. சுதேசமித்திரன் ஆசிரியர் சி.ஆர்.நரசிம்மன், மேசையின்மேல் பறையன் இதழ் இருந்தது. அதை அவர் கையில் எடுத்துப் பார்க் காமல், பேனாவின் பின்பகுதியால் பறையன் இதழைப் புரட்டிப் பார்த்தார். பறையன் இதழைத் தொட்டால் தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்ற சனாதன எண்ணமே அதற்குரிய காரணமாகும். 1893 முதல் 1900 வரை பறையன் இதழ் தொடர்ந்து வந்தது.

**நிலம் வேண்டிப் போராட்டம் :**

நிலம் வேண்டி 1894ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ஆம் நாள் இரட்டைமலை சீனிவாசன் தலைமையில் அன்றைய கிருஷ்ணா மாவட்டத்தில் போராட்டம் நடை பெற்றது. போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்த ஆங்கில அரசு, ஆதித்திராவிட மக்கள் உழவுத் தொழிலில் ஈடுபட நஞ்சை நிலம் வழங்கியது; அவ்விதம் வழங்கிய நிலங்கள் பஞ்சமி நிலங்கள் என அழைக்கப்பட்டன.

**விக்டோரியா மண்டபத்தில் ... :**

சென்னை விக்டோரியா மண்டபத்தில் 07.10.1895 அன்று ஆதித்திராவிட மக்களின் மாநாடு நடை பெற்றது. அரசுப் பணிகளிலும் கல்விச் சாலைகளிலும் ஆதித்திராவிட மக்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்றும், சட்ட மன்றங்களில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும், இரட்டைமலை சீனிவாசன் பேசினார். மேலும், எங்கள் இன மக்கள், மற்ற இன மக்களுடன் சமத்துவத்துடனும், சமாதானத்துடனும், சுயமரியாதை யுடனும் வாழவே விரும்புகின்றனர். எங்கள் முன்னேற்றத் தைத் தடுக்க முற்பட்டால் எதிர்வினையாற்றுவோம். எவ் வகைக் கொடுமைகளையும் ஏற்கமாட்டோம். சென்னை மைலாப்பூரில் வசிக்கும் நீதிபதி வீட்டிற்கு அருகில் பிராமணர் தெரு, பறையர் உள்ளே வரக்கூடாது என்று இருந்த அறிவிப்புப் பலகையை உடனே அகற்ற வேண்டு மென்று கடுமையாகக் கூறினார்.

இரட்டைமலை சீனிவாசனின் மாநாட்டு உரை நாடெங் கும் பரபரப்பாகப் பேசப்பட்டது. எம்.வீரராகவாச்சாரியார், ஜி.சுப்பிரமணி ஐயர் போன்ற காங்கிரசுத் தலைவர்கள், வெள்ளையரின் தூண்டுதலால் பறையர்கள் கலகம் செய்ய ஆரம்பித்துவிட்டனர் என்றும், இரட்டைமலை சீனிவாசன் துரோகியாகிவிட்டார் என்றும் பேசத் தலைப்பட்டனர்.

இவர்களின் மிரட்டலுக்கு அஞ்சாது சீனிவாசன் 23.10.1895-இல் சென்னை டவுன் ஹாலில் கூட்டத்தைக் கூட்டி, கடுமையாக ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் "தடி எடுத்தால் ஒரே நாளில் சமாதானத்திற்கு வழி ஏற்பட்டுவிடும். ஆனால் அதை நாங்கள் விரும்ப வில்லை" என்றிருந்தது. ஆதிக்க சாதியினருக்கு இந்த எச்சரிக்கை பேரிடியாக அமைந்தது.

**தென் ஆப்பிரிக்காவில் ... :**

ஆதித்திராவிடமக்கள் மீது ஆதிக்கச் சாதியினர் கட்டவிழ்த்துவிடும் வன் சாதியக் கொடுமைகளை, ஆங்கிலேயரிடம் எடுத்துக்கூறி அவர்களின் அன்பையும் ஆதரவையும் ஆதித்திராவிட மக்களின்பால் ஈர்ப்பதற் காக, 1900-ஆம் ஆண்டு இலண்டன் செல்வதற்காக பம்பாய் சென்றார். அங்கிருந்து கப்பலில் பயணித்தார்; அந்தக் கப்பல் அவரை ஆப்பிரிக்காவின் ஜான்ஸிபார் தீவிற்குக் கொண்டு சென்றது. இரண்டு ஆண்டுகள் அந்தத் தீவில் வாழ்ந்த பின்னர் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றார். 1904-இல் நெட்டால் சென்றார். அங்கு அந்தோணி பீட்டர் என்பவரின் உதவியால் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியில் அமர்ந்தார். வழக் கறிஞராக இருந்த காந்தியாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றார். காந்தியாரும் லியோ டால்ஸ் டாயும் நல்ல நண்பர்கள். "டால்ஸ்டாய் எழுதிய கடிதத்தில், தீமை செய்தவர் நாணும் வகையில் மன்னித்தலே மாண்புடையசெயல் என்று எழுதியுள்ள வரிகள் தம் உள்ளத்தைக் கவர்ந்தன" என்று காந்தியார் எழுதினார். அதற்குப் பதிலளித்த டால்ஸ்டாய், "இந்தப் பெருமை

யெல்லாம் உங்கள் நாட்டின் முதுமொழியான தமிழ் மொழியிலுள்ள திருக்குறளையே சாரும்'' எனக் கூறி அந்தத் திருக்குறளையும் எழுதியிருந்தார்.

***இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண***
***நன்னயம் செய்து விடல்*** (குறள் 314)

அதன்பின்னர் காந்தியார் தமிழ் கற்க விரும்பினார். 1921-இல் தாயகம் திரும்பினார் இரட்டைமலை சீனிவாசன்.

**சட்டமன்றத்தில் ... :**

இரட்டைமலை சீனிவாசன் தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்தபோதே 1916-இல் 'தென்னிந்தியர் நலச்சங்கம்' (நீதிக்கட்சி) தோன்றிவிட்டது. அக்கட்சித் தலைவர்களுடன் நல்ல தொடர்பில் இருந்துள்ளார்; அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு அரசியலில் தொடர்ந்து செயல்பட முற்பட்டார். அதேபோன்று, இறுதிவரை பெரியாருடனும், அம்பேத்கருடனும், திராவிட இயக்கத்துடனும் இணைந்தே செயல்பட்டு வந்தார் - பெரியாரும் அம்பேத்கரும் அவரினும் வயதில் இளையோர் என்ற போதிலும்!

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின்படி 1920-இல், முதல் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று ஐந்து தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். அடுத்து 19.11.1923-இல் நடைபெற்ற தேர்தலுக்குப்பின் இரட்டைமலை சீனிவாசன், எல்.சி.குருசாமி உள்ளிட்ட பத்து தாழ்த்தப் பட்டவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இரட்டைமலை சீனிவாசன், 1923 நவம்பர் முதல் 1937-இல் சட்டசபை கலைக்கப்படும் வரை உறுப்பினராக இருந் தார். அப்போது ஆதித்திராவிட மக்களின் வாழ்வியல் உரிமைகளுக்காகப் பாடுபட்டார்.

22.08.1924-இல் சட்டமன்றத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுவீதிகளில் நடக்கவும்; பொதுக்கிணறு, குளங்களில் நீர் எடுக்கவும்; அரசு அலுவலகங்களிலும் பொது இடங் களிலும் ஆதிக்கச் சாதியினர் பெற்றிருக்கின்ற உரிமைகள் அனைத்தும் தீண்டப்படாத மக்களும் பெறுதற்கும் அரசு ஆணை வேண்டி கடந்தகாலத்தில் இம்மன்றத்தில் பித்தா புரம் மகாராஜா, எம்.சி.இராஜா, சௌந்திர பாண்டியன் ஆகியோர் பேசியதை நினைவூட்டி அரசாணை வெளி யிடக் கோரி தீர்மானம் கொண்டுவந்தார். அதை ஏற்றுக் கொண்ட அரசு, 24.2.1925-இல் அரசாணையை அரசிதழில் வெளியிட்டது.

எம்.சி.இராஜா 20.1.1922-இல் சட்டசபையில் கொண்டு வந்த தீர்மானத்தின்படி பறையர், பள்ளர் என்ற பெயர் நீக்கப்பட்டு 'ஆதித்திராவிடர்' என்ற பெயர் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 25.3.1922-இல் அரசாணை எண் 817 வழங்கப்பட்டது. ஆனால் இரண்டு ஆண்டுகள் ஆகியும் பல பத்திரப் பதிவு அலுவலகங்களில் பறையன், பள்ளன் என்றே பதிவு செய்யப்பட்டது. இதனை அரசு உடனே தடுத்துநிறுத்தவேண்டும் என இரட்டைமலை சீனிவாசன் 25.8.1924-இல் சட்டசபையில் முறையிட்டார். முதல்வர் பனகல் அரசர் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பரம்பரை மணியக்காரர் முறையை நீக்கி, அனைத்து சாதியினரும் மணியக்காரராக வழிவகை செய்யவேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்தார். இவருடைய கோரிக்கை 60 ஆண்டுகளுக்குப்பின் நிறைவேறியது.

"தெலுங்கு மொழி பேசும் தாழ்த்தப்பட்டோர் 'மாலா' 'மாதிகா' ஆகியோரை 'ஆதிஆந்திரர்' என்று அழைப் பதைப் போல், 'புலையர்', 'தீயர்'களை 'மலையாளத் திராவிடர்' என அழைத்திடல் வேண்டும்'' என்று 6.2.1925 அன்று சட்டமன்றத்தில் கோரினார்.

அதேநாளில் நிதி நிலை அறிவிக்கையின்போது ஆதித்திராவிட மக்களுக்கு, இருப்பிட வசதியும், சுகாதாரம் பேணுதற்கும், கல்வி வாய்ப்பினைப் பெற்றிடவும் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று உரையாற்றினார்.

24.9.1929 அன்று மதுவினால் ஏழை மக்கள் செல்வத் தையும் உடல் நலத்தையும் இழந்து வாடுகின்றனர். எனவே மதுவிலக்கினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்தார். அரசு, வருவாய் இழப்பு ஏற்படும் என்று கூறித் தீர்மானத்தை ஏற்க மறுத்தது. அதன் பின் இரட்டைமலை சீனிவாசன், விடுமுறை நாட்களி லாவது மதுக்கடைகளை மூடிடவேண்டும் என்று வலி யுறுத்தினார். அரசு, அதனை ஏற்றுக்கொண்டது.

31.1.1933 அன்று, சட்டமன்ற உறுப்பினர் ப. சுப்பராயன் ஆதித்திராவிடர்கள் ஆலயங்களில் நுழைய அனுமதிக்கச் சட்டமியற்ற வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்தார். இரட்டைமலை சீனிவாசனும் அதனை ஆதரித்துப் பேசி னார். அத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 56 வாக்குகள் ஆதரவாகவும், 19 வாக்குகள் நடுநிலையாகவும் கிடைத்தன; எதிர்ப்பின்றி தீர்மானம் நிறைவேறியது. ஆனால், சனாதன இந்துக்களின் நம்பிக்கைக்கு எதிரானது என்பதால் தலைமை ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆகவே அதற்கு சட்டஏற்பு கிட்டவில்லை.

**ஆதித் திராவிடர்களின் முதல் மாநில மாநாடு :**

ஆதித்திராவிடர் முதல் மாநில மாநாடு 29.01.1928-இல் பச்சையப்பன் கல்லூரியில் இரட்டைமலை சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. இம் மாநாட்டின் முக்கிய நோக்கம், வரவிருக்கின்ற சைமன் குழுவிற்கு அறிக்கை அளிப்பதற்கான குழுவினை அமைப்பதும், ஆதித் திராவிடர்களின் தேவைகளை வலியுறுத்துவதும் ஆகும்.

ஆதித் திராவிடர்களுக்குத் தனித் தொகுதி வேண்டும் என்றும், 21 வயது அடைந்த அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்படவேண்டும் என்றும், கல்வி, வேலை வாய்ப்பு களில் உரிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்றும், தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி உள்பட அனைத்துக் கல்வியும் இலவசமாக வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1927 வரை பச்சையப்பன் கல்லூரியில் ஆதித் திராவிட மாணவர்களை சேர்ப்பதில்லை. 1928-இல் தான் முதன் முறையாகப் பச்சையப்பன் கல்லூரியில் ஆதித் திராவிட

மாணவர்கள் கல்வி பயில அனுமதிக்கப்பட்டார்கள். அதற்காக, மதுரை பிள்ளை தன் வரவேற்புரையில் பச்சையப்பன் கல்லூரியினருக்கு நன்றி கூறினார்.

**வட்டமேசை மாநாடு :**

1930ஆம் ஆண்டு, நவம்பர் 12ஆம் நாள் இங்கிலாந்து நாட்டின் இலண்டன் மாநகரில் வட்டமேசை மாநாடு நடைபெற்றது. இந்தியாவிலிருந்து டாக்டர் அம்பேத்கர், இரட்டைமலை சீனிவாசன், ஜெயகர் சர்.ஏ.டி.பன்னீர் செல்வம், சர்.ஏ.இராமசாமி முதலியார், சர்.ஏ.பி.பாத்ரோ, ஆகாகான், க்யூபர்ட்கார், முகமதலி ஜின்னா, பிக்கானீர் மகாராஜா, சீனிவாச சாஸ்திரி, மற்றும் சில இந்தியப் பிரதிநிதிகள் அம்மாநாட்டில் பங்கேற்றனர். இந்த முதல் மாநாட்டில் காங்கிரசார் யாரும் கலந்துகொள்ளவில்லை.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ், வின்சர் கேசல் மாளிகையில் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். மாநாட்டிற்கு வந்திருந்த ஒவ்வொருவரும் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு மன்னருடன் கைக்குலுக்கினர். இரட்டைமலை சீனிவாசன் மட்டும் கைக்குலுக்காமல் தன் கையை இழுத்துக்கொண்டார்.

“ஏன் கைக்குலுக்க மறுக்கிறீர்கள்?” என்று மன்னர் வினவினார். அப்போது அவர், “எங்கள் நாட்டில் நான் தீண்டத்தகாதவன் - சாதியில் பறையன், என்னை நீங்கள் தொடக்கூடாது, தொட்டால் தீட்டாகி விடும்” என்று கூறினார். அவர் அணிந்திருந்த சட்டையில் “நான் பறையன்; என்னை எவரும் தீண்டாதீர்!” என்று எழுதிய அறிமுக அட்டை இருப்பதை அப்போதுதான் மன்னர் கண்ணுற்றார்.

ஆனால் மன்னர், தீண்டாமையைப் பற்றி சிறிதும் எண்ணாமல் இரட்டைமலை சீனிவாசனை அருகில் அழைத்துக் கைக்குலுக்கிவிட்டு, அனைவரையும் நோக்கி, “இந்தியாவில் தீண்டப்படாதவர், விபத்தில் கிழே விழுந்து விட்டால் அவர்களைத் தொட்டுத் தூக்கிவிடாமல், விழுந்தவன் விழுந்து கிடக்கட்டும் என்று சென்று விடுவீர்களா?” என்று கேட்டு வருந்தினார்.

“ஆம். மாட்சிமை மிக்க மன்னரின் ஆட்சியில் மிகக் கேவலமாகத்தான் தீண்டப்படாத மக்கள் நடத்தப்படுகிறார்கள்” என்று இரட்டைமலை சீனவாசன் சாதியக் கொடுமைகளை விரிவாகத் துணிந்து எடுத்துரைத்தார்.

ஆதித்திராவிட மக்களுக்கு இரட்டை வாக்காளர் தொகுதி வழங்கப்பட வேண்டும் என்றும், ஆதிதிராவிட மக்களின் விகிதாசார அளவுக்கு ஏற்பக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் உரிய பங்கு அளிக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்திப் பேசினார்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி அம்பேத்கரும் மிக விரிவாக இந்த மாநாட்டில் பேசினார்.

வட்டமேசை மாநாட்டிற்குப் பின்னர், பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்ட் 1932-ஆம் ஆண்டு ஆகத்து 17ஆம் நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க வகுப்பு வாரித் தீர்ப்பை வழங்கினார்.

அம்பேத்கரும், இரட்டைமலை சீனிவாசனும் விரும்பியவண்ணம், தீண்டப்படாத மக்களுக்கு இரட்டை வாக்குரிமையும், தனித்தொகுதியும் வழங்கப்பட்டன. இந்தத் தீர்ப்பு சிறுபான்மைக் குழுவில் இருந்த முசுலீம்களுக்கும், கிறித்தவர்களுக்கும், ஆங்கிலோ-இந்தியர்களுக்கும் சேர்த்தே வழங்கப்பட்டுள்ளது.

**பூனா ஒப்பந்தம் :**

எரவடா சிறையிலிருந்த காந்தியார், “தீண்டப்படாதவர்களுக்கு வழங்கப்பட்ட தனித் தொகுதி முறையை நீக்காவிடில் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன்” என்று உண்ணா நோன்பினைத் தொடங்கினார். காந்தியாரின் நியாயமற்ற எதிர்ப்பினால் கிடைத்த உரிமையை இழக்க நேர்ந்தது. பூனா ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒப்பந்தத்தில் அம்பேதகர், இரட்டைமலை சீனிவாசன், என்.சிவராஜ் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

1935-இல் அம்பேத்கர் மதம் மாற விரும்பியபோது, இரட்டைமலை சீனிவாசன், “நாம்தான் இந்து மதத்தில் இல்லையே, அவர்ணஸ்தர் (வர்ணம் அற்றவர்கள்) ஆயிற்றே. நாம் இந்துவாக இருந்தால்தானே மதம் மாறவேண்டும்” என்று தந்தி மூலமாகத் தன் கருத்தை அம்பேத்கருக்குத் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் அரசு, இரட்டைமலை சீனிவாசனின் சமூகப் பணிகளைப் பாராட்டி, 1926 சனவரி முதல் நாள் அன்று ‘இராவ் சாகிப்’ பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. அதன் பின் 1930 சூன் மூன்றாம் நாள், ‘இராவ் பகதூர்’ பட்டமும், 1936 சனவரி முதல் நாள் ‘திவான் பகதூர்’ பட்டமும் அளித்துப் பெருமைப்படுத்தியது.

1939-இல் திரு.வி.க தலைமையில், எம்.சி.இராஜா, இராஜாஜி, பாசுதேவ் ஆகியோர் பங்கேற்ற பாராட்டு விழா நடந்தது. அந்த விழாவில், ‘திராவிடமணி’ என்ற பட்டத்தை இரட்டைமலை சீனிவாசனுக்குத் திரு.வி.க வழங்கினார். அவ் விழாவில் சீனிவாசன், “50 ஆண்டுகள் தொண்டு புரிந்தும் எமக்கு அயர்வைத் தரவில்லை. ஒதுக்கப்பட்ட மக்கள் தங்களின் உரிமைகளைச் சிறிது காலத்தில் பெற்றுவிடுவர். அவர்களின் கீழான நிலைக்கு அவர்களிடம் உள்ள அமைதியும் அன்புக் குணமுமே காரணமாகும்” என்று பேசினார்.

அன்பு வழியிலும் அறவழியிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் மேன்மைக்காகப் பாடுபட்ட இரட்டைமலை சீனிவாசன் 18.9.1945 அன்று இயற்கை எய்தினார்.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், நடுவண் அரசு வெளியிட்ட இரட்டைமலை சீனிவாசனின் அஞ்சல் தலையை 15.8.2000-இல் வெளியிட்டுச் சிறப்பு செய்தார்.

**ஆதித்திராவிட மக்களின் எழுச்சி நாயகன் இரட்டைமலை சீனிவாசன் பேரும் புகழும் ஓங்குக!**

## மா.பெ.பொ.க பெரம்பலூர் மாவட்டச்செயலாளர்

# வரகூர் மா. நாராயணசாமி

## 91-ஆம் அகவைநாளில் நேர்காணல்



- **இரா.கலியமூர்த்தி : வணக்கம் ஐயா!**

மா.நாராயணசாமி : வணங்கியபடியே வாங்க! வாங்க!

- **கையில் என்ன? ஊசி போட்டுக்கொண்டதற்கான அடையாளம் இருக்கிறதே!**

பத்து நாட்களாக உடல்நலம் இல்லாமல், சளித் தொல்லை, மூச்சுவிடமுடியவில்லை. தனலட்சுமி - சீனிவாசன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன்.

கடைசியாக "அறுவை சிகிச்சை செய்யவேண்டும். துணைக்கு யார் வந்திருக்கிறார்கள்?" என்றனர். "யாருமில்லை" என்றேன். "துணையோடு வாருங்கள்" என்று அனுப்பிவிட்டனர்; வந்துவிட்டேன்.

- **வயது என்ன? 90 இருக்குமா?**

ஆமாம். 90-தான் நடக்கிறது. 30.11.2019-இல் 91 ஆரம்பம்.

- **இதற்குமேல் அறுவை சிகிச்சை வேண்டாம். பெருந் தொல்லை.**

நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனாலும் மூச்சுவிட முடியவில்லை. 10 அடிகூட நடக்கமுடிய வில்லை. நடுமகன் மேகநாதன்தான் பார்த்துக் கொள்கிறான். வீட்டில் உள்ள பேரன், பேத்திகள், மருமகள் எல்லோரும் சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள் என்று நச்சரிக்கிறார்கள்; முடியவில்லை. அவ்வப் போது மாத்திரை போட்டுக்கொள்கிறேன்; ஆனாலும் சரியாகவில்லை.

- **உங்கள் இளமைக் காலம் பற்றிச் சொல்லுங்கள்.**

எங்கள் குடும்பம், கொள்ளுத்தாத்தா நாராயணசாமி காலத்தில் பெரியவெண்மணியிலிருந்து வரகூருக்கு வந்துள்ளது. அவருக்கு மூன்று மகன்கள், ஒரு பெண். மூத்தமகன் நா.கோவிந்தசாமிக்கு மாரி முத்து, இராமாயி ஆகிய இரு பிள்ளைகள்.

என் பெற்றோர் மாரிமுத்து - செல்லம்மாளுக்கு பிறந்த பெண் குழந்தைகள் அடுத்தடுத்து இறந்து விட்டன. நான் 6-ஆவது குழந்தை.

இன்று, 30.11.2019-இல் நாராயணசாமி (91) ஆகிய நான் மட்டுமே உயிருடன் இருக்கிறேன்.

- **எதுவரை படித்தீர்கள்?**

உள்ளூரில் இருந்த தொடக்கப் பள்ளியில் 5-ஆம் வகுப்பு வரை படித்தேன். மேற்கொண்டு படிக்க என் தந்தையார் ஒப்புக்கொள்ளவில்லை. 10 ஏக்கர் நிலம், நிறைய கால்நடைகள் இவற்றைப் பார்த்துக் கொள்ள நான் பயன்பட்டேன்.

- **பெரியாரை எங்கே, எப்போது பார்த்தீர்கள்?**

எனக்கு வயது 19 நடந்தது. 1948-இல் எங்க மூத்த அக்கா அலமேலு, மாமா இ.க.தங்கவேல் ஆகி யோரைப் பார்க்க இலந்தங்குழிக்கு அடிக்கடி போவேன். மாமா சிவபக்தர். அவரைப் பார்த்து நானும் பக்தனானேன்.

அப்போதுதான் பெரியார் அரியலூர் வருகிறார் எனத் தெரிந்து நானும், மாமாவும் ஆ.செ.தங்க வேல் மற்றும் சிலரும் அரியலூருக்கு பெரியாரைப் பார்க்கப்போனோம். பெருமாள் கோயில் தெரு வில் பி.ஆர்.சின்னசாமி தலைமையில் கூட்டம் நடந்தது.

பெரியார் கடவுள், மதம், புராணம், சமுதாயம் எதையும் விட்டுவைக்கவில்லை. அதிலுள்ள வண்ட வாளங்களை ஆதாரத்துடன் விளக்கிப் பேசினார். அதைக்கேட்ட எங்களுக்குப் பேரதிர்ச்சி! என்னடா இப்படிப்பேசுகிறார்? பயங்கரமா இருக்கிறதே! மறுக்க முடியாத அளவுக்கு ஆதாரமும் இதோ கையில் வைத்திருக்கிறேன் என்கிறாரே! வியப்பாக இருந்தது. மூன்று மணிநேரம் பேசினார். அவர் பேச்சைக் கேட்ட எல்லாரும் கற்சிலைபோல் உட்கார்ந்திருந் தனர். எந்தஒரு சலசலப்புமில்லை. பேச்சு முடிந்தது; வீட்டுக்கு வந்தோம். அவ்வளவுதான். அன்று முதல் சுயமரியாதைக்காரனாக மாறிவிட்டேன்.

- **திருமணம், குடும்பம் பற்றிச் சொல்லுங்கள்.**

1950-இல் பெரிய திருக்கோணம் தாய்மாமன் மகள் அலமேலுவைக் கட்டிவைத்தனர்.

எங்களுக்கு மூன்று மகன்கள், ஒரு மகள். முதல் மகன் பாண்டியன் - பொறியாளர்; 2 ஆண்டுக்குமுன் இறந்துபோனார். 2-வது மகன் மேகநாதன், 3-வது மகன் காமராசு, 4-வது பெண் அறிவுக்கண்ணு. மகளுக்குப் பெரியார் பெயர் வைத்தார்.

- **இயக்கப் பணிகள் பற்றிச் சொல்லுங்கள்.**

பெரியார் பேச்சைக் கேட்டபின்னர் நெற்றியில் விபூதி பூசுவது போச்சு. பெயருக்குப் பின்னால் சாதிப்பட்டம் போச்சு. சாதிமறுப்பில் தீவிரம்.

உள்ளூரில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த கந்தனுக்கு சுயமரியாதைத் திருமணம் நடத்தி வைத்தோம். “சாதி இல்லை; தீட்டு இல்லை என் கிறீர்களே! சாப்பிட்டுப் போங்கள்” என்றனர். அவ்வாறே நான், அந்தூர் கி.இராமசாமி, ஆ.செ.தங்கவேல், கூடலூர் சுப்பையா அனைவரும் சாப்பிட்டு விட்டு வீடு திரும்பினோம். ஊரில் சாதிக் கட்டுப்பாடு செய்துவிட்டார்கள். எனக்கு அச்சமாக இருந்தது. ஆனால், நம் தோழர்கள், “எதற்கும் கவலைப் படாதீர்கள்; நாங்கள் இருக்கிறோம்” என்றனர். காலப்போக்கில் எல்லாம் சரியாயிற்று.

- **உங்கள் பொதுத்தொண்டு பற்றித் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.**

என்னை மூன்று முறை ஊராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர் (1960-65; 1970-75; 1985-90). அந்தூரில் இருந்து வரகூரைப் பிரித்து தனிப் பஞ்சாயத்து ஆக்கினேன்.

1967-இல் வரகூரில் இருந்த 110 வீடுகள் தீயிக்கு இரையாயின. ஊர்க் கமிட்டி அமைத்து மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டும் பலனில்லை. நேரே அறிஞர் அண்ணாவிடம் சென்று மனு கொடுத்தேன். 3 மாதம் கழித்து உரு.1,10,000/- வழங்கி ஆணை வந்தது. பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் J.S.இராசு அவர்கள், “எப்படி ஐயா இந்தக் காரியத்தைச் சாதித்தீர்கள்!” எனக் கட்டிப்பிடித்துக் கொண்டு பாராட்டினார். தெரு மேம்பாட்டு வசதி, குடிதண்ணீர் வசதி, சாலைகள், பாலங்கள் என அன்றைக்கு நாங்கள் செய்ததைவிட, இன்றுவரை ஒரு கொம்பனும் அதிகம் செய்துவிடவில்லை.

- **அறிஞர் வே.ஆனைமுத்துவுடன் எப்போதிருந்து தொடர்பு?**

வீரானந்தபுரம் கணபதி குன்னத்தில் ஆசிரியர் வேலையில் இருந்தார். அந்தப் பகுதியில் பலரைப் பகுத்தறிவாளராக மாற்றிய பெருமை அவரையே சாரும். நானும் மற்ற தோழர்களும் அவரை அடிக்கடி சந்திப்போம். பெரம்பலூர் வட்ட தி.க. கூட்டம் குன்னத்தில் 2 நாள் மாநாடுபோல நடந்தது. அது முதல் தோழர் ஆனைமுத்துவோடு தொடர்பு.

அதனைத் தொடர்ந்து, நடந்த 26.11.1957-இல் சாதி ஒழிப்புப் போராட்டம், இந்திய தேசப்பட எரிப்புப் போராட்டம் (1960), இராமாயண எதிர்ப்புக் கிளர்ச்சி (1966) போன்றவற்றில் கலந்துகொண்டு கைதாகி விடுதலையானேன்.



புலவர்
**இரா. கலியமூர்த்தி**

தோழர் எஸ்.டி.விவேகி, வே. ஆனைமுத்து, கூடலூர் சுப்பையா, அந்தூர் இராமசாமி, ஆ.செ.தங்கவேலு இன்னும் பலரையெல்லாம் அழைத்துத் திராவிடர் கழகக் கூட்டங்கள் நடத்தியுள்ளேன். அணைக்கரை டேப் தங்கராசை வைத்தும் கூட்டம் நடத்தினேன்.

06.06.1966-இல் வரகூருக்குப் பெரியாரை அழைத்துக் கூட்டம் நடத்தினேன்.

ஆனைமுத்து ஆரம்பித்த ‘பெரியார் சமவுரிமைக் கழகம்’ (இப்போது மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி) என்னை அவருடன் அதிக நெருக்கம் கொள்ளச் செய்தது.

2017 வரை பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் பிறந்த நாள் கூட்டம், அம்பேத்கர், பாரதிதாசன் பிறந்த நாள் கூட்டம், மலர் வெளியீடு மாநாடு எனப் பணியாற்றி இருக்கிறேன்.

2000 ஆண்டில் என் துணைவியார் இறந்தார். அதன் பிறகு உடல்நலம் கெட்டது.

2012 முதல் ‘நாராயணசாமி - அலமேலு கல்வி அறக்கட்டளை’ (பதிவு எண்.53/2012) என ஒன்றை நிறுவி ஆண்டுதோறும் 10-ஆம் வகுப்பில் முதல், இரண்டு, மூன்று மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ரூ.3000, ரூ.2000, ரூ.1000 பரிசு அளித்து வருகிறேன். 200-க்கும் மேற்பட்ட சுயமரியாதைத் திருமணங்கள் நடத்தியிருக்கிறேன். ஆதிதிராவிட மாணவர்கள் கோயில்நுழைவு நடத்தியிருக்கிறேன்.

- **இரா. கலியமூர்த்தியுடன் எப்போது தொடர்பு ஏற்பட்டது?**

அரியலூரில் ஆ.செ.தங்கவேல், பெரியார் அங்காடியும் தேநீர்க் கடையும் நடத்தினார். அங்கே வந்தபோதுதான், ஆனைமுத்துவுடன் உங்களை 1976-இல் சந்தித்தேன். அதுமுதல் நமது நட்பு தொடர்கிறது.

- **30.11.2019-இல் தங்களுக்கு 91-ஆவது பிறந்த நாள் வருகிறது. அன்று இரா.கலியமூர்த்தி, புலவர் அரங்கநாடன், தமிழ்க்களம் இளவரசன், காட்டுமன்னார்குடி தி.துரைசித்தார்த்தன் ஆகியோர் தங்களுக்குப் பிறந்தநாள் விழா கொண்டாட முடிவு செய்திருக்கிறோம் என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

மா.நாராயணசாமி : நன்றி, வணக்கம், வாருங்கள்!

# வில் வித்தை !

● இராமியா

“மகனே நீ வில் வித்தையில் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று விட்டாய். ஒவ்வொரு தகப்பனும் தன் மகன் தன்னைவிடச் சிறந்தவனாக இருக்க வேண்டும் என விரும்புவது இயற்கை. நீயோ என் விருப்பத்தை நிறை வேற்றியது மட்டுமல்லாமல், எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தி விட்டாய். நான் கற்றுத்தந்த வில் வித்தையில் என்னையே மிஞ்சும் அளவிற்கு நீ பயிற்சி பெற்று இருப்பதைப் பார்க்க என் மனம் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது” என்று வேடர் குலத் தலைவனான இரண்ய தனுசு தன் மகன் ஏகலைவனைப் பார்த்துக் கூறினார்.



தந்தையினால் இவ்வளவு பாராட்டப் பட்டு இருந்தும், ஏகலைவனின் மனம் நிறைவு அடையவில்லை.

வேகமாக ஓடும் முயலை ஒரே அம்பில் வீழ்த்தி விடும் திறனும், யானையின் துதிக் கையை ஒரே அம்பில் அறுத்து எறிந்துவிடும் வலிமையும் அவனுக்கு இருந்தது. ஆனாலும் நாகாஸ்திரம், அக்னியஸ்திரம், வருணாஸ்திரம், பிரம்மாஸ்திரம் என்று சொல்கிறார்களே அவை எல்லாம் தன் கைவரப் பெறவேண்டும் என்று ஏகலைவன் ஆசை கொண்டான்; அதைத் தன் தந்தையிடமும் வெளியிட்டான்.

“மகனே! அவையெல்லாம் அரசர்களின் விடயம். நமக்குத் தேவையில்லை. நாம் மனிதர்கள் யாரையும் கொல்ல விரும்பவில்லை. நாம் வேட்டையாடிப் பிழைப்பதற்கு நமக்குத் தெரிந்த இந்த வித்தையே போதும்” என்று இரண்யதனுசு மகனை அமைதிப்படுத்த முயன்றார்.

ஆனால் ஏகலைவனோ, “இல்லை அப்பா! காற்றை, மழையை, தீயை வரவழைக்கும் அஸ்திரங்கள் எல்லாம் உள்ளனவாம். ஒரே நேரத்தில் பலரை மயக்க வைக்கும் அஸ்திரங்கள் உள்ளனவாம். இன்னும் பல அற்புதங்களை எல்லாம் செய்வதற்கான அஸ்திரங்களும் உள்ளனவாம். அவற்றை எல்லாம் கற்றால் நமக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்குமே?” என்றான்.

அவ்வாறு கூறிய மகனை இரண்யதனுசு சிறிது குழப்பத்துடன் பார்த்தார்.

“மகனே! அவை எல்லாம் சூது வாது நிறைந்தவை. அவற்றைக் கை வரப் பெற்றுள்ள அரசர்கள் யாரும் அமைதியாக வாழமுடிகிறதா? நம் அமைதியான வாழ்விற்கு நாம் கற்றிருக்கும் வித்தைகளே போதும்” என்றார்.

இரண்யதனுசு கூறியதை ஏகலைவன் ஏற்கவில்லை.

“சில சமயங்களில் மழை பொய்த்துப் போகும்பொழுது தண்ணீர் இல்லாமல் எவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கிறது? அதேபோல், இந்த அரணிக் கட்டையைத் தேய்த்துத் தேய்த்து நெருப்பை உண்டாக்குவதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறதே? வருணஅஸ்திரம், அக்னி அஸ்திரம் போன்ற வித்தைகள் தெரிந்திருந்தால் வேலைகளை எல்லாம் எளிதாகச் செய்யமுடியுமே?” என்றான், ஏகலைவன்.

இவ்வாறு மன்னர்கள் பயன்படுத்துவதாகக் கூறப்படும் அஸ்திரங்களையெல்லாம் தான் கற்கவேண்டும் என்ற விருப்பத்தின் மிகுதியில் கூறிய மகனை இரண்யதனுசு இமைகொட்டாமல் பார்த்தார்.

“மகனே உன் வினாக்களுக்கு என்னால் விடையளிக்க முடியவில்லை. ஆனால் ஒன்றைச் சிந்தித்துப் பார். வயல் வெளியில் வாழும் மக்களும் மழை பொய்த்துப் போகும் காலத்தில் வேறு இடங்களை நாடிச் செல்கின்றனர். அப்போது அவர்களுடைய அரசர்கள் வருணாஸ்திரத்தையோ, அக்னி அஸ்திரத்தையோ பயன்படுத்தி அம் மக்கள் அங்கேயே தங்கி வாழ உதவி செய்வதில்லையே? அது மட்டுமல்லாமல் அம்மக்களும் எப்பொழுதும் அரணிக் கட்டையை கையில் வைத்துக்கொண்டுதானே அலைகிறார்கள்! யாரும் அக்னி அஸ்திரத்தைப் பயன்படுத்தி நெருப்பை உருவாக்கவில்லையே?” என்றார்.

இதைக் கேட்டவுடன் ஏகலைவனின் முகம் சுருங்கியது. இருந்தாலும் அஸ்திரங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசை மனத்திற்குள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டே இருந்தது. இதைப் புரிந்துகொண்ட பாசமுள்ள தந்தை, “நீ நகரத்தின் பக்கம் சென்று, நீ விரும்பும் அஸ்திர வித்தைகளைக் கற்று வா!” என்று மகனுக்கு அனுமதி அளித்தார்.

தந்தை அனுமதி கிடைத்ததும் ஏகலைவன் துணைக்கு ஒரு நண்பனை அழைத்துக்கொண்டு அஸ்தினாபுரம் நோக்கிப் பயணப்பட்டான். அஸ்தினாபுரத்தில் துரோணரைக் கண்டு, “தான் வேடர்களின் தலைவன் இரண்ய தனுசுவின் மகன் ஏகலைவன் என்றும், அவரை ஆசானாக வரித்துக்கொண்டு அஸ்திர வித்தைகளைக் கற்றுக்கொள்ள வந்திருப்பதாகவும் கூறிவிட்டு, அவ் வித்தைகளைக் கற்றுத் தருமாறு வணக்கத்துடன் வேண்டிக்கொண்டான்.

ஏகலைவனை ஏற இறங்கப் பார்த்த துரோணர், “வில் வித்தையை அரச குலத்தாரால்தான் கற்றுக்கொள்ள முடியும்” என்றும், ‘மற்றவர்களால் கற்றுக்கொள்ள முடியாது” என்றும் கூறினார்.

அதைக் கேட்ட ஏகலைவன், தன் தன் தந்தையிடம் வில் வித்தையைக் கற்றுக்கொண்டு இருப்பதாகவும், ஆனால் அக்னி அஸ்திரம், வருணாஸ்திரம், நாகாஸ்திரம், பிரம்ம அஸ்திரம் போன்ற அஸ்திரங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் வந்து இருப்பதாகவும், கூறியவுடன், சிறிது அதிர்ச்சியடைந்து ஏகலைவனை முறைத்துப் பார்த்த துரோணர், “சரி, நீ உன் தந்தையிடம் கற்ற வில் வித்தையைக் காட்டு” என்று கூறினார்.

உடனே, ஏகலைவன் தன் வில்லை எடுத்து, வானில் பறந்து சென்றுகொண்டிருந்த ஒற்றைக் கழுகைக் குறி பார்த்து அம்பை எய்தினான். அந்தக் கழுகின் கழுத்தில் அம்பு பட்டு கீழே விழுந்தது. துரோணர் பிரமித்துப் போனார். ஆனாலும், தன் குல தருமப்படி பிராமணர்கள், சத்திரியர்கள் தவிர, வேறு யாருக்கும் அஸ்திர வித்தைகள் கற்றுத் தருவதில்லை என்றும், ஏகலைவனின் வில்வித்தை ஆற்றல் ஒரு வேடனுக்குத் தேவையானதைவிட அதிகமாகவே இருப்பதாகவும், மேற்கொண்டு ஆசைப்பட வேண்டாம் என்றும் கூறினார்.

இதைக்கேட்ட ஏகலைவன், தாம் அவரை மனத்தளவில் ஆசானாக ஏற்றுக்கொண்டுவிட்டதாகவும், அவர் தன்னை மாணவனாக ஏற்றுக்கொண்டே ஆகவேண்டுமெனக் கெஞ்னான். ஆனால் துரோணர், தன் குல தருமப்படி அது முடியாது எனக் கண்டிப்புடன் கூறி அனுப்பிவிட்டார்.

ஏமாற்றத்துடன் வெளியில் வந்து தன் நண்பனிடம் நடந்ததைக் கூறினான், ஏகலைவன். அப்போது, நண்பன் கூறியது அவனுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. ஏகலைவன் துரோணரைச் சந்திக்கச் சென்றிருந்த வேளையில், அவனுடைய நண்பன் அங்குள்ள போர் வீரர்களுடன் பேசிச் சில செய்திகளைச் சேகரித்து வைத்திருந்தான்.

வருண அஸ்திரம், அக்னி அஸ்திரம், நாக அஸ்திரம், பிரம்ம அஸ்திரம் என்பதெல்லாம் வெறும் பெயர்களே யன்றி, அப் பெயர்களுக்கும், செயல்களுக்கும் தொடர்பு ஏதுமில்லை. வேடர்கள் மற்றும் சாதாரண மனிதர்கள் பயன்படுத்தும் அம்புகள் சாதாரண கொல்லர்களின் உலைக்களத்தில் செய்யப்படுகின்றன. ஆனால், அஸ்திரங்கள் எனப்படுபவை சில சிறப்பான உலைக் களங்களில் செய்யப்படுகின்றன. அவற்றை உருவாக்கும் பொழுது சில நச்சுக் குழைவுகளில் நனைத்து நனைத்து உருவாக்குவார்கள். அந்த அம்புகள் நனைக்கப்படும் நச்சுக் குழைவுகளின் தன்மையைப் பொறுத்து அவை எய்யப்பட்டவர்களின் மேல் அவற்றின் செயல்கள் இருக்கும். சில நச்சுக்குழைவுகள் ஒருவனைக் குறிப்பிட்ட நேரம் மயக்கத்தில் வைத்து இருக்கும். சில கை, கால்களை முடக்கிவிடும். சில உடலில் தாங்க முடியாத எரிச்சலை ஏற்படுத்தும். சில ஒரேயடியாகக் கொன்றுவிடும். இதுபோல் அம்புகளில் தோய்க்கப்பட்ட நச்சுக் குழைவுகளைப் பொறுத்துதான் அம்புகளின் வீரியம் இருக்கிறதே தவிர, நெருப்பை வரவழைக்கும், நீரை வரவழைக்கும், பாம்பை வரவழைக்கும் அஸ்திரங்கள் என்பதெல்லாம் இல்லை. மற்றவர்கள் சத்திரியர்களின் வலிமையைப் பற்றிய அச்ச உணர்வு பெறவேண்டும் என்பதற்காகத்தான் அதுபோன்ற கட்டுக்கதைகள் கட்டப்பட்டு உலாவவிடப்பட்டுள்ளன என்பதே அச் செய்தி.

இச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் அந்த நச்சுக் குழைவுகள் பற்றியும், அவற்றைத் தோய்த்து அம்புகளை உருவாக்குவது பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் ஏகலைவனுக்கு உண்டானது.

அங்கிருந்த போர் வீரர்கள், கொல்லர்கள், நச்சுக் குழைவைச் செய்யும் மருத்துவர்கள் ஆகியோரைப் பார்த்து அவ் விவரங்களைத் தெரிந்துகொண்டு வருவதாகக் கூறி நண்பனை அனுப்பிவிட்டான். ஆனால், அவனுக்கு அவ் விவரங்கள் எளிதில் கிடைக்கவில்லை. இருப்பினும் அவனுடைய விடாமுயற்சியின் காரணமாக ஒரு கொல்லன் சில அஸ்திரங்களைச் செய்து கொடுத்தான். ஆனால், அவனால் நச்சுக் குழைவுகள் செய்வதெப்படி என சொல்லிக்கொடுக்க முடியவில்லை.

அதையும் தெரிந்துகொள்ள வேண்டுமென அலைந்து கொண்டிருந்த நிலையில், ஒருநாள், ஒரு நாய் அவன் தங்கியிருந்த இடத்திற்கருகில் வந்து ஓயாமல் குரைத்துக் கொண்டிருந்தது. அதைக் கேட்கச் சகிக்காத ஏகலைவன், உடல் இயக்கத்தை அரைகுறையாக முடக்கும் ஒரு அஸ்திரத்தை எடுத்து அந்த நாயின்மீது எய்தான். அடிபட்ட நாய் குரைத்துக் கொண்டே ஓடிவிட்டது.

மறுநாள் அரண்மனையிலிருந்து சில காவலாளர்கள் அந்த நாயுடன் வந்து, ஏகலைவனை அந்த நாயின் மேல் அஸ்திரம் எய்த ‘குற்றத்திற்காக’ அருச்சுனனிடம் அழைத்துச் சென்றார்கள். அப்பொழுதுதான் ஏகலைவனுக்கு அது அருச்சுனனுடைய நாய் என்று தெரிந்தது.

விசாரணையில் ஏகலைவன் உடல் இயக்கத்தைத் தளர்த்தும் அஸ்திரத்தை அந்த நாயின்மேல் எய்தது தெரிந்தது. அந்த அஸ்திரம் அவனுக்கு எப்படிக் கிடைத்தது என விசாரித்தபொழுது ஏகலைவன் பதிலேதும் சொல்லவில்லை. கோபமடைந்த அருச்சுனன், ஏகலைவனைக் கொல்லப்

போனான். ஆனால், தருமபுத்திரன் அவனைத் தடுத்து இவனைக் கொன்றுவிட்டால் இந்த அஸ்திரம் இவனுக்கு எப்படிக் கிடைத்தது என்று தெரிந்துகொள்ள முடியாது. ஆகவே, இவனை என்ன செய்வதென குருதேவர் துரோண ரிடம் கேட்போம் என்று அவரிடம் அழைத்துச் சென்றனர்.

ஏகலைவனைப் பார்த்ததும், இவன் தன்னிடம் அஸ்திரம் கற்க வந்தவன் என்பதைத் தெரிந்துகொண்டார் துரோணர். தான் எதையும் கற்றுத் தராமலேயே எப்படி இவன் அஸ் திரங்களைப் பெறமுடிந்தது என்று வியந்தார்.

ஆனால், எப்படி விசாரித்த போதிலும் ஏகலைவன் தனக்கு அஸ்திரமளித்த கொல்லனைக் காட்டிக்கொடுக்க வில்லை.

நெருப்பை, நீரை, பாம்பை வரவழைக்கும் அஸ்திரங்கள் எல்லாம் கட்டுக் கதைகள் என்பதை அவன் தெரிந்து கொண்டிருப்பது துரோணருக்குப் புரிந்தது. அந்த நச்சுக் குழைவுகள் செய்யும் வழிமுறை பற்றியும், அவற்றை வைத்து அஸ்திரங்களைச் செய்யும் வழிமுறைகளைப் பற்றியும் கற்றுக்கொள்ளவே அங்கு இருக்கிறான் என்பதும் தெரிந்தது. இதை அறிந்த துரோணர் மிகவும் ஆத்திரம் கொண்டார்.

அதை உணர்ந்த அருச்சுனன் அவனைக் கொன்று விடலாமா? என்று துரோணரிடம் கேட்டான்.

சிறிது நேரம் யோசித்த துரோணர் அவனைக் கொல்ல வேண்டாமென்றும், அவனது வலது கைக் கட்டைவிரலை வெட்டிவிடுமாறும் உத்தரவிட்டார்.

“தன்மீது விதிக்கப்பட்ட அந்தத் தண்டனைக்கு, தான் செய்த குற்றம் என்ன?” என்று கேட்ட ஏகலைவனிடம், அவன் வருணாசிரம முறையை மீறி சத்திரியர்களின் கல்வியைக் கற்க முனைந்தது குற்றமென்றும், அதற்கு மரண தண்டனையைத்தான் அளிக்கவேண்டும் என் றாலும், அவன்மீது கருணை கொண்டு உயிருடன் விடுவ தாகக் கூறினார், துரோணர். காவலர்கள் ஏகலைவனை இழுத்துக் கொண்டு சென்றுவிட்டனர்.

துரோணர் அளித்த தண்டனையில் மனநிறைவு அடை யாத அருச்சுனன், அவனை இமைக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அதைப்புரிந்து கொண்ட துரோணர், “அருச்சுனா! இவனைக் கொன்றுவிட்டால், அஸ்திரங்களைப் பற்றிய இரகசியத்தை யார் கொடுத்தது என்று நிரந்தரமாகத் தெரியாமல் போய்விடும். இவன் உயிரோடு இருந்தால் ஒரு வேளை அதைத் தெரிந்துகொள்ள முடியும். அப்பொழுது அவனுக்குத் தகுந்த தண்டனை வழங்கலாம். ஒருவேளை ஏகலைவன் அதை வெளியில் சொல்லாமலேயே இருந் தாலும் நமக்கு இழப்பு ஒன்றுமில்லை. இனி அவனால் எந்த வேலையையும் செய்யமுடியாது. அதுமட்டுமல்ல. வருணா சிரம முறையை மீறுவோர் என்ன கதி அடைவார்கள் என் பதற்கு உயிருள்ள சான்றாக இவன் இருப்பான். ஆகவே, உன் கோபத்தை விட்டொழி” என்று கூறினார். ●

# ‘தொண்ணூறு’ 90 அல்ல, 900 !

தமிழில் சில எண்களை உச்சரிப்பதில் பிழைகள் உள்ளன. அப்பிழைகள் திருத்தப்பட வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

70 என்ற எண்ணை ‘எழுபது’ என்று உச்சரிக்கிறோம். எழுபது என்ற சொல்லைப் பிரித்தால் ஏழு + பத்து என பிரிக்கிறோம். ஏழு பத்துகளைக் கொண்டது என்பது இதன் உள்ளடக்கம். அதேபோல், 80 என்ற எண்ணை ‘எண்பது’ என்று உச்சரிக்கிறோம். எண்பது என்ற சொல்லைப் பிரித்தால் எட்டு + பத்து எனப் பிரிக்கிறோம். எட்டு பத்து களைக் கொண்டது என்பது இதன் உள்ளடக்கம். இவ் வகையில், 90 என்ற எண்ணை தொண்டு + நூறு = தொண்ணூறு என்றுதான் பிரிக்க முடியும்.

(குறிப்பு : தொல்காப்பியத்துக்கு முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் எழுதியுள்ள விளக்கவுரை நூலில் பக்கம் 171-ல் “தொண்ணூறு. பழைய வடிவம் தொண்டு + பத்து = தொண்பது என்பது பாவாணர் கருத்து” என்ற விளக்கம் உள்ளது.)

பழந்தமிழில் 90 என்ற எண் ‘தொண்ணூறு’ என்று சொல்லப்படாமல் ‘தொண்பது’ என்றே சொல்லப்பட்டு வந்தது என்பதே அதன் விளக்கம். அத்துடன் ‘ஒன்பது’ என்ற சொல்லைக் குறிக்க ‘தொண்டு’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

90 என்ற எண்ணை தொண்டு + நூறு என்று பிரித்தால் அந்த எண்ணில் ஒன்பது நூறுகள் இருப்ப தாகப் பொருள். ஒரு நூறுகூடத் தன்னகத்தே கொண் டிராத ஒரு எண்ணை ஒன்பது நூறுகளைக் கொண்ட எண்ணாக ‘தொண்ணூறு’ என உச்சரிப்பது எவ்வளவு மோசமான பிழை என்பதை நாம் உணரவேண்டா?

இதுபோல 900 என்ற எண், தொண்டு + ஆயிரம், தொள் + ஆயிரம் ஆகி, தொள்ளாயிரம் என்று உச்சரிக் கிறோம். ஒரு ஆயிரத்தைக்கூட தன்னகத்தே கொண்டிராத ஓர் எண்ணை, ஒன்பது நூறுகளைக் கொண்ட எண்ணை, ஒன்பது ஆயிரம் கொண்ட எண்ணாகத் ‘தொள்ளாயிரம்’ என்று உச்சரிப்பதும் மிகப் பெரிய பிழையாகும். எனவே, 9-ஐ ‘தொண்டு’ என்றும், 90-ஐ ‘தொன்பது’ என்றும், 900-ஐ ‘தொண்ணூறு’ என்றும் உச்சரிப்பதே சரியாக இருக்கும்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் குடியரசு, விடுதலை இதழ்களில் பயன்படுத்திய ணை, லை, னை போன்ற எழுத்துகளை அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தியதுபோல இந்த மாற்றத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவர முயலுவோம்.

**- இர. முருகேசன்**

# பெரியார்
# ஒரு திராவிடப் பல்கலைக்கழகம்!

● பேராசிரியர் இரா. சோதிவாணன்



தினமணியில் (9.10.2020, வெள்ளிக்கிழமை) கோதை சோதி லட்சுமி 'ஆதி சங்கரரும் திராவிடமும்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை வெளிவந்தது. அதைப் படித்த பின்னர் தான் 'பூசி மெழுகுதல்' என்பதற்கு எனக்குப் பொருள் விளங்கியது. ஆதிசங்கரரை - அவரின் பெருமையைப் பக்கம் பக்கமாக எழுதி வீதி வீதியாக - ஒலி பெருக்கி வழியாகக் குரல் வலிமையால் தொண்டை கிழியக் கத்திப் பரப்புரை செய்வதற்கு யாரும் தடை மடை இடமாட்டார். ஆனால், அங்கு திராவிடரை உடனழைத்துக் கொச்சைப்படுத்தும் போது திராவிடச் செருக்கு, ஆரியத் தருக்கைக் கண்டு வாய் பொத்திச் சும்மா இருக்குமா? என்ன?

ஆரியம் செவி பொத்திக் கொள்ளும் அளவுக்கு ஆரியப் புராணப் புளுகுகளையும் புரட்டுகளையும் எதிர் மொழியாகத் திராவிடம் கொடுக்காமலா இருக்கும்?

"பாரத நாட்டில் ஆன்மிகம் சார்ந்த சிந்தனைகளை முன்வைத்தவர்களுள் 'சகத்குரு' என்று கொண்டாடப் படும் ஆதிசங்கரர் முக்கியமானவர்; 'அத்வைத'க் கோட்பாட்டை நிலைநிறுத்தியவர். இன்றளவும் அவரது தத்துவத்தை முறித்து மாற்றுச் சிந்தனையை நிறுவ எவராலும் இயலவில்லை" என்று கட்டுரையாளர் கூறுகிறார்.

**ஆதிசங்கரர் கண்ட 'அத்துவைத'க் கோட்பாடு என்பது என்ன?**

அவர் உபநிடதங்களில் இருவகை நிலைகளைக் கண்டார். ஒன்று கீழ்நிலை; மற்றொன்று மேல் நிலை. கீழ் நிலையில் இந்து சமய நம்பிக்கையை அவரால் காண முடிந்தது. மேல்நிலையில் எதிலும் அவர் உண்மையை - எதார்த்தத்தைக் காணவில்லை. இறப்புக்குப் பிறகு ஆத்மா பரமாத்மாவுடன் இணைந்துவிடுகிறது; வேறாக இருப்ப தில்லை என்பது அவரது நிலைப்பாடு. இது அவரின் சைவச் சமயத்துக் கோட்பாடு. வைணவச் சமயத்து யதிராச இராமானுசர், சங்கரரின் கோட்பாட்டிலிருந்து வேறு பட்டார். பரமாத்மா என ஒன்று இருந்தபோதிலும், தனிப் பட்ட ஆத்மாக்களும் பொருளும் உண்மையானவையே. அவை பரமாத்துமாவுடன் இணைவது என்பதில்லை. ஆனால், அவை தொடர்ந்து இன்பமயமான நிலையில் உள்ளன என்பது இராமானுசரின் நிலைப்பாடு. இந்த நிலையை அடைய இறைவழிபாடு செய்யவேண்டும்; கடவுளிடம் நம்பிக்கை வேண்டும் என்றார் அவர்.

இது 'விசிட்டாத்துவைதம்' ஆகும்.

இத்தகைய இரு தத்துவ வாதங்களுமே மக்களைப் பெருமளவில் கவர்ந்தன என்று கற்பனை செய்யக் கூட முடியாது என்று இந்திய சமூகவியல் ஆய்வாளர் டி.டி. கோசாம்பி, தம் 'மாயையும் எதார்த்தமும்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

"அன்றைய ஆதிசங்கரரின் வாழ்வும் கோட்பாடும் உண்மையில் இன்றைய திராவிடக் கோட்பாட்டுக்கு எதிர்நிலை கொண்டது" என்கிறார் கட்டுரையாளர். இது தன்னையும் அறியாமல் கட்டுரையாளர் உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

சங்கரர், "இறந்த பிறகு ஆத்துமா பரமாத்துமாவில் இணையும் என்னும் 'அத்துவைத' சித்தாந்தத்தைப் பரப்பியவர் ஆவார். அது சரி. இறந்த பிறகு ஆத்துமா பரமாத்துமாவில் கலந்தால் என்ன? கலக்காவிட்டால் என்ன? விண்டவர் கண்டிலர்; கண்டவர் விண்டிலர் என்பது தானே ஒரு கருத்தாக்கமாக இங்கே நிலவுகிறது.

மனிதன் உயிரோடு இருக்கும்போதே இன்னொரு மனிதனோடு மனத்தால் - மானுடத்தால் கலந்து பழகிக் குமுகத்தில் பொதுமையை - சமநிலையைக் கூட்டுவித்தால், மண்ணில் இங்கேயே நல்லவண்ணம் வாழலாம் என்பதுதான் பெரியாரின் - திராவிடத்தின் பகுத்தறிவுக் கோட்பாடு. இஃது எதிர்நிலைச் சித்தாந்தமா? இதுதானே மானுடத்தின் உயர்நிலை - உயிர்நிலைச் சித்தாந்தம். கட்டுரையாளர் இதைக் கொள்வாராக.

"சங்கரரைச் 'சகத்குரு' என்று பெருமையாக இந்த வையகமே கொண்டாடுகிறது. இன்றைய இந்து சமயத்தின் மறுமலர்ச்சியை நிலைநிறுத்தியவர். பாரதத்தின் நான்கு திசைகளிலும் ஐந்து பீடங்களை நிறுவியவர்" என்று கூறுகிறார் கட்டுரையாளர்.

வேத வைதீக மதம் (இந்து மதம்) பிராமணர்களுக்கு மட்டும் ‘உயர்ந்தவர்கள்’ என்ற மணிமுடியைத் தலையில் சூட்டிவிட்டு ‘உழைப்பின் முதல்வர்களுக்கு’ இழிந்தவர்கள் ‘சூத்திரர்கள்’ என்ற பாறாங்கல்லைத் தலையில் சுமத்தி ஆயிரம் ஆண்டுகளாக - ஈராயிரம் ஆண்டுகளாக வேடிக்கை பார்த்து வந்தது. வருணம், சாதி என்ற வேறுபாட்டால் மக்கள் பிறப்பை இழிவுபடுத்தி ‘விதி’ என்ற பள்ளத்தில் வீழ்த்தி மேல்தட்டுப் பார்ப்பனர்களைக் கொழுக்க வைத்தது.

இருபதாம் நூற்றாண்டில் அக் கொடுமையைக் கண்டு விழித்தெழுந்தது ஒரு வேங்கை! கொதித்தெழுந்து பாய்ந்தது ஓர் அரிமா! கடவுளின் பேரால், மதத்தின் பேரால், புராணங்களின் பேரால் இக் குமுகத்தில் இவ்வளவு காலம் பாய்ந்துவந்த முடைநாற்றக் கழிசடைகளை அடித்துப் போக வந்து ஆரவாரித்தது ஒரு பகுத்தறிவு வெள்ளம்! இப் பிறப்பிலேயே ‘மனுவை’ அகற்றி மானுட அறத்தை நிலைநிறுத்தி வென்றது, ஒரு தன்மானத் தகரி (பீரங்கி).

‘திராவிட(ர்) கழகம்’ நிறுவி, ‘குடியரசு’, ‘விடுதலை’, ‘உண்மை’ இதழ்களை நடத்திக் குமுகத்தில் ஒரு புது மலர்ச்சியை - புரட்சியை உருவாக்கிக் கொள்கைகளை முழக்கியது ஓர் இனமான முரசு.

ஈரோடு வெ. இராமசாமி என்னும் அவர், மகளிர் மாநாட்டில் ‘பெரியார்’ என்று பாராட்டப் பெற்று பட்டம் வழங்கப் பெற்றார். அன்றும் இன்றும் என்றும் ‘பெரியார்’ என்றால் அவர் ஒருவரையே சுட்டும். ‘பெரியார்’ என்பதே அவர் இயற்பெயராக - சிறப்புப் பெயராக அமைந்து விட்டதை அறிவுலகம் அறிந்து இறும்பூது எய்துகிறது. கட்டுரையாளர் மட்டும் இதனை அறியாமலா போவார்? நெஞ்சில் நிறுத்திக்கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

“ஆதிசங்கரரே ‘திராவிடம்’ என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார். ரிக் வேதம் தொடங்கிப் பல இடங்களில் ‘திராவிடம்’ என்ற சொல் இருக்கிறது. காசுமீரத்தின் கல்கணர் எழுதிய ‘இராசதரங்கிணி’ என்ற சமசுகிருத வரலாற்று நூலில் திராவிடம் என்பது எது? திராவிடர் என்பவர் யார்? போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன. அதனால் ‘திராவிடம்’ என்பது சமசுகிருதச் சொல் என்று திண்ணமாகக் கூறலாம்” எனக் கட்டுரை யாளர் கூறுகிறார்.

அதற்கு விடையாக, அறிஞர் இரணியன் கூறியதை இங்கே குறிப்பிடுகிறேன். “திராவிடம் என்பதைத் தமிழ் என்பதற்கு முரணான சொல்லாகக் காட்டவே ஆரியப் பார்ப்பனியம் முயல்கிறது. ‘தமிழ்’ என்னும் மொழியைக் குறித்த சொல்தான் ‘திராவிடம்’. இச் சொல் ஒரு காலத்தில் வடநூலாரால் பயன்படுத்தப்பட்டது. இன்று, தமிழ் இன மொழிகளைக் குறிக்கவும் தமிழ் வழிக் கலைகள், தமிழ் வழிப் பண்பாடு, தமிழ் வழி மருத்துவம் போன்றவற்றைக் குறிக்கவும் ஒரு குறியீட்டுச் சொல்லாக உலகளாவிய அறிஞர்கள், சிந்தனையாளர்கள் இதனைக் கையாளு கிறார்கள். எனவே, தூய தமிழ் சார்ந்த ஒரு நிலையைக் குறிப்பிடுவதற்கே அறிவுலகம் ‘திராவிடம்’ என்னும் சொல்லைக் கையாளுகிறது என்பது தெளிந்த உண்மை!” என்று அறிஞர் இரணியன் பெருமிதமாகக் குறிப்பிடுகிறார்.

‘ஆரியம்’ என்ற சொல்லைக்கூடத் தமிழ்வழிப் பிறந்தது என்று நான் ஆய்ந்து கூறுகிறேன்.

‘ஆர்’ + இயம் = ஆரியம். ‘ஆர்’ என்னும் பகுதியின் அடியாக = ஆர்வம், ஆர்ப்பு, ஆரவாரம், ஆர்ப்பாட்டம் என்னும் சொற்கள் இலக்கிய வழக்கில் - உலக வழக்கில் வழங்கப்படுகின்றன. ‘ஆர்’ என்பதற்கு நிறைய, அதிகம் என்று பொருள் கூறலாம்.

‘ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்’ என்பது குறுந் தொகையில் வரும் செய்யுள் அடி. “ஆர்ப்பினும் பெரிதே” (ஆரவாரத்தினும் பெரிதே) எனும் செய்யுள் அடியையும் காண்க. ‘ஆர்வம்’ என்னும் உலக வழக்கின் பொருளை யாரும் சொல்லாமலே அறிவோம். அதிக வர்க்க ஒலி அமைப்பை உடைய மொழி ‘ஆரியம்’ (சமசுகிருதம்) என்று வழங்கப்பட்டது என்பதற்கும் வழியுள்ளது.

பில்கணன் என்பவர் யார்? காசுமீரத்துப் பார்ப்பனர். அவர்கள் (பார்ப்பனர்கள்) உண்மை வரலாற்றைத் திரித்து எழுதும் கரவு மனம் உடையவர்கள் என்பதை அறிஞர் உலகம் நன்கு அறியும். சான்றுக்குச் சில நிகழ்வுகளை இங்கே சுட்ட விரும்புகிறேன்.

“அசோகன் ஓர் இந்து அரசன். இந்து தருமத்தை நாட்டில் பரப்பியவன். அவன் சிவனை வழிபாட்டான்” என்று பார்ப்பனர்கள் உண்மைக்குப் புறம்பான செய்தியை வலியுறுத்தக் காசுமீரத்துப் பார்ப்பனர் பில்கணன் எழுதி வைத்த ‘இராசதரங்கிணி’ என்னும் நூலினை ஆதாரமாகக் காட்டுகின்றார்கள்.

அப்படியே இருக்கட்டும். அதன்பிறகு அசோகன் உண்மையறிந்து மனம் மாறிப் பௌத்த மதத்தைப் பின் பற்றிப் புத்தரின் கொள்கைகளை நாடெங்கும், அயல் நாடெங்கும் பெருமளவில் பரப்பினான் என்று சொல்ல முடியாதோ?

அவனுக்கு முன்னோன் சந்திர குப்தன், சாணக்கியனின் வைதிகச் சமயத்தைச் சார்ந் திருந்தான். பின்னர், பத்திரபாகு முனிவரைப் பின்பற்றிச் சமண சமயத்தைச் சார்ந்து, முடி துறந்து தம் குருவுடன் மைசூருக்கு அருகிலுள்ள சிரவண பெலகோலாவில் வந்து தங்கினான். பத்திரபாகு முனிவர் தம் சீடர்களுடன் பட்டினி கிடந்து ‘சல்லேகணம்’ என்ற முறையில் உயிர்துறந்தார். சந்திரகுப்த மவுரியனும் அவ்வாறே பட்டினி நோன்பு கொண்டு உயிர் நீத்தான் என்று ‘அக்கினி புராணம்’ கூறுகிறது.

“நூற்றுக்கணக்கான பவுத்த நூல்களும், சாசனங்களும், கல்வெட்டுகள், வெளிநாட்டவர்கள் ஆதாரங்கள் ஆகி யவையும் அசோகனைப் பவுத்தன் என நிலைநாட்டி யிருக்க, பில்கணப் பார்ப்பனரின் நூலை வைத்து, ‘சிவப் பற்றாளன்’ என்று கூறும் இப் பார்ப்பனர்களிடம் என்ன நேர்மையை எதிர்பார்க்க முடியும்?” என்று புலவர் கோ.

இமயவரம்பன் தன் 'பார்ப்பனர்கள் சூழ்ச்சியும் மன்னர்கள் வீழ்ச்சியும்' என்ற நூலில் இவைபோன்று பல நிகழ்ச்சி களை விரித்துரைத்திருக்கிறார்.

கௌதம புத்தரையே 'திருமாலின் ஒன்பதாவது அவதாரம்' என்று புனைந்து மயக்கிய பிராமணர்கள் வேறு எவையெல்லாம் - எவ்வாறெல்லாம் புனைந்திருப்பார்கள் என்பதை அனைவரும் அறிக.

"ஆதிசங்கரர் தம்மைத் 'திராவிட சிசு' என்று பெருமை யாகக் கூறிக்கொள்கிறார். அவர் இந்தச் சொல்லால் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டது நிலவியல் அடிப்படை யில்தான்; தென்பகுதியைச் சேர்ந்தவர் என்ற பொருளில் தான்" என்று கட்டுரையாளர் குறிப்பிடுகிறார்.

அவர் (சங்கரர்) இந்தியாவின் வடபகுதியான ஆரிய வர்த்தத்தில்தான் வாழ்நாளின் பெரும்பகுதியைத் தம் அத்துவைதக் கொள்கையை நிலைநாட்டவும் வாதங்கள் புரியவும் செலவிட்டு வந்துள்ளார். அப்படியிருக்க, 'ஆரிய சிசு' என்று தம்மை அழைத்துக் கொள்ளாமல் 'திராவிட சிசு' என்று ஏன் குறிப்பிட்டுக்கொண்டார்? தாம் பிறந்த திராவிடப் பகுதிக்குப் பெருமை சேர்ப்பதற்குத் தான்; தம் தாய்நாட்டுப் பற்றைக் காட்டுவதற்காகத்தான்.

பிராமணரான, அசுவகோஷ் புத்த மதத்தைத் தழுவி, பௌத்த மடத்தில் வந்து தங்கி, பல நாடகங்களையும் பல காவியங்களையும் படைத்தார். சாரிபுத்திர பிரகரன், புத்தசரிதம், சவுந்தரியானந்தம் ஆகிய பல படைப்புகளில் 'சாகேதத்தைச் சேர்ந்த ஆர்ய சொர்ணாட்சியின் புதல்வன் அஸ்வகோஷ் எழுதியது' என்று தம் தாய்ப் பற்றுக்குப் பெருமை சேர்த்துள்ளார். அவ்வாறுதான் ஆதிசங்கரரும் திராவிடமாகிய தம் தாய்நாட்டுப் பற்றைக் காட்டுவதற்குத் 'திராவிட சிசு' என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்.

**திராவிடத்தில் பிறந்து, திராவிடத்தில் வாழ்ந்து, திராவிடரின் (தமிழரின்) எழுச்சிக்கும் பகுத்தறிவுக்கும் தன்மானத்துக்கும் முன்னேற்றத்துக்கும் தொண்ணூற்றைந்து அகவை வரை யில் ஒவ்வொரு நொடியும் பாடுபட்ட திராவிடப் பெரியார் பெருமைக்கு உரியர் அல்லரோ?**

"ஆதிசங்கரர் நாடெங்கும் நிலவி வந்த எழுபத்திரண்டு தத்துவங்களைத் தம் தருக்கத்தினால் வென்று தம் மெய் யியல் தத்துவமான அத்துவைதக் கோட்பாட்டை நிறுவி னார்" என்று சோதிலட்சுமி அக் கட்டுரையில் கூறுகிறார்.

சங்கரர் மற்றைய தத்துவங்களை வெல்வதற்கு என் னென்ன வழிமுறைகளைக் கையாண்டார் என மொத்த மாக அறியமுடியவில்லை. மீமாம்சக் கொள்கை சார்ந்த (கருமவாதம்) - நருமதை ஆற்றங்கரையில் மாகிஸ்மதி நகரத்தில் வாழ்ந்த ஒரு மிகப்பெரிய மீமாம்சகரை வெல்ல ஆதிசங்கரன் பின்பற்றிய ஒரு வழிமுறையை இங்கே குறிப்பிடுகிறேன்.

மீமாம்சகரான மண்டனமிச்ரரை வலிந்து வாதம் செய்ய அழைக்கிறார் சங்கரர். 21 நாட்கள் வாதம் நிகழ்கிறது. சங்கரர் அவ் வாதத்தில் வெல்லும் நிலை ஏற்படுகிறது. சங்கரர் வென்றுவிட்டால் மண்டனமிச்சரராகிய தன் கணவர், சங்கரர் பின்னே துறவியாகிச் சென்றுவிடுவார் என்று எண்ணிய மனைவி சரசவாணி, சங்கரரிடம் "நான் என் கணவரின் ஒரு பாதி ஆவேன். என்னையும் தாங்கள் வென்றால் அன்றோ முழு வெற்றி கொண்டீர் என்று கூற முடியும்" என்று கூறுகிறார்.

சங்கரரும் அதற்கு இசைகிறார். இருவருக்கும் வாதம் நிகழ்கிறது. ஒரு கட்டத்தில் சரசவாணி சங்கரரிடம் ஒரு வினா தொடுக்கிறார். "தங்களுக்கு உடலுறவு அடைவு உண்டா? அது எத்தகையது என்று தாங்கள் கூற வேண்டும்?" என்று கேட்கிறார்.

சங்கரர் அக் கேள்வியைச் செவியுற்றதும் மருண்டு விழிக்கிறார். "தங்களுக்கு ஒருமாதம் காலக்கெடு தருகிறேன். அப்போது விடைதெரிந்து வந்து கூறினால் போதும்" என்கிறார் சரசவாணி.

அதற்கு ஒப்புக்கொண்டு சங்கரர் ஒரு காட்டுக்கு வருகிறார். அக் காட்டில் ஒரு மன்னன் 'அமருகன்' இறந்து கிடக்கிறான். சங்கரருக்கு அப் பிணத்தைப் பார்த்ததும் ஒரு தகாத எண்ணம் தோன்றுகிறது. "மாண்டுவிட்ட அவ் வுடலில் கூடுவிட்டுக் கூடு பாய்தல் முறையில் (சித்து) தன் உயிரை அவ் வுடலில் புகுத்தி. உயிர்பெற்று மன்னனாக எழுந்து அரண்மனைக்குச் சென்று அரசியிடம் கலவி இன்பத்தில் ஈடுபட்டால், சரசவாணியின் கேள்விக்கு விடை கூறுவதற்கு வழியுண்டாகும்" என்று தம்முடன் வந்த சீடர் பத்மபாதரிடம் கூறுகிறார்.

அதற்கு அவர், "இது தகாத வழியாகாதோ? தங்களை இவ்வுலகம் திறனாய்வு (விமர்சனம்) செய்யுமே" என வினவுகிறார்.

"பத்மபாதரே! உடல் வேறு; ஆன்மா வேறு. சங்கரன் ஆன்மா என்றும் கறைபடாது. நான் திரும்பி வரும் வரை என்னுடலை மறைத்து வைத்துக் காக்க வேண்டும்" என்று சங்கரர் விடையிறுத்துத் தாம் எண்ணிய வண்ணம் தம் உயிரை அமருகன் உடலில் புகுத்தி, அரசனாக அரண் மனைக்குச் சென்று அரசியிடம் இன்பம் துய்க்கிறார்.

பின்னர், சங்கரர் சரசவாணியின் வினாவுக்கு விடை யிறுத்து வெல்கிறார். அவள் கணவன் துறவுபூண்டு சங்கரர் பின் செல்கிறார். (எழுத்தாளர் ஜெகதா - 'அருளாளர்களின் சிலிர்க்க வைக்கும் அற்புதங்கள்' நூல்).

இந் நிகழ்வை அறியக்கூடிய எவருக்கும் நெஞ்சில் எழக்கூடிய வினாக்கள் எவையாக இருக்கும்?

இந்தச் செயலை ஓர் அருளாளரின் அற்புதம் என்று ஏற்றுக்கொள்ளக்கூடுமா? இதுபோல் ஒரு துறவி செய்ய ஆகுமா? சட்டம் இன்று, உடல் வேறு; ஆன்மா வேறு என்பதை ஏற்றுக்கொள்ளுமா? இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டம் எத்தனைப் பிரிவுகளின்கீழ் துறவிமேல் வழக்குப் பதிவு செய்யும்? என்று கட்டுரையாளர் எண்ணுக.

இந்திரன், கௌதம முனிவரின் மனைவி அகலிகை யைத் துய்க்க விரும்பி, அம் முனிவரை வெளியே

அனுப்பிவிட்டு, அவரின் வடிவமெடுத்து வந்து, அவளின் கணவன் தான்தான் என்று நம்ப வைத்து அகலிகையிடம் உறவுகொண்டு இன்பம் துய்த்தான். உண்மையான கௌதம முனிவர் அங்கு வந்து நிகழ்ந்ததை அறிந்து, இந்திரனையும் அகலிகையையும் சபித்தார்.

"பெண்ணின் எவ்வுறுப்பை நச்சி வந்து கள்ளம் புரிந்தாயோ, அவ்வுறுப்பு உன் உடலெங்கும் தோன்றுக" என்று முனிவர் இந்திரனைச் சபித்தார்; 'கல்லாகுக' என்று அகலிகையைச் சபித்தார். இந்திரனுக்கு எவ்வளவு அருவருப்பான தண்டனை கிடைத்தது? பாருங்கள்.

ஆதிசங்கரர் சரசவாணியை வெல்வதற்குக் கையாண்ட வழிமுறையை - இழிமுறையைச் சிறிது எண்ணிப் பாருங்கள். இந்திரனுக்கும் இவருக்கும் என்ன வேறுபாடு?

'உடல் வேறு; ஆன்மா வேறு; எனவே, சங்கரன் ஆன்மா என்றும் கறைபடாது' என்று சங்கரர் தப்பித்துக் கொள்வது சரியாகுமா? சரசவாணியிடம் தான் ஒரு துறவி; அவளுடைய அந்தக் கேள்விக்கு தன்னால் விடைகூற இயலாது என்று உண்மையைக் கூறியிருந்தால் என்ன வாகும்? 'வாய்மையே வெல்லும்!' என்பது நிறுவப்பட் டிருக்கும். அதைவிடுத்து, வெல்வதற்காகக் கீழ்மைச் செயலைக் கைக்கொள்ள வேண்டிய தேவை என்ன இருக்கிறது. இதுதான் பெரியோர் பெருமையா? கொள்வார் கொள்க. தள்ளுவார் தள்ளுக.

வானுலகில் இன்பவாழ்வுக்கு வழிகாட்டும் ஆன்மீகத்தை விட மண்ணுலகில் மானுடத்தின் மான - மதிப்பான வாழ்வுக்குப் பல்துறைகளில் வழிகாட்டும் திராவிடப் பெரியாரியப் பல்கலைக்கழகம் எத்துணை மாண்புமிக்கது! மாயைக்கும், மயக்கத்துக்கும், பொய்மைக்கும், புனை வுக்கும் காரணமாகிய 'மதம்' மக்களுக்கு அபின் என்றார் காரல் மார்க்சு. அந்த மதம் கற்பிக்கும் கடவுளையே 'சுழியமாக்கினார்' பெரியார்.

"இந்தியாவில் கி.மு (600) ஆறுநூறிலேயே, முதன் முதலில், 'கடவுள் ஒருவர் இல்லை' என்று கூறியவர் மகாவீரர். மகாவீரருக்கு முன்னே 23 தீர்த்தங்கரர்கள் தோன்றியிருந்தார்கள். முதல் தீர்த்தங்கரரான (இ)ரிசப தேவர் காலத்திலேயே 'கடவுள் இல்லை' என்ற கருத்து நிலைநிறுத்தப்பட்டுவிட்டது" என்கிறார் முனைவர் க.ப. அறவாணன்.

இருபதாம் நூற்றாண்டில், "கடவுள் இல்லை; கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை. கடவுளைக் கற்பித் தவன் முட்டாள்; கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்; கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி. கடவுளை மற! மனிதனை நினை!" என்று காட்டமாகத் தாக்கியவர் பெரியார். கடவுள், மதம், வருணம், சாதியம், சடங்கியம் எல்லாம் கலந்த வைதீகப் பார்ப்பனியத்தை அதிரடியாகத் தாக்கி அச்சுறுத்திக் கீழ்மட்டத்திலிருந்த மக்களை மேல் மட்டத்திற்கு வரவழைக்கப் பகுத்தறிவை வலியுறுத்திக் குமுகப் போராளியாக வாழ்நாள் முற்றும் வாழ்ந்த பெரியார் இன்றும் என்றும் தேவையாகிறார்.

மகாவீரர், கௌதம புத்தர், வைகுண்டர் ஐயா, நாராயண குரு, கன்ஃபூசியசு, பெட்ரன் ரசல், மகாத்மா சோதிராவ் புலே ஆகியோரின் ஆளுமைகள் அனைத்தையும் தன் மாட்டுத் தான் ஒருவரின் மொத்த ஆளுமையாக ஆக்கிக் கொண்டு குமுகத்தின் பற்பல முன்னேற்றத்திற்குத் துணிந்து முனைந்து பாடுபட்ட ஒரே தலைவர் தந்தை பெரியார்தான்.

அவர் தோற்றுவித்த திராவிடர் இயக்கக் கோட்பாடுகள் கி.பி. இருபதாம் நூற்றாண்டின் புரட்சி ஏற்பாடு.

இந்தப் புரட்சி ஏற்பாடு இன்னும் எத்துணையோ காலத்துக்குத் தமிழகத்தில் புதுப்பரணி பாடிக்கொண்டே இருக்கும்.

கட்டுரையாளர் சோதிலட்சுமி, திராவிடத்தை இனிப் பேதமையால் சீண்டமாட்டார் என்று நம்புகிறோம். ●



## பெரியார் பெருந்தொண்டர்
## ஓவியர்
# சாமி கங்காதரன்
## 12-ஆம் ஆண்டு நினைவு நாள்

ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெரியாரை அவர் மேடையை விட்டு இறங்குவதற்குள், நேரிடையாக பார்த்துக் கொண்டே துல்லியமாக வரைந்து, பெரியாரிடமே காண்பித்து அப் படத்தில் அய்யாவிடம் கையெழுத்தும் வாங்கிப் பாராட்டுப் பெற்றவர் ஓவியர் சாமி. கங்காதரன்.

அதேபோல் 06.01.1974-இல் திருச்சியில் சிந்தனை யாளர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற தந்தை பெரி யாரின் முதலாமாண்டு நினைவு நாள் கூட்டத்திற்கு ஒரே இரவில் அய்யாவின் படத்தை நேர்த்தியாக வரைந்து அளித்தவர். தோழர் வே. ஆனைமுத்து தலைமையில் 1979-இல் டெல்லியில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழாவிற்கும் பெரியாரின் உருவப்படங்களை உயிரோட் டமாக வரைந்தவரும் இவரே.

தி.பொ.வேதாசலனார் முன்னிலையில் சரோசா அம்மையாரை வாழ்க்கைத் துணையராக ஏற்றுப் பெரு வாழ்வு வாழ்ந்து வந்த சாமி.கங்காதரன், வயது முதிர்ந்து, உடல் தளர்ந்த நிலையிலும் பெரியார் ஈ.வெ.ரா பிறந்த நாள் விழாக்கள், சிந்தனையாளர் கழகக் கூட்டம், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் கூட்டங்களில் கலந்துக்கொண்டு சிறப்பித்து நன்கொடை யும் வழங்கி வந்த பெருந்தகையாளர் ஆவார்.

01.12.2009-இல் மறைவுற்ற சாமி.கங்காதரன் அவர் களின் 12ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது வாழ்விணையர் சரோசா சாமி.கங்காதரன் மற்றும் அவரது குடும்பத்தினர் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக உருவா 1000/-அளித்தனர்.

செய்தி : **இரா. கலியபெருமாள்**, திருச்சி

# வென்றார் பெரியார்

பெரியாரா இவர்தாமா எனக்கேட்போர்க்குப்
பெரியாரே இவர்தாமே என்றுரைப்பீர்
நரியாரே எலியாரே எவரென்போர்க்கு
நறுக்கென்று பார்ப்பனர்கள் என்றுரைப்பீர்!
பெரியாரே எவ்வாறு பெரியார் என்றால்
பிராமணரின் தருப்பைப்புல் நம்மைமேய
விரித்தமாயம் வெங்காயம் என்றுகாட்டி
விழிப்பறிவை விதைத்தமையால் பெரியார் என்பீர்!

வறுமைக்கும் வளமைக்கும் முற்பிறப்பின்
வழிவந்த விதிப்பலனே எனப்பூணூலான்
சிறுமைக்குப் பொன்முலாமே பூசி ஏய்த்தான்
சிற்றெறும்பாய் உனைக்காலால் மிதித்து மாய்த்தான்!
குறுமைக்கும் கொடுமைக்கும் வேர்வை உப்பின்
குறியீடும் (உழைப்பு) மதிமுதலீடும் இல்லா
வெறுமைகளே காரணமாம் என்றே உன்றன்
விடியலுக்குப் புதுப்பாடம் பெரியார் சொன்னார்!

ஆரியம்தான் பெரியாரின் 'அடியால்' வீழ
'அழுத்தி வைத்த அடிவேர்கள்' தலைதூக்கிற்றே!
வீரியமாய் பகுத்தறிவு பாய்ந்ததாலே
விலக்கிய வீதிகளில் மானுடத்தின் கால்கள்!
மாரியொத்துப் பார்நலமே பெரியார் ஊட்ட
மறையெல்லாம் (வேதங்கள்) வினாக்குறியால்
வாயடைக்கும்!
காரியத்தால் (உழைப்பால்) குமுகத்தின் ஏற்றம் காட்டும்
கீழ்சாதி மேலெழுந்து வானம் ஏறும்!

'வெள்ளருவி' முகத்திருந்து மார்பில் வீழும்
விழியிரண்டில் அரிமாவின் நோக்குப் பாயும்
சொல்லறிவின் பேரருவி வாய்ப் பிறக்கும்
தூயதான செம்மேனி 'கருப்பு'டுத்தும்!
கொள்ளுங் கைத்தடி 'மனுவின்' தலைநொறுக்கும்
கோடிவகை எதிர்ப்புகளைக் கைகள் தடுக்கும்
கள்ளருவி போல் 'மதக் கள்' ஊற்றி ஏய்க்கும்
கயவரையே பெரியாரின் வாழ்வு தீய்க்கும்!

குமுகத்தின் அழுக்கெல்லாம் சேர்ந்தே இங்குக்
கொடுநாற்ற அரசியல் சாக்கடைகள் ஓடும்!
குமுகத்தின் அழுக்கெல்லாம் நீக்கினால்தான்
குறித்தமாற்றம் மலருமென அரசியல்தன்
கமுக்கத்தை ஒதுக்கி முழுநேர மக்கள்
குமுகத்தைச் சீர்திருத்தும் சிற்பி ஆனார்!
அமுக்கும் பல்துன்பம் ஏற்றுக்கொண்டும்
அஞ்சாத சிங்கமாகப் பெரியார் வென்றார்!

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

## ஆசிரியருக்கு மடல்கள்...

வணக்கம். "தமிழ்நாடு நம்நாடு; தன்னுரிமைபெற்ற தமிழ் நாடு அமைந்திட உயர்த்திப் பிடிப்போம் தமிழ்நாட்டுக் கொடியை!" தலையங்கம் அருமையிலும் அருமை. கொள்கைவேள் குத்தூசி குருசாமி பற்றிய டாக்டர் சோமாஸ் கந்தனின் எழுத்தோவியம் அதி அற்புதம். "தமிழ்நாடு தன் மண்ணை இழந்தது இந்தியத்தாலா? திராவிடத்தாலா?" எனும் வாலாசா வல்லவனின் கட்டுரையைப் புகழ்ந்துரைக்க வார்த்தைகள் இல்லை. இக் கட்டுரை இதழுக்கே மகுடமாக அமைந்திருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. சிறப்பான கட்டுரையை எழுதிய வாலாசா வல்லவனுக்கு என் பாராட்டுகள். "மண்டல் கமிஷன் : என்னை முட்டாள் என்று சொல்கிறாயா? கோபப்பட்டார் மொராஜி தேசாய்; மனந் திறக்கிறார் வே. ஆனைமுத்து" நேர்காணல் சிறப்பு. தோழர் திருச்சி கு.ம. சுப்பிரமணியம் மறைந்த செய்தியை இக் கட்டுரை மூலமே என்னால் அறிய முடிந்தது. தோழர் வே.ஆனைமுத்துவின் மார்க்சிய - பெரியாரிய - அம்பேத்கரிய கொள்கைகள் வெற்றிபெற வாழ்த்துகள்.

**- தங்க. சங்கரபாண்டியன்**, பொழிச்சலூர்



## குணபூசனம் அம்மையார் மறைந்தார்

சிந்தனையாளன் வாசகர், சிறந்த பெரியார் பற்றாளர், பாவலர் தமிழேந்தி மீது அளவற்ற அன்பு கொண்டவர் களாம்பாக்கம் செ. சின்னராசு. அன்னாரின் துணைவியார் குணபூசனம் அம்மையார் மறைவுற்றார். அம்மையாரை இழந்து வாடும் தோழர் செ.சின்னராசு, மகன்கள் இராசசேகர், பாசுகரன் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பில் மனங்கசிந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.


## திங்கள் நாள்காட்டி

**பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் திங்கள் (மாதம்) நாள்காட்டி வெளிவருகிறது. நேர்த்தியான வடிவமைப்பில் நம் தலைவர்களுடைய படங்களுடனும் அரிய செய்திகளுடனும் போற்றிப் பாதுகாக்கத் தக்க வகையில் குறைந்த விலையில் பொலிவோடு விரைவில் வெளிவர இருக்கிறது.**

பிற விளக்கங்களுக்கும், நாள்காட்டி பெறுவதற்கும் ...

**8608068002 / 8072907061 / 9443486285**


தமிழ் நாடு
ஏழு தமிழர் விடுதலைக்கு
ஆளுநர் எனும் கைத்தடியைக் கொண்டு தடை போடுகிறதா இந்திய அரசு..?
உழவர்களின் போர்ப்பரணி...

# தமிழ்நாடு

## (திங்களுக்கு இரு இதழ்)

உழைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின், விளிம்பு நிலை மக்களின் உண்மை நிலைகளையும், அவர்களின் உரிமைப் போராட்டங்களையும் உரிய ஒளி பாய்ச்சி ஊருக்கும் உலகுக்கும், ஆளும் அரசுகளுக்கும் உரத்து ஒலிக்க வேண்டியதே ஊடகங்களின் தலையாயப் பணி.

அதுவே ஊடக அறமுமாகும்.

ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியினைக் கொண்டு இன்றைய ஊடகங்களைப் பெருமளவில் பார்ப்பனர்களும் கார்ப்பரேட்டுகளும் கைக் கொண்டதால், அவை ஆரியப் பார்ப்பனிய - ஆளும் வர்க்கச் சார்புடையனவாகவும், இந்திய முதலாளிகளின் - வல்லரசிய முதலாளிகளின் ஊது குழல்களாகவுமே மாறிவிட்டன.

மொழி, நிலம், இனம், மக்கள் சார்ந்து நடைபெறும் உரிமைக் கிளர்ச்சிகளும் கோரிக்கைகளும் இக் கார்ப்பரேட்டு ஊடகங்களால் மடைமாற்றம் செய்யப்பட்டு மறைக்கப்படுகின்றன. இன்றைய நிலையில் இவற்றை உரத்துச் சொல்ல நாமும் எல்லாவகை ஊடகங்களையும் கைக்கொள்ள வேண்டியது அகத்தியமாகிறது.

அவ்வகையில், நம் தமிழ்நாட்டின் பெயர் தாங்கி, திங்களுக்கு இரு முறை எனும் முயற்சியோடு வெளி வந்துள்ள 'தமிழ்நாடு' இதழ் வெற்றிநடைபோட்டு விரைவில் நாளேடாக மாறி நம் உரிமைகளுக்காகப் போர்ப் பரணி பாடவேண்டும் என வாழ்த்துகிறோம்.

இதழ் நன்கொடை - தனி இதழ் உருவா **10/-**

இதழ் பெற

**தமிழ்நாடு**

**எண் 180, சமத்துவபுரம் நகர்,**
**கருமண்டபம், திருச்சிராப்பள்ளி - 620001.**
கைப்பேசி : **97108 75283 / 99425 46468**
மின்னஞ்சல் : **thamizhnadu2051@gmail.com**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - திசம்பர் 2020

| | | |
|---|---|---|
| **இரா.பச்சமலை** | சென்னை | 1250/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **ஆ. தேன்மொழி** | மாதவரம், சென்னை | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **ஆறு. கலைச்செல்வன்** | மஞ்சக்கொல்லை | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - திசம்பர் 2020

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ்,** எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு)
(ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457

Edited and Published by **V. ANAIMUTHU** on behalf of **Marxist Periyarist Communist Party**
No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-600 050.
and Printed by **SREE MUGAMBIKAI HI-TECH PRINTS** No.24, Oil Monger Street (Vaniyar Street),
Opp. Zam Bazaar Market, Triplicane, Chennai - 600 005. Ph : 044-28484457 and